# சீன நாடும் சின்ன நாடும்

முனைவர் மு.தமிழ்க்குடிமகன்



தமிழ்மண் பதிப்பகம்

# சீன நாடும்
# சின்ன நாடும்

**முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**

(ஆராய்ச்சியாளர்,
அனைத்துலகத் திராவிட மொழியியற் பள்ளி, திருவனந்தபுரம்)

தமிழ்மண் பதிப்பகம்

2 சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **சீன நாடும் சின்ன நாடும்** |
| ஆசிரியர் | : | **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** |
| முதற் பதிப்பு | : | 2003 |
| மொழி | : | தமிழ் |
| மொத்தப் பக்கங்கள் | : | 112 |
| நூல் அளவு | : | 1/8 தெம்மி |
| தாளின் தன்மை | : | 18.6 கி. மேப்லித்தோ தாள் |
| பொருள் | : | சீனப் பயண நூல் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளிகள் |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 50/- |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | பிரேம் |
| அச்சிட்டோர் | : | Prompt Offset Printers<br>34, திப்புத் தெரு,<br>சென்னை - 600 014 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | **கீழையியல் ஆய்வு நிறுவனக் கல்வி அறக்கட்டளை சார்ந்த தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு<br>தியாகராயர் நகர்<br>சென்னை - 600 017<br>தொலைபேசி : 24 33 90 30 |

முனைவர் வ.அய்.சுப்பிரமணியம்,
மதிப்புறு இயக்குநர்,
அனைத்துலகத் திராவிட மொழியியற் பள்ளி,
திருவனந்தபுரம்

# அணிந்துரை

முனைவர் தமிழ்க்குடிமகன் சீனாவில் தான் திரட்டிய செய்தி களையும் கல்விக் கூடங்களின் செயல்பாடுகளையும் எவ்வாறு பலதுறை அறிவுப் பெருக்கத்திற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் கற்கின்றனர் என்பதையும் விரிவாக இந்நூலில் கூறியுள்ளார்.

அவருடைய நடை எளிதாக, சுவையாக அமைந்துள்ளது. அவருடைய நோக்கமெல்லாம் தமிழ்மொழி எல்லாத் துறைகளிலும் எல்லா வகுப்புகளிலும் பாட மொழியாகப் பயன்பட வேண்டும் என்பது தான்.

இத்தகைய கருத்து எந்த மொழிக்கும் எதிரானது அன்று. குறிப்பாக ஆங்கிலம் முதலிய பல உலக இணைப்பு மொழிகளுக்கு எதிரானது அன்று; அகில இந்திய மொழியாக இன்றுள்ள ஆளும் கட்சி பி.ஜே.பி. வற்புறுத்தும் இந்திக்கும் எதிரானது அன்று. காலஞ் சென்ற அவினாசிலிங்கம் செட்டியாரும், சி. சுப்பிரமணியமும் தமிழ் நாட்டில் அமைச்சர் பதவி வகித்த போது தமிழ் வழிப்பாடம் நடத்தும் மொழியாக அரசாணை வழி நடைமுறைபடுத்தினர். ஆனால் தமிழின் மேன்மையைக் கூறி ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகள் தமிழின் பெருமையைப் பேசிப் பல நிறுவனங்களைத் தோற்று வித்தன. சிலைகள் நிறுவிப் பெருமைப்படுத்தின. ஆனால் தமிழ் மொழியை அறிவியலிலும், பொறியியலிலும், மருத்துவத்திலும் பயன்படுத்தும் அரசாணையைப் பிறப்பிக்கத் தயங்கின. அதற்குச் சில காரணங்களை அவர்கள் கூறாமல் இல்லை.

முதலில் தமிழ் வழிப் படிப்பு பிற நாட்டிற்குச் சென்று பொருளீட்டும் வாய்ப்பைக் குறைத்திடும்; போதிய பாட நூல்கள் அறிவியல், பொறியியல், மருத்துவம் முதலிய துறைகளில் உருவாக வில்லை; அன்றாடம் வெளியாகும் ஆய்வுக் கட்டுரைகளை மொழி பெயர்த்திடும் நிறுவனம் ஒன்றும் தமிழகத்தில் இல்லை; எனவே தமிழர்கள் பின் தங்கிவிடுவர் என்று அரசு அஞ்சுவதாகக் கூறினர்.

மக்கள் தொகையில் எத்தனை விழுக்காடு பிற நாடு செல்கின்றனர் என்பதை அரசு ஆராய்ந்திடவில்லை. இலட்சத்தில் ஒருவர்தான் பிற

நாடுகளுக்குக் குடியேறிப் பணி செய்கின்றனர். பல பாட நூல்களைச் சில நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. அவற்றைப் பயன்படுத்தும் மாணவர் களும் ஆசிரியர்களும் இல்லாததால் அவை அச்சேறாமல் முடங்கி விட்டன. மற்றொரு முக்கியமான காரணம் தாய்மொழியில் பொறியியல் மருத்துவம் முதலியவற்றைப் படித்தால், ஆய்வுப் புதுமைகளைக் காண இயலும். பொதுமக்களில் பல்லாயிரம் பேர் பொறியியல் மருத்துவ அறிவு பெற்றுப் பயனடையவும் வாய்ப்பு மிகக்கூடும். ஆங்கிலம் வழி அறிவியலையும் மருத்துவத்தையும் பயிலும் போது ஆங்கில மொழியைப் பிழையற எழுதுவதற்குப் பல மாணவர்கள் அல்லல்படுகின்றனர். புதுச் செய்திகளை அறிந்து அவர்களால் புதுமை காண இயலாது. தமிழர்கள் ஏறத்தாழ ஏழு கோடிப் பேர் வாழ்கின்றனர். எனினும் எத்தனை பேருக்கு அகில உலக மதிப்பும் நோபல் பரிசும் கிடைத்துள்ளன; ஆஸ்திரியா, நெதர்லாண்டு முதலிய சிறிய நாடுகள் கூட, தமது தாய்மொழியைப் பயன்படுத்துவதால் உலகத்தரத்தில் பல விற்பன்னர்களை, மாமேதை களைத் தோற்றுவித்துள்ளன. தமிழ்மொழி வழிப் படிப்பு ஆய்வு அறிஞர் களின் எண்ணிக்கையைப் பெருக்கும் போது மக்களும் பொறியியல் மருத்துவம் பற்றிய கருத்துக்களை அறிந்து வாழ்வில் வளமும் தன் திடமும் பெறுவர்.

ஆங்கில வழிக்கல்வியால் மிகவும் பின்தங்கி நிற்பவர்கள் ஆதி திராவிடர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் தான். தமிழகத்தில் உள்ள டியூட்டோரியல் காலேஜ் என்ற தனியார் கல்விக்கூடங்களில் சேர்ந்து படிக்கும் மாணவர்களில் பெரும்பாலோரும் இந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் தாம்.

மேற்கூறிய நன்மைகளை மக்கள் பெறுவது மட்டுமன்று; ஆங்கிலம், பிரெஞ்சு, இரஷ்யன் முதலிய உலக மொழிகளைப் பேசவும், எழுதவும், மொழிப் பள்ளிகளை அரசோ, தனியார்களோ நிறுவினால் பிறநாடு சென்று வேலை தேடுவதற்குத் தமிழில் படித்த மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். பிற நாடு செல்லும் வணிகர்களுக்கு என்று ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய புதிய மொழியில் இரண்டு மூன்று வாரங்களில் கற்றுத் தருவதற்குப் பல நிறுவனங்கள் மேலை நாட்டில் தோன்றியுள்ளதை நாம் அறிந்திட வேண்டும். பல மொழிகளைப் பேசவும், எழுதவும் தமிழர்கள் முயல வேண்டும். ஆனால் அவற்றில் குறிப்பாக ஆங்கிலத்தைப் பாடம் புகட்டு மொழியாக ஆக்குவது, மாணவர்களின் கற்கும் திறனைக் குறைப்பதாகும். 'மூளையும் மொழியும்' எவ்வாறு தொடர்பு உடையன என்று ஆய்ந்தவர்கள் நரம்பிலும் மூளையிலும் காணப்படும் நியூரான் என்ற நரம்புக் குமிழ்கள் தாய்மொழி வழிச் செய்திகளை எளிதில் சேகரித்துக் காக்கின்றன; அவற்றை ஒலி மாற்றம் செய்து மொழியாக்குகின்றன என்று இப்போது தெளிவாக்கியுள்ளனர். அவ்வாறு ஒலிமாற்றம் செய்வதில்,

தாய்மொழிப் படிப்பால் காலதாமதம் ஏற்படாது. பிழைகள் மிக குறைவாகக் காணப்படும். தாய் மொழி வழிப்படித்த மாணவர்கள் எளிதில் செய்திகளைச் சேகரித்துப் புதுமை காண இயலும் என்பதை உறுதி செய்துள்ளனர்.

ஆங்கிலம் முதலிய பிற மொழிகள் பாட மொழியாகப் பயன் படுத்துவதை மாற்ற முடியாதெனின் நாம் அனைவரும் வீட்டிலும் நாட்டிலும் ஆங்கிலத்தையே பேச முற்படுவோம். தமிழ் முதலிய இந்திய மொழிகள் இலத்தீன், சமஸ்கிருதம் போன்று இலக்கிய மொழியாக மட்டும் இந்நாட்டில் தொடரட்டும்.

தென் ஆப்பிரிக்காவில் தமிழர்கள் பெரும்பாலோரும் தாய் மொழியை மறந்து விட்டனர். அவர்கள் பதவி உயர்வு, அதனால் பொருள் குவிக்கும் மனநிலை, பண்பாட்டில் நேர்ந்துள்ள மாற்றங்கள் முதலிய வற்றை எம்.வி.கிருஷ்ணசாமி பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனத்தின் சார்பில் அங்குச் சென்று சில மாதங்கள் தங்கி ஆராய்ந்து தனது அறிக்கையை உருவாக்கி உள்ளார். அது வெளியாகி உள்ளது. பொதுமக்கள் பொறியியல் மருத்துவ அறிவைப் பெற வேண்டுமாயின் எல்லா நிலையிலும் எல்லாப் பாடங்களும் தாய்மொழித் தமிழில் தான் கற்பிக்க வேண்டும். பிற மொழிகளை நாம் பேசவும் எழுதவும் தேவைக் கேற்பக் கற்றுக் கொள்வோம். இல்லையேல் தமிழ் வளர்ச்சி தளர்ந்துவிடும். இன்பமூட்டும் இலக்கிய மொழியாக மட்டும் தொடரும். உயிரோட்டமும், புதுமையாக்கமும், வளமும் அதற்குக் கிடைப்பது அரிது.

முனைவர் தமிழ்க்குடிமகன் தமிழின் வருங்கால விளைவுகளை நன்கு உணர்ந்தவர் என்று அவருடைய அறிக்கையைப் படிப்பவர்கள் உணர்ந்து செயல்படுவர். தமிழுக்கு எது நல்லது என்று கூறுகிறோமோ அது ஏனைய இந்திய மொழிகளுக்கும் பொருந்தும். கிராமப்புற மக்கள் இம்மாற்றத்தால் வளம் பெறுவர். பல மாமேதைகள் இந்தியாவில் உருவாவர்.

தமிழ்க்குடிமகனுடைய இந்த அறிக்கை பாராட்டத்தக்கது. அந்த அறிக்கையோடு நில்லாது அவற்றை விரிவுபடுத்தி ஒரு நூலாகவே தந்திருப்பது. அனைவரையும் ஈர்ப்பதாகும். அந்த வகையில் பலரது மனங்களில் இந்நூல் கிளர்ச்சியை உண்டாக்கும் என்பது திண்ணம்.

மு. பொன்னவைக்கோ
இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

# அணிந்துரை

மாந்தர்களின் இனம் அவரவர் பேசும் மொழியால் தமிழர் எனவும், சீனர் எனவும் உருசியர் எனவும் இனங்காணப் படுகின்றது. ஒரு மொழி உள்ளவரை தான் அந்த இனம் நிலைக்கின்றது. மொழி வழக்கொழிந்தால் அந்த மொழிக்குரிய இனமும் காணாமற் போய்விடுகின்றது. கிரீக், இலத்தீன் போன்ற மொழிகள் இன்று வழக்கில் இல்லை; அந்த மொழிகள் பேசிய இனங்களும் இன்று காணாமற் போய்விட்டன. இவ்வாறு மறைந்த மொழிகளும் இனங்களும் ஏராளம். அவ்வாறு வழக்கொழிந்த மொழிதான் எபிரேயம் (Hebrew). ஆனால், இல்லாமல் போன மொழி, இன்று துளிர்த்துத் தழைத்து, இசுரேல் நாட்டின் ஆட்சிமொழியாக, கல்விமொழியாக மக்கள் மொழியாக மலர்ந்து செழித்து வளர்ந்துள்ளது. இது எப்படி? இது அம்மொழிக்குரிய மக்கள் தம் மொழி மீது கொண்டிருந்த அளப்பரிய பற்றையும் ஆழ்ந்த நம்பிக்கையையும், பேரின்பப் பிடிப்பையும் பிரிக்கவொணா பிணைப்பையும் அல்லவா காட்டுகின்றது. அப்படியானால் உலகில் மொழிகள் மறைவதேன்? ஒரு மொழி ஆவதற்கும் அழிவதற்கும் நிறைய கரணியங்கள் உள்ளன.

ஒரு மொழி அந்நாட்டின் ஆட்சிமொழியாக இல்லாமை; அம் மொழி நாட்டுமக்களின் கல்விமொழியாக இல்லாமை; அம்மொழி மக்களின் செயல் மொழியாக இல்லாமை; அம்மொழி அந்நாட்டின் வணிக மொழியாக இல்லாமை; தாய்மொழிக் கல்வி மீது நாட்டம் இன்மை; அம்மொழி பேசும் மக்கள் தம்மொழி மீது பற்றில்லா திருத்தல்; தம்மொழி தவிர்த்துப் பிற மொழியில் பேசுவதைப் பெருமையாகக் கொள்ளல்; தம் குழந்தைகளுக்கும் தனது படைப்புகளுக்கும் பிறமொழிப் பெயரிட்டு மகிழ்தல்; மழலைப் பருவத்திலேயே பிறமொழிக் கல்வியில் குழந்தை களை ஈடுபடுத்துதல்; பிற மொழிக் கல்வியைப் பெருமையாகக் கொள்ளல்; தாய்மொழிக் கல்வியே சிந்தனை ஆற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்க வல்லது என்ற உண்மையை அறியாமை; தம் மொழி இன்றேல் தம் இனம் இல்லை என்ற நிலைமையை உணராமை; தம்மொழியின் இலக்கிய உயர்வறியாமை; தன்மொழி உணர்வின்மை; தன் பண்பாட்டுச் சிறப்பறியாமை போன்ற பல கரணியங்களால் ஒரு மொழி வழக்கொழிந்து மறைந்து விடுகின்றது.

தமிழ்மொழி, இயற்கை மொழியாக பழமை மிக்கதாக, செம்மொழி யாக, சொல்வளம் நிறைந்ததாக, இலக்கிய வளம் கொண்டதாக, வாழ்வின் வழிநடத்தும் நெறி மொழியாக, பிற மொழிகளுக்கு வளம் சேர்க்க வல்ல கருமொழியாக இருந்தும், இந்தத் தமிழ் மண்ணில் மேற்கூறிய நிலைமைகள் பலவும் நிலவி வருகின்றன.

தமிழன் தன்னை இழந்து வருகின்றான், ஆங்கிலமொழி அவனை ஆழமாக ஆட்கொண்டு விட்டது. அவன் தன் மரபு தந்த சிந்தனை ஆற்றலையும் படைப்பாற்றலையும் சீரழித்துக் கொள்ளுகின்றான். தமிழன் தன் விழுமியங்களை வீசி எறியத் தொடங்கிவிட்டான். பேச்சில் தமிழில்லை; பெயரில் தமிழில்லை; உணர்வில் தமிழில்லை; உழைப்பில் தமிழில்லை; பிழைப்பில் தமிழில்லை; பிதற்றலிலும் தமிழில்லை, தமிழன் எங்கே சென்று கொண்டிருக்கின்றான் என்ற ஏக்கம் ஆன்ற தமிழறிஞர் களைப் பெரிதும் வாட்டி வருகின்றது. நிலை கெட்டுத் திக்குத் தெரியாமல் திசைமாறிச் செல்லும் தமிழனை நல்வழிப்படுத்துவது எப்படி? என்ற சிந்தனையில் சிக்குண்டவர் தான் திராவிட மொழியியற் பள்ளி (International School of Dravidian Linguistics)யின் நிறுவன இயக்குநர் முனைவர் வ.அய்.சுப்பிரமணியன் அவர்கள். அவர் இசுரேலைப் பார்த்தார்; சீனாவைப் பார்த்தார்; சப்பானைப் பார்த்தார்; உலக நாடுகள் பலவற்றையும் பார்த்தார். இந்நாடுகள் தங்கள் மொழியில் செயல்பட்டு பொருளாதாரத்தில் நன்கு வளர்ந்துள்ளனவே, இந்நாடுகளின் நிலைமையைப் படம் பிடித்துக் காட்டினால் தமிழன் உணர மாட்டானா என்று எண்ணினார். எனவே தான், தமிழன்,

*அக்கம் பக்கம் பார்க்கட்டும்*
*அயலார் கூற்றைக் கேட்கட்டும்*
*அண்டை நாட்டு நடப்புகளை*
*அறிந்தே சிந்தை தெளியட்டும்.*

என்று ஒரு திட்டம் தீட்டினார். அந்தத் திட்டத்தின் விளைவே இந்த "சீன நாடும் சின்ன நாடும்" என்ற படைப்பு.

வழக்கொழிந்திருந்த எபிரேய மொழியை அம்மொழிக்குரிய மக்கள், இசுரேல் நாட்டில் தழைக்கச் செய்து, அதனை ஒரு கல்வி மொழியாக, ஆட்சி மொழியாக அறிவியல் மொழியாக, மக்கள் வாழ்வியல் மொழியாக வளர்த்துள்ள விந்தை விளைந்ததின் விவரம் அறிந்து அதனைத் தமிழக மக்களுக்கு வழங்க விழைந்தார். மொழிப்பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியன் அவர்கள். அப்பணிக்கு மிகவும் பொருத்தமான தனித்தமிழ் ஆர்வலர், தமிழ்ப் பேராசிரியர் முன்னாள் அமைச்சர், மூதறிஞர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களை, 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து' தேர்வு செய்தார். ஆனால், இசுரேலில் தொடங்கவிருந்த அப்பணி, அந்நாட்டுச்

சூழ்நிலை அப்போதைக்கு ஏற்புடையதாக இல்லாமல் போனதால், அடுத்து, நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்கும் சீன நாட்டினைத் தேர்வு செய்தார். தமிழ்ப் பேரறிஞர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் சீன நாடு சென்றார். சிறந்த பல செய்திகளைத் திரட்டினார். அந்நாட்டில் சீனமொழி எப்படியெல்லாம் வளர்ந்து, அது ஒரு பயிற்றுமொழியாக, ஆட்சிமொழி யாக, அறிவியல் மொழியாக, தொழில் வளர்ச்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக விளங்கு கின்றது என்பவற்றைத் தொகுத்து, தமிழனின் தயக்கங்களெல்லாம் பொருளற்றவை என்பதை உள்ளங்கை நெல்லிக் கனியென தெள்ளத் தெளிய விளக்கும் வகையில் "சீனநாடும் சின்ன நாடும்" என்ற இந்த நூலை வடிவமைத்து வழங்குகின்றார். சரி எது தவறெது என்று புரியாமல், தமிழக மக்களுக்கு வாழ்வளிக்கவல்லது தாய்மொழித்தமிழா அல்லது ஆங்கிலமா என்பதறியாமல், தமிழகக் கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும், செய்தி ஊடகங்களும் குழப்பிவிடும் சூழ்நிலையில், செயலிழந்து நிற்கும் தமிழக மக்களுக்கு இந்நூல் ஒரு விடிவெள்ளியாக வெளிவருகின்றது.

தமிழகத்தில் நிலவும் குழப்பங்களுக்குத் தீர்வுகள் சீனாவில் உள்ளன என்று சொன்னால், உடனே 'சீனாவின் நிலை வேறு இந்தியாவின் நிலை வேறு' என்று வேதாந்தம் பேசுவோர் வாயை அடைக்கும் வண்ணம், நூலின் முகப்பில் சீன நாட்டு வரலாற்றைச் சுருக்கமாகக் கொடுக்கின்றார் ஆசிரியர். மக்கட்பெருக்கில், வெளிநாட்டார் ஆதிக்கத்தில், உள்நாட்டுக் குழப்பங் களில், சீனா இந்தியாவைவிடச் சற்று மிகுதியாகவே தொல்லைக்கு உட்பட்ட நாடு என்பதை விவரித்து, தமிழ் மொழியைவிட மிகச்சிக்கலான சீன மொழியைச் சீன மக்களின் பொருளாதார மொழியாக அவர்கள் வளர்த்துள்ள செய்திகளை மிகச் சிறப்பாக வழங்குகின்றார்.

சீன நாட்டின் நகர வளர்ச்சியைக் குறிப்பிடும் போது 1 கோடியே 60 இலட்சம் மக்களைக் கொண்ட சியாங்காய் துறைமுக நகர வளர்ச்சியையும், அதனுள் 533 சதுர கி.மீ. பரப்பளவில், பன்னிரண்டே ஆண்டுகளில் எழுந்துள்ள எழில்மிக்க பூடோங் புதுநகர்ச் சிறப்புகளையும், சியாங்காயில் உள்ள உலகத்தின் மிகப்பெரிய கட்டடங்களில் மூன்றாவது இடம் பெற்ற ஜின்மாவ் கோபுரத்தையும் (420.5 மீட்டர்) கண்டு களித்து, சீன நாட்டின் தொழிலியல் வளர்ச்சியை வியந்து எழுதுகின்றார், பார்த்தேன், மகிழ்ந்தேன், வியந்தேன் என்று. ஒவ்வொரு சீனக் குடிமகனும் அடிப்படைத் தேவை களான உணவு, உடை, கல்வி, எரிபொருள், தண்ணீர் ஆகியவற்றைத் தடையின்றிப் பெறுகின்றான். 130 கோடி மக்களும் பசியின்றி வாழ வேண்டிய அளவிற்கு வேளாண்மை உற்பத்தி நிகழ்கின்றது. அப்படி யொரு பொருளாதார வளர்ச்சி என்று வியக்கிறார் நூலாசிரியர். சீன மொழியை மட்டுமே மையமாகக் கொண்டு செயல்படும் இந்நாடு எப்படி இந்த அளவிற்கு வளர முடிந்தது? சிந்திக்கத் தூண்டுகிறதல்லவா?

நூலாசிரியர், சீன நாட்டில், தான் கண்ட பள்ளிகளைப் பற்றி எழுதுகின்றார்; கல்லூரிகளைப் பற்றி விவரிக்கின்றார்; தொழிற்கல்வி நிறுவனங்களின் சிறப்புகளைச் செப்புகின்றார்; பல்கலைக் கழகங்களைப் பார்த்துப் பூரிப்படைகின்றார்; அவர் கண்டவை யெல்லாம் களிப்பூட்டும் செய்திகளாக உள்ளன. மழலைக் கல்வி முதல் ஆய்வுக்கல்வி வரை தொழிற் கல்வி உட்பட. அத்தனையும் சீன மொழியில் தான் நடைபெறுகின்றன என்று கூறி வியக்கின்றார். இங்கு நாம் காணும் கனவெல்லாம் அங்கு நினைவாக நிகழ்வதைக் காணப் புல்லரிக்கின்றதல்லவா? ஆங்கிலத்தில் வருகின்ற அனைத்து அறிவியல், பொறியியல் இதழ்களும் உடனுக்குடன் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு விடுகின்றனவாம். ஆங்கிலமொழி 7ஆம் வகுப்பிலிருந்து ஒரு பாடமாக மட்டுமே கற்பிக்கப்படுகின்றதாம். சீனர்களுக்குத் தங்கள் மொழிமீதுள்ள பற்றையும், பண்பாட்டின் மீதுள்ள பிடிப்பையும், அயராத உழைப்பையும், தரணி யில் தன் மொழியும் நாடும் முந்தி நிற்க வேண்டும் என்ற முனைப்பையும் பார்க்கும் போது, அந்த நாடு மேன்மேலும் வளர்ந்து தொழில் வளர்ச்சியில், பொருளாதாரத்தில், வளர்ந்த நாடுகளையும் விஞ்சிவிடும் என்பது விளங்கவில்லையா என்று வியக்கின்றார் பேராசிரியர்.

அண்மையில் மலேசிய அரசு, பள்ளிகளில் மாணவர்கள், கணிதம் மற்றும் அறிவியல், பாடங்களை 'ஆங்கில மொழிவழிக் கற்க வேண்டும்' என்று ஓர் ஆணையைப் பிறப்பித்தது. இதனை மலேசிய மலாய் மொழியினரும், மலேசியத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் மலேசியச் சீனர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? இந்த ஆணையை அவர்கள் ஏற்கவில்லை. தங்கள் குழந்தைகள் அறிவியல் பாடங்களையும் சீனமொழி வழித்தான் பயில வேண்டும் என வலியுறுத்தி, அந்த ஆணையிலிருந்து விதி விலக்குப் பெற்றுள்ளனர். தாய்மொழி வழியாக அறிவியலைப் பயின்றால்தான் மூளை வளம் பெறும், சிந்தனை ஆற்றல் வளரும் என்பதில் சீனர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. ஆனால் இங்கு, ஆங்கில மோகத்தில் மூழ்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு இது புரிய வில்லையே என்ற ஆசிரியரின் வேதனை நூலின் பல இடங்களில் வெளிப் படுவதைப் பார்க்கலாம்.

உலகமயமாக்கலில் (Globalization), உலக நாடுகளுடன் சீனாவும் சேர்ந்து விரைந்து செயல்பட்டு வருகின்றது. அதற்குத் தேவையானது ஆங்கில மொழி அறிவு மட்டும் தானே! எனவே ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களும் ஆங்கில மொழியைக் கற்க அரசு ஊக்கமளிக்கின்றது. அதே நேரத்தில் தங்கள் பண்பாட்டைக் கட்டிக்காக்கத் தவறவில்லை யென்பதை.

*"உலகமயமாக்கல் என்ற நிலை நோக்கி எவ்வளவு வேகம் சென்றாலும், தங்கள் பண்பாட்டைக் கட்டிக்காப்பதில் அவர்கள்*

*பின்வாங்கவே இல்லை"* என்று கூறி, சீனர்களின் மொழி, இன, பண்பாட்டு உறுதிப்பாட்டைத் தெளிவு படுத்துகின்றார்.

சீன நாடு தன்மொழியை எப்படி அறிவியல் மொழியாக வளப்படுத்தி வருகின்றது என்று ஆய்வு செய்த பேராசிரியர் கீழ்க்காணும் தகவல்களைக் குறிப்பிடுகின்றார்.

1. அறிவியல் இதழ்கள் அனைத்துமே சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு விடுகின்றன.
2. பொறியியல், மருத்துவப் பட்டப் படிப்புகளின் (B.E., M.B.B.S.) இறுதி இரண்டாண்டுகளில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர் களும் கூட்டாக, ஆங்கிலத்தில் வெளிவரும் ஒவ்வொரு புதிய கலைச் சொல்லுக்கும் சீன மொழியில் புதிய சொல்லாக்கம் செய்கின்றனர். அவற்றைப் புழக்கத்தில் விட்டு, ஒரு குறிப் பிட்ட காலகட்டத்திற்குப் பின் அவை செம்மைப்படுத்தப் படுகின்றன. இப்பணியை மொழி மேம் பாட்டு மையம்ஒருங்கிணைக்கின்றது.
3. "புழக்கத்தில் உள்ள சொற்களைக் கொண்டே இயன்ற வரை புதுச் சொல்லாக்கம் அமைய வேண்டும்" என்ற கொள்கை கலைச் சொல்லாக்கத்தில் பின்பற்றப்படுகின்றது.
4. பொறியியலும், மருத்துவமும் சீனமொழியிலேயே பயிற்று விக்கப்படுவதால் தேவை கருதி ஏராளமான நூல்கள் எழுந் துள்ளன.

மேற்கண்ட செயற்பாடுகளில் தமிழகம் ஈடுபட்டால்தான் தமிழ் அறிவியல் மொழியாக வளரும். ஆனால் இங்குள்ள கல்வியாளர்கள், தமிழில் பொறியியலையும் மருத்துவத்தையும் கற்பிக்க முதலில் புத்தகங்கள் எழுதப்படட்டும்; கலைச்சொற்கள் ஆக்கப்படட்டும்; ஆசிரியர்கள் தமிழில் கற்பிக்கப் பயிற்சி பெறட்டும் என்று நொண்டிச் சாக்குக் கூறிக் கொண்டுள்ள னர். தாய்மொழியில் பொறியியல், மருத்துவப் படிப்புகளைக் கற்பிக்கத் தொடங்கினால் இவையெல்லாம் தானே எழும் என்ற உண்மையைச் சீனர்கள் அறிந்துள்ளனர்; சப்பானியர் அறிந்துள்ளனர்; உலகில் பல நாடுகள் அறிந்துள்ளன. ஆயின் 'இங்குள்ள சிலருக்கு இது புரிவதில்லை என்பது தான் என் வருத்தம்' என அலுத்துக்கொள்கின்றார் நூலாசிரியர்.

ஆட்சி மொழியைப் பற்றிக் குறிப்பிடும்போது, "ஆட்சிமொழி முழுவதும் சீனமொழியில்தான். பிறநாட்டுக்கு மட்டுமே ஆங்கிலம். நம்மைப்போல் தாய்மொழியை ஏளனமாக, இளக்காரமாக நினைக்கும் எவ்ரும் அங்கு இல்லை" என்று நெஞ்சுருகிக் கூறுகின்றார்.

சீனாவில் சட்டம் முழுவதும் சீனமொழியில் சொல்லித் தரப்படுவ தால், நீதி மன்றங்களில் வழக்குரைஞர் விவாதங்களும், தீர்ப்புகளும் சீன மொழியிலேயே, எந்தவிதச் சிக்கலும் இன்றி அமைகின்றன. ஆனால்

நம்மூரில் உச்ச நீதிமன்றத்தை மனத்தில் வைத்துக் கொண்டே, உயர்நீதி மன்றத்திலும் ஆங்கிலத்திலேயே எல்லாம் நடைபெறுகின்றன, என்று வேதனைப்படுகின்றார்.

இப்படி, சீனநாடு, தன் மொழிப் பற்றால், தமது பண்பாட்டுப் பிடிப்பால், எங்கும் எதிலும் சீனமொழியைப் பயன்படுத்துவதால் அந் நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து படைப்பாளிகளாய்ப் பணி யாற்றி, சீன நாட்டை உலகின் முன்னணிக்கு எடுத்துச் செல்லுகின்றனர் என்பதற்கான சான்றுகளை நூல் முழுதும் தன் உணர்வோடு சேர்த்துக் கொடுத்துள்ளார் நூலாசிரியர். சீன மொழியால் முடியுமென்றால், தமிழால் ஏன் முடியாது என்ற உணர்வைத் தூண்டுகின்றது இந்நூல். இந்த நூல், தமிழ் மக்களுக்கு, தமிழக அறிஞர்களுக்கு, கல்வியாளர்களுக்கு, அரசியலாளர் கட்கு, 'தமிழ் வளர்ந்தால்தான் தமிழன் வளருவான்; தமிழால் எல்லாம் முடியும்' என்ற ஊக்கத்தை உணர்வுகளை வழங்க வல்ல நல்லதொரு நூல் என்பதில் ஐயமில்லை. இப்படியொரு முயற்சிக்கு முழுமுதற் கரணியமாக இருந்த தமிழறிஞர் முனைவர் வ.அய்.சுப்பிர மணியன் பாராட்டுக்குரியவர்; போற்றற்குரியவர். அவர்கள் கொடுத்த பணியை வேலையாகக் கொள்ளாமல், வேள்வியாகக் கொண்டு நல்லதொரு சேவையைச் செய்து இந்நூலைக் கொணர்ந்துள்ள, ஐயா தமிழ்க்குடிமகன் அவர்களை, வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றேன்.

தமிழ்ப் பேருலகம், 'சீனநாடும் சின்னநாடும்' என்னும் இந்த அரும் பெரும் படைப்பிற்காக, நூலாசிரியர் அவர்கட்குக் கடமைப் பட்டிருக்கிறது. தமிழன் தன் சிறப்பிழக்காமல், தமிழ் மரபு போற்றி வாழ வேண்டிய உந்து விசையை இந்நூல் வழங்குகிறது. வாழ்க தமிழ்! வளர்க தமிழர் பண்பாடு! வீழ்க வேற்றுமைகள்! வெல்க தமிழுலகம்!

15.04.2003

# நூலாசிரியர் முன்னுரை

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகட்கு அடிக்கடி போய் வருபவர்கள் உண்டு; ஏன்? வாரந் தவறாமல் சென்று வருபவர்களும் உண்டு. அமெரிக்கா போன்ற நாடுகட்குக் கூடப் பலர் சென்று வருகின்றனர். பேரனைப் பார்க்கப் போகிறேன், மகன் வரச் சொல்லியிருக்கிறான், 'பையன் அமெரிக்காவில் இருக்கிறான்; போய்ப் பார்க்கணும்' என்று பலர் சொல்லத் தொடங்கிவிட்டனர். ஆனால் யாரும் சீனாவுக்குப் போய் வருகிறேன் என்று சொன்னதாகத் தெ ரியவில்லை. ஆனால் நான் போனேன்; கலிங்கம் நோக்கிப் புறப்பட்ட கருணாகரத் தொண்டைமானுக்கும் ஒரு குலோத்துங்கன் கட்டளை வேண்டுமே! எனக்கும் அப்படித்தான். சீனமொழிப் பயன்பாடு குறித்து அறியவும் வேண்டும்; தமிழ் மக்களுக்கு அறிவிக்கவும் வேண்டும் என்று விரும்பினார் அறிஞர் வ.அய்.சு. அவர் விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பினை நான் ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் என் ஆய்வு வெறும் அறிக்கைச் செய்தியாக மட்டும் அமைந்து திராவிட மொழியியற் பள்ளி வளாகத்துக்குள் அடங்கி விடுவதை நாங்கள் இருவருமே விரும்பவில்லை. இந்த ஆய்வுச் செய்தியோடு, சீனாவை ஒரு பார்வை பார்த்ததாகவும் இருக்க வேண்டும். அந்தமானுக்கும், மலேசியாவுக்கும், பெர்லின், உரோம், பாரிசுக்கும் என பயண நூல்களால் உங்களை அழைத்துச் சென்ற நான், உலகின் மிகப்பெரிய நாட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன். நான் அடைந்த வியப்பினை நீங்களும் அடைய வேண்டும் என்று விரும்பியே பல செய்திகளைத் தந்துள்ளேன். அதே நேரத்தில் சீனர்களின் உழைப்பை நமது உழைப்போடு ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். வாயளவில் மரபும், பண்பாடும் பேசும் நம்மை விட, அவற்றை வாழவைத்துத் தாங்களும் வாழ்ந்து காட்டும் சீனர்களை வியப்போடு சுட்டிக் காட்டி இருக்கிறேன்.

எல்லாம் ஒரு நம்பிக்கை தான்; நாமும் ஒரு நாள் சீன நாட்டைப் போல் செழிப்பாகி விட மாட்டோமா? சீனர்களைப் போல் உழைக்கக் கற்றுக் கொள்ள மாட்டோமா? சீனப் பெண்களைப் போல் 'தங்கம்' துறந்த தமிழ்த் தங்கங்கள் ஆகிவிட மாட்டோமா எனும் ஆசைதான், எதிர் பார்ப்புத்தான்

நடக்கும் என்று நம்பித்தான் என் செய்திகளை எடுத்து வைத்துள்ளேன். சீன மொழியைப் போல் தொன்மை படைத்த, இலக்கியச் செழுமை

படைத்த என் தமிழ்மொழியும் எல்லா இடங்களிலும் எழிலாட்சி செய்யும் நாள் ஒன்று வரும் எனும் நம்பிக்கையோடும் இதனைத் தந்து ள்ளேன்.

இப்பணிக்கு என்னை ஆளாக்கிய பேராசிரியர் முனைவர் வ.அய்.சு. வின் பேரன்புக்கு இந்நூலைப் படைக்கின்றேன். அணிந்துரை எழுதிய அவர்க்கும், அருமை நண்பர் முனைவர் பொன்னவைக்கோவிற்கும் என் நன்றியைக் காணிக்கை யாக்குகின்றேன். எடுத்த செயலை முடித்துக் காட்டி இந்நூலாம் குழந்தையை நம் கைகளில் தவழவிட்ட தம்பி இளவழகனுக் கும், அழகிய முகப்பை அமைத்து நம்மை அயரச் செய்துவிட்ட ஓவியர் பிரேம்குமாருக்கும் என் பாராட்டுகள். நூற் செய்திகளில் குறை கண்டாலோ, நூல் நுவலும் கருத்தில் மாறுபட்டாலோ நீங்கள் என்னிடம் பேசலாம், தருக்கமிடலாம், நீங்கள் வென்றால் திருத்திக் கொள்வேன், தோற்றால் ... இந்நாடு விழிப்புறத் தொடர்ந்து பணி செய்வேன்.

# பதிப்புரை

முனைவர் தமிழ்க்குடிமகன் தனித்தமிழ் இயக்க முன்னோடிகளில் முன்னவர். திராவிட இயக்கக் கொள்கை களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மொழிஞாயிறு பாவாணர் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர். தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட என்னைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர்.

ஏற்றுக் கொண்ட பதவிகளில் முத்திரை பதித்தவர். அரசியல் அறிவும், தமிழறிவும் மேலோங்கியவர். இவருடன் மலேசிய மண்ணில், மொழிஞாயிறு பாவாணர் நூல்கள் வெளியீட்டு நிகழ்விலும், தமிழ் தொடர்பான இலக்கிய நிகழ்வு களிலும் கலந்துகொள்கின்ற வாய்ப்பினைப் பெற்றவன். அக் காலக்கட்டங்களில் இவராற்றிய சொற்பொழிவைக் கண்டு வியந்தவன். உலக நாடுகள் பலவற்றுக்கு சென்று வந்த இப்பெருமகன், மூத்த நாகரிக நாடான சீனாவிற்கும் சென்று திரும்பியவர்.


தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக இருந்தவரும், அனைத்துலகத் திராவிட மொழியியற் பள்ளி யின் மதிப்புறு இயக்குநராக இருப்பவருமான முனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களும், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இயக்குநர் மு. பொன்னவைக்கோ அவர்களும் இந்நூலுக்கு அணிந்துரை அளித்துச் சிறப்பித் திருப்பதிலிருந்து இந்நூலின் பெருமையை உணரலாம்.

'சீன நாடும் சின்ன நாடும்' எனும் இந்நூலை ஒரு பயண நூல் என்று கருதாது, தமிழர்கள் இதை ஒரு பண்பாட்டு உறவுக்குரிய நூலாகக் கொள்வர் என்று நம்புகிறோம். இந் நூலை வெளியிடுவதில் எம் பதிப்பகம் பெருமைப்படுகிறது.

நன்றி!

**கோ. இளவழகன்**

பதிப்பாளர்



சுன் கோ சாங் அவர்களுடன்...



ந. கடிகாசலம் அவர்களுடன்...

# பொருளடக்கம்


| வ.எ. | | பக்கம் |
|---|---|---|
| 1. சீனாவின் சுருக்கமான வரலாறு | ...... | 17 |
| 2. பயண ஏற்பாடு | ...... | 31 |
| 3. அனைத்துலகச் சீன வானொலி | ...... | 39 |
| 4. சியாங்காய் | ...... | 44 |
| 5. வேலைகளுக்கான தொழில் நுட்பம் சார்ந்த மென் தொழிற் பயிற்சிக் கல்லூரி | ...... | 49 |
| 6. கல்விப் பிரிவுகள் | ...... | 52 |
| 7. ஒரே வளாகம் நான்கு பல்கலைக் கழகங்கள் | ...... | 53 |
| 8. பெய்சிங்கு ஒலிபரப்பு நிறுவனம் | ...... | 54 |
| 9. சின்குவா பல்கலைக் கழகம் | ...... | 57 |
| 10. அனைத்துலகக் கல்விக்கான சீன நிறுவனம் | ...... | 60 |
| 11. ஜியாவ் டாங் பல்கலைக் கழகம் | ...... | 62 |
| 12. கட்டாயக் கல்வி | ...... | 65 |
| 13. இந்தியத் தூதரகம் | ...... | 66 |
| 14. நீதிமன்றங்கள் | ...... | 67 |
| 15. தேசிய நூலகம் | ...... | 68 |
| 16. கதைகள் | ...... | 71 |
| 17. பண்பாட்டுப் புரட்சி | ...... | 73 |
| 18. இதழ் உரிமையும் ஊழலும் | ...... | 75 |
| 19. சீன நெடுஞ்சுவர் | ...... | 79 |
| 20. பொது | ...... | 82 |

# 1

# சீனாவின் சுருக்கமான வரலாறு

என் சுற்றுப் பயண நோக்கத்தின்படி பார்த்தால் சீனாவின் விரிவான வரலாறு இங்குத் தேவையில்லை. எனினும் நூலின் தலைப்பின்படி பார்த்தால் ஓரளவாவது சீனாவின் தொன்மை வரலாற்றை நாம் தெரிந்து கொண்டே ஆக வேண்டும். காரணம், இன்றைய சீனா ஒரு சிறந்த நிலையை அடைவதற்கு முன் கடந்த 2000 ஆண்டுகளாக எத்தனை நாடுகளின் ஊடுருவல், சண்டைகள், இலட்சக்கணக்கான மக்களின் சாவுகள், மன்னர்களே மக்களைக் கசக்கிப் பிழிந்து மரணப் படுகுழியில் தள்ளிய காட்சிகள் - இவற்றை எண்ணும் போது நாம் தாவிலை (பரவாயில்லை) போலிருக்கிறதே என்றுதான் எண்ணத் தோன்றும். வடசீனா, தென்சீனாப் போர்கள், பொதுவுடைமைக் கட்சிக்கும் கோமிண் டாங் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள் என்று எத்தனையோ சிக்கல்களைத் தாண்டித்தான் சீனா இன்றைய நிலைக்கு வந்திருக்கின்றது. எனவே சீனாவின் சுருக்கமான வரலாற்றையும் பார்த்துக் கொண்டபின் இன்றைய சீனாவைப் பார்த்தால் ஒரு தெளிவு கிடைக்கும். சாமிநாத சர்மாவின் 'சீனாவின் வரலாற்று' நூலைக் கொண்டே சுருக்கத்தைத் தந்து விடுகிறேன்.

"டிடெரோ என்ற பிரெஞ்சுப் புலவன், "பழமை, கலை, விவேகம், ஞான பரிபக்குவம், விவகார சாமர்த்தியம், தத்துவத்தில் சுவை, இப்படிப் பலவகையிலும் சீனர்கள், மற்ற ஆசியாக்காரர்களை விட மேலானவர்களா யிருக்கிறார்கள். அது மட்டுமன்று; மிகவும் முன்னேற்ற மடைந்துள்ள ஐரோப்பிய இனத்தவரோடும் இந்த வகையில் போட்டி போடக்கூடியவர் களாயிருக்கிறார்கள்" என்று சொல்கிறான். கெய் ஸர்லிங் என்ற ஜெர்மானிய அறிஞன், "உலகனைத்திற்கும் பண்பாட்டைச் சீனா படைத்துக் கொடுத் திருக்கிறது. பெரிய மனிதர்களென்று சொல்லப் பெறும் சீனர் பலரும், பண்பாட்டில் நம்மவர்களை (ஐரோப்பியர்களை)க் காட்டிலும் மேலானவர் களாகவே இருக்கின்றனர். பண்பாடுள்ள ஒரு சீனன், மற்றவர்களிடம் காட்டும் மதிப்பு எவ்வளவு நிறைவுடைய தாயிருக்கிறது! எல்லா மனிதர் களைக்காட்டிலும், சீனன்தான் மிகத் தெளிந்த அறிவுடையவன் என்று சொல்லலாம்" என்று பகர்கிறான். பெர்ட்ராண்ட் ரசல் என்ற ஆங்கிலமேதை, "சீனர்கள், ஒருவிதமான வாழ்க்கைப் போக்கைக் கண்டுபிடித்து நூற்

றாண்டுகள் கணக்கில் கடைப்பிடித்து வருகிறார்கள். அதனை உலக மக்கள் பின்பற்றுவார்களானால், உலகனைத்தும் மகிழ்வாயிருக்கும்'' என்று உரைத்திருப்பது, வழி தேடிக்கொண்டிருப்பவர்களை மகிழ்ச்சிக்கு ஊக்குவிப்பதாயிருக்கிறது.''

பண்பாட்டில் நாம் தான் உயர்ந்தவர்கள் எனும் எண்ண மிருந்தால் அதை எடுத்தெறியுங்கள். இப்போது நம் நாட்டு மாந்தர்களின் பண்பாட்டுக் குறைவான செயல்களை ஒப்பிடும் போது, சீனாவுக்கு அருகில் கூட நாம் வர முடியாது என்றே நான் கருதுகிறேன். மேற்கண்ட அறிஞர்கள் இதனை என்றைக்கோ சொல்லி விட்டார்கள் என்பதுதான் வியப்பு.

நாம் தான் சீனா என்கிறோம். அவர்களோ சுங்-ஹுவா அல்லது மின் குவோ என்று அழைப்பதில் பெருமை கொள்கிறார்கள். 'புவியின் நடுவில் உள்ள பூ அல்லது புகழ் நிறைந்த நாடு' என்று பொருளாம். அந்த அளவுக்குப் பெருமை அவர்களிடம்.

சியாங்காய் நகரம் ஒட்டுமொத்தச் சீனாவின் வாணிகத் தலைவாசலாகவே அன்றும் விளங்கியுள்ளது. இன்றைய சிறப்பைப் பின்னால் பேசுகிறோம்.

5000 கி.மீ. நீளமுள்ள ஹோயாங்கோ ஆறு தான் 'மஞ்சளாறு' என்று பெயர் பெற்றது. பல முறை வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சீனாவைச் சீரழித்துள்ளது. அதனாலேயே இதற்குச் 'சீனாவின் துயரம்' என்று பெயர்.

சீனாவில் புத்த மதம் மேலோங்கியுள்ளது. அடுத்து, கன்பூஷியம், டாவோயிசம் ஆகியவை செல்வாக்குப் பெற்றுள்ளன. எனினும் இவை மதங்கள் என்பதைவிட, 'நல்ல கோட்பாடுகளின் பரப்பு மையங்கள்' என்றால் பொருந்தும். ஏனெனில், கன்பூஷியசு ஒரு மதத்தலைவராக இல்லை. மேலும், ஓரளவு கிறித்தவ, இசுலாமிய சமயங்களும் இடம் பெற்றுள்ளன.

சீனாவில் படித்தவர்களுக்கு அதிக மதிப்பு உண்டு. "பொன்னையும் மணியையும் விட அறிவுக்கு முதன்மை தருவது உலகத்திலேயே சீன நாடு ஒன்றுதான்'' என்கிறார் அறிஞர் பெர்ட்ரண்ட் ரசல்.

கி.மு.3000 முதல் கி.மு.2255 வரை, ஸுயிஜென், பூஹ்ஸி, ஷென்-நுங், ஹுவாங் தீ, யௌ, ஷுன் போன்றோர் தலைமையில் அரச மரபினர் ஆண்டுள்ளனர். நெருப்பு, இசை, திருமண முறை, பட்டு உற்பத்தி ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டு மக்கள் வாழ்வில் ஊடுருவின. இடையில் 100 ஆண்டுகள் கொடுங்கோலரும் ஆண்டுள்ளனர்.

அதன்பின் யூ மன்னன் ஆட்சி. அடுத்து சீஹ் கூயை என்பானுடைய கொடுங்கோலாட்சி. பின் 28 மன்னர்கள் ஆண்ட 'ஷாங்' மரபினர் ஆட்சி.

கி.மு.1122இல் சௌமரபினர் ஆட்சி, வூ வாங் முதலானோர் ஆண்டனர். எனினும் 550 ஆண்டுகள் (கி.மு.771-221) தான் தோன்றித்

தனமான மன்னர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளது. நமக்கு முன்னதாகவே அங்கோர் 'இருண்ட காலம்' போலும்! கி.மு.221 இல் ஹுவாங் தீ என்ற மன்னர் ஆண்டபோது தான் சீனப் பெருஞ்சுவர் எழும்பியது.

கி.பி.206 முதல் கி.பி.220 வரை ஹான் மரபினர் ஆட்சி. (இதே காலமான நம் சங்க காலத்தை ஒப்பிட்டுக் கொள்ளவும்) இந்தக் காலத்தில் தான் புத்தமதம் புகுந்து வேரூன்றத் தொடங்கியது.

வூடி காலத்தில் இந்தியா, சீனா நேரடித் தொடர்பு ஏற்பட்டது. பின் 'யூ' எனும் பெரும்புலவர், பென்டீ, அடுத்து 'தாங்' மரபில் தைத் ஸுங், காவோத் ஸுங், யூ ஹௌ போன்றோர் ஆட்சி.

கி.பி.907 முதல் 1279 வரை பல சிற்றரசுகள். அப்போது தமிழ் நாட்டில் சோழர்கள் அமைத்த பொற்கால ஆட்சி நடந்தது. சீனாவில், தை த்ஹுங், வாங் ஆன்ஷி, ஹுயீத்ஸுங் ஆட்சிகள். முதன் முதலாக கித்தானியர் படையெடுப்பு, பின் தங்கூட்டர் படையெடுப்பு, எனினும் சமரச உடன்பாடு. (எண்ணுக. 1310 இல் பாண்டியர் ஆட்சி வீழ்ந்தபின் தான் பலரது படை யெடுப்புகளும் தமிழகத்தில் நிகழ்ந்துள்ளன.

பின் மங்கோலிய மரபின் ஆட்சி. 1280 இல் குப்ளய் கான் ஆட்சி. 1366 இல் மங்கோலியர் ஆட்சிக்கு எதிராகக் கலகம்.

1368 இல் சூ-யுவான் சாங் 'மிங்' மரபினர் ஆட்சியை உருவாக்கினான். இந்த மரபு 1644 வரை தொடர்ந்தது. இடையில் செங் த்ஸு போன்றோர் ஆண்டனர்.

இந்த 'மிங்' மரபினர் காலத்தில் தான் ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவுக்குள் தலை நீட்டத் தொடங்கின. ஜப்பானும் சீனாவுக்குள் தன்னுடைய நாக்கை நீட்டியது.

இதன்பின் 1644 இல் மஞ்சூ மரபினர் ஆட்சி. 1911 வரை 267 ஆண்டுகள் நீடித்த ஆட்சி இது. ஷுன்சி, காங் ஹ்ஸி, யுங்செங், சின்லுங், சியாசிங், டாஹோ குவாங், ஷீன் 'பெங், யெஹோனலா (பெண்)' குவாங் ஷு என்பவர்கள் ஆண்டனர். 'பூயி' என்பவனுடன் சீனாவின் மன்னராட்சி மறைந்து 1912 இல் குடியரசு ஏற்பட்டது.

இவற்றுக்கிடையில் கி.பி.845 இல் புத்தமதத்துக்கு எதிராகவும் பல பகுதிகளில் கலகம் நடந்துள்ளது. ஐரோப்பியர் படையெடுப்பும் வேகமாக வந்தது. 1517 இல் போர்த்துகீசியர், 1575 இல் ஸ்பெயின்காரர், 1604 இல் ஹாலந்துக்காரர், 1637 இல் ஆங்கிலேயர் 1660 இல் பிரெஞ்சுக்காரர் என, அடுக்கடுக்காக வெளிநாட்டினர் வந்து குவிந்தனர்.

கொள்ளை கொள்ளையாக வாணிபம் செய்து பொருளீட்ட வேண்டும் என்னும் ஒரே நோக்கம்தான் இவர்களுக்கு.

சீனர்கள் எதையும், எவரையும் எதிர்பார்த்தோ, எந்தப் பொருளாவது வந்தால் தான் வாழ்வு என்றோ எண்ணி வாழ வேண்டிய தேவையில்லாமல் எல்லாவற்றிலும் தன்னிறைவு பெற்றிருந்தனர். எனவே வாணிகம் செய்ய வந்த அயல் நாட்டினர்க்குச் சீனர்கள் ஏராளமான 'வரையறை'களை விதித்தனர். பிறரெல்லாம் ஒத்துப் போனார்கள். ஆனால் பிரிட்டீசார் மட்டும் வன்முறையில் இறங்கிச் சீன அரசை வழிக்குக் கொண்டு வர எண்ணினர். அப்போது காண்ட்டன் என்பதுதான் புகழ் பெற்ற துறைமுகமாக இருந்தது. 1840 இல் சூன் மாதத்தில் பிரிட்டீசார் 540 பீரங்கிகள், ஆயிரக் கணக்கான படைவீரர்கள் 16 போர்க் கப்பல்களுடன் சீன எல்லைக்கு வந்து காண்ட்டன் துறைமுகப் போக்குவரத்தை அடைத்து நின்றனர். இதுதான் போராக மூண்டது. எனினும் 1842 இல் சீனா தோல்வி கண்டது. 1842 ஆகச்டு 29 இல் சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே நான்கிங் உடன்படிக்கை ஏற்பட்டது "முதன் முதலாக நிறைவேற்றப்பட்ட ஏற்றத் தாழ்வான உடன்படிக்கை இதுதான்" என்பர் வரலாற்றறிஞர்கள்.

பின்னர், மேனாட்டு வல்லரசுகள் நெருக்கடி கொடுத்தன. சீனா பலவீனமடைந்தது. 1844 இல் அமெரிக்காவும், 1847 இல் நார்வே ஸ்வீடனும் 1858 இல் உருசியாவும் நெருக்கின. 1858 இல் அமெரிக்காவும். பின் பிரான்சும் சீனாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, சீனாவைத் தங்கள் வேட்டைக் காடாக்கி விட்டன.

மேலும், சீனாவின் பல பகுதிகள் அயலவர் பிடிக்குள் வந்தன. இந்நிலை பற்றி 'லீ ஹுங் சாங்' எனும் புகழ்பெற்ற பெருமகன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"சீனாவுக்கு நண்பர்கள் என்று சொல்லக் கூடியவர் யாருமே இல்லை. உருசியா, வடக்கே இருந்து கொண்டு அதனை நெருக்கி வந்தது. அதன் ஆட்சிக்குட்பட்ட ஸ்வாட்டோவின் மீது செருமனி படையெடுத்து வந்தது. ஜப்பான், லூச்சூ தீவுகளைக் கையகப் படுத்திக் கொண்டது. இங்கிலாந்து, ஹாங்காங்கைத் தன் பிடியிலே வைத்துக் கொண்டு அதன் மூலமாகச் சீன மக்களுக்கு வறுமையையும் அழிவையும் தேடித் தருகிற அபினியைத் திணித்து வந்தது. சீன வல்லரசைத் துண்டு, துணுக்குகளாக்கி விட பிரான்சு ஒரு பெரும் படையை அனுப்பியது. அமெரிக்கா, தன்னுடைய நாட்டெல்லையில் சீன மக்களுக்கு உரிமையில்லை என்று சட்டம் பிறப்பித்தது" என்கிறார் அவர்.

வேலியில்லாத நிலம், காப்பில்லாத காடு என்ற நிலையில் சீனா. எனவே கண்டவர்களெல்லாம் மேய முற்பட்டனர். இந்நிலையில் சீனர்கள் மிகப்பெரும் மன எரிச்சலுடன் குமுறிக் கொண்டிருந்தனர்.

கொரியா தொடர்பாகச் சீனா ஜப்பான் இடையே பிணக்கு ஏற்பட்டது. எனினும் 1895 இல் இரு நாடுகளும் உடன்படிக்கை செய்து கொண்டன.

ஓர் உண்மை மட்டும் பளிச்செனத் தெரிகிறது. வாணிகம் செய்ய வந்து, இங்குள்ளவர்களின் பலவீனத்தால், எல்லாரும் தத்தம் முதலீடுகளைப் பெருக்கி, சீனாவைத் தங்கள் ஆளுமைக்குட்பட்ட நாடாகப் பங்கு போட்டுக் கொண்டனர். (அடே! நமது இந்தியாவின் கதையும் குறிப்பாகத் தமிழகத்தின் கதையும் அப்படித்தானே!)

“உலகில் உள்ள மற்ற நாடுகளை விட, சீனா ஒன்றுதான் இந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெரும் முட்டாள்தனத்தோடு கூடியதாய் இருந்து வருகிறது. எங்களுடைய அலுவலர்களில் கூர்ந்து பார்க்கும் சக்தியுடையவர் எவரு மில்லை. வெளிநாட்டில் சரியான பிரதிநிதிகள் இல்லை. உள் நாட்டிலோ போதுமான பள்ளிகள் இல்லை” என்கிறான் சாங் சீ டுங் எனும் அறிஞன்.

இக்கால கட்டத்தில் தான் சன் யாட் சென் (San-Yat-Sen) முளைக்கிறான் (1866-1925) இவன் நாட்டுப் பற்றும் விடுதலை உணர்ச்சியும் உடையவன். மருத்துவர் பட்டம் பெற்ற இவன், 1892 இல் “சீன மறுமலர்ச்சிச் சங்கம்” ஒன்றினைத் தொடங்கினான்.

1895 இல் இவன் செய்த புரட்சி தோல்வியடைந்தாலும் தளராமல், சீனாவிலும் வெளிநாடுகளிலும் ‘சீன விடுதலை’ உணர்வு கொண்ட சங்கங் களை நிறுவினான். பின், சீனப் புரட்சியாளர்கள் பலரையும் ஒன்று திரட்டி ஓர் அமைப்பை உருவாக்கினான். அதுதான் பின்னர் கோமிண்டாங் கட்சியானது. 1905 முதல் 1911 வரை அவன் செய்த புரட்சிகள் தோல்வியுற்றன. 1911 இல் அவன் செய்த புரட்சி வெற்றி பெற்று, முடியரசு வீழ்ந்து, குடியரசு மலர்ந்தது. பல்லாயிரமாண்டு கால மன்னர் ஆட்சியை மாய்த்து, மக்க ளாட்சியைக் கொண்டு வந்த பெருமை இவனைச் சாரும்.

இதற்கிடையில் 1858 இல் பிறந்த, காங்யூ வெய் எழுச்சி பெற்றான். சீனாவின் பழமை மாறாமல், நாடு முன்னேற உழைத்தான். “சீனாவின் நவயுகஞானி” என்றும் பெயர் பெற்றான்.

இடையில், இளையவர் அல்லது தெற்கத்தியர் கட்சி, முதியவர் அல்லது வடக்கத்தியர் கட்சி என நாடு பிளவுபட்டது. 1915 இல் சீனா-ஜப்பான் உடன்படிக்கை ஏற்பட்டது. ஜப்பானோ உருசியா மீது சினம் கொண்டு பகை வளர்த்து வந்தது. இரண்டுக்குமிடையே போர். இது நடந்ததோ சீன நாட்டுக்குள்.

பின் எல்லாரும் சேர்ந்தே சீனாவைச் சுரண்டினர். சீனாவிலும் ஒரு பிரிவினை இருந்தது. பீகிங் அரசு நிருவாகம் தனி. மற்றொன்று மஞ்சு மரபினரின் ஆட்சி.

பல்வேறு புரட்சி நடவடிக்கைகளுக்குப் பின் 1912 இல் யுவான் ஷி காய் என்பவன் குடியரசுத் தலைவரானான். முன்னேற்றக் கட்சியை நிறுவிப் பணியாற்றினான். சன்யாட் சென் சார்பாளர்களும் பெருமளவில் ஆட்சியில் பங்குபெற்றனர். எனினும் இருவருக்கும் இடையில் மோதல் வந்துவிட்டது.

பின், யுவான் மறைவுக்குப் பின், 1917 இல் சன் தலைமையில் நாடாளுமன்றம் இயங்கியது.

1916 முதல் 1926 வரை ஒரே குழப்பம். காண்ட்டன் நகரத்தில் சன்னின் புரட்சிகர அரசும், பீகிங்கில் பிற்போக்கு அரசும் இயங்கின.

இக்கால கட்டத்தில் உருசியாவின் எழுச்சி – அங்கே நிலவிய பொதுவுடைமைக் கோட்பாடு ஆகியவை சீன இளைஞர்களால் வரவேற்கப் பட்டன. 1920 இல் சீனப் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப்பட்டது.

அதன் பின் சீன – உருசிய நட்புறவு வளர்ந்தது. உருசிய வல்லுநர்கள் சன்யாட் சென்னுக்குத் திட்டங்கள் வகுத்துக் கொடுத்தனர். 1924 இல் உருவான இராணுவக் கழகத்தின் அலுவலராக சியாங் கே ஷேக் அமர்த்தப் பட்டான். அமர்த்தியவர் சன்யாட்சென். பீகிங்கையும் ஒருங்கிணைத்து ஒரே சீனாவைக் காண முயன்ற சன் எதிர்பாராமல் காலமானான். எனினும், சீனாவின் ஒரு பகுதியின் செல்வாக்கு மிக்க தலைவராகவே சன் கடைசி வரை திகழ்ந்தான்.

முதல் உலகப் போரால் சீனாவில் பல்வேறு குழப்பங்கள். இந் நிலையில் 1919 மே 4 இல் மாணவர்கள் வெளியே வந்து போராடினார்கள். May Fourth Movement என்பது சீன வரலாற்றில் சிறப்புக்குரிய நாள்.

இது குறித்து ஓர் அறிஞன் கூறியதை அப்படியே தருகிறேன்.

"இளைஞர்கள் முதலில் தேசத்தைக் கிளப்பிவிட்டார்கள்; வார்சேல் ஒப்பந்தத்தில் (சீனப்பிரதிநிதிகள்) கையெழுத்திடாதபடி தடுத்தார்கள்; ஜப்பானியச் சரக்குகளைப் புறக்கணிக்கும் வகையில் வியாபாரிகளுக்குத் துணையாக நின்றார்கள். இவையெல்லாம் நிறைவேறின. பிறகு, இவர்கள், தங்களைவிடக் குறைவான கல்வியறிவு பெற்றிருக்கிற சகோதர சகோதரி களுக்கு விழிப்பை உண்டு பண்ணுகிற விதத்திலே தங்கள் சக்திகளைத் திருப்பினார்கள். உதாரணமாக, உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் மக்களுக்கு நன்றாகப் புரிகிற மாதிரி நூல்கள் பல வெளியிட்டார்கள்; விளக்க வுரை செய்தார்கள்; தங்களுடைய சொந்தப் பணத்தைப் போட்டு ஆங்காங்கு இலவசப் பள்ளிக் கூடங்கள் நிறுவினார்கள் தாங்களே கல்வியும் போதித்தார்கள். இவர்களுடைய இந்த அற்புதமான தியாகத்தின் பயனாகச் சுமார் ஐம்பதினாயிரம் குழந்தைகள் கல்வி அறிவு பெற்றிருக்கின்றன."

1925 மே 30 சப்பானிய முதலாளிகட்கும் சீனத் தொழிலாளிகட்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காட்டுத் தீயாக நாடெங்கும் பரவியது. இது

பிரிட்டிசார் தொழிற்சாலைகளையும் பாதித்தது. பிரிட்டிசுக் குடிமக்கட்கும் சீனர்கட்கும் இடையில் 2 ஆண்டுகள் தொடர் மோதல்கள்.

உருசியா சென்று எல்லாம் அறிந்து வந்த சியாங்கே ஷேக் எழுச்சி பெற்றான். சன்னுக்குப் பிறகு தலைமை ஏற்றான்.

1927 இல் சியாங், சியாங்காய் மற்றும் நான்கிங் நகரங்களைக் கைப் பற்றினான். தன் ஆட்சியை நிலைநாட்டினான். எனினும் 1927 இல் அவனே பதவி விலகி ஜப்பானுக்குச் சென்றுவிட்டான்.

1937 வரை பொதுவுடைமை வாதிகள் பெரிதும் அல்லலுக்கு ஆளாயினர்.

இராணுவ முறையிலும் பிரசார முறையிலும் பயிற்சி பெற்ற பொதுவுடைமை வாதிகள், கிராமங்களிலே சென்று விவசாயிகளுக்கு, அவர்களுடைய நிலையென்ன, அவர்கள் எப்படிச் சுரண்டப்படுகிறார்கள், அவர்கள் சுரண்டப்படாமலிருக்கத் தாங்கள் பொதுவுடைமை வாதிகள் - காட்டுகிற வழியென்ன, செய்யப்போகிற ஏற்பாடுகளென்ன ஆகிய இவைகளைப் பற்றி விரித்துச் சொல்லி வந்தார்கள். ஏழைக் குடியானவர்கள், வறுமையிலே உழன்று கொண்டிருக்கிற விவசாயிகள் ஆகியோர் இவர் களுக்கு நல்வரவு கூறி, இவர்களை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல் பின்பற்றவும் செய்தார்கள்.

இந்தப் பொதுவுடைமை இயக்கத்தைத் திறம்பட வளர்த்தவர் பலருள், வெளியுலகத்திற்கு நன்கு அறிமுகமானவர்கள் மூவர். 1. மாத்ஸே துங்; (Mao Tse-tung: பிறந்தது - 1893) 2. சௌ என் லாய்; (Chou En-lai: பிறந்தது - 1898) 3. சூ தேஹ் (Chu-Teh: பிறந்தது - 1896) இம் மூவரும் அரசியல் வல்லுநர்கள். சிறப்பாக, பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் நுட்ப திட்டங்களைச் சாதாரண மக்களுக்குப் புரிகின்ற முறையில் விளக்கிச் சொல்வதில் வல்லவர்கள். பொதுவுடைமையினரின் நீண்ட நடைப் பயணத்தை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை இவர்களையே சாரும்.”

சியாங்கே ஷேக்கின் ஆட்சியில் இருந்த நான்கிங் அரசு பொது வுடைமை வாதிகளை அடக்கி விட வேண்டும் என்று முனைந்தது. இதனைப் பலர் எதிர்த்தனர். சீனாவில் உட்கலகங்கள், கட்சிச் சண்டைகள் மேலோங்கின.

இந்நிலையில் ஜப்பான் ஊடுருவலும், மேலாண்மையும் சீனாவில் அதிகமாகி விட்டன. நான்கிங் அரசின் பலவீனம் இதற்குக் காரணமாகும். ஒன்பது ஆண்டுகால உள்நாட்டுக் குழப்பம் காரணமாக உழவர்கள், தொழி லாளர்கள், அறிஞர்கள் எனப் பத்து இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

ஒரு திருப்பு முனை : படைத் தலைவர்கள் எல்லாம் ஜப்பானை எதிர்த்துப் போராட முயன்றார்கள்; ஆனால் சியாங்கின் விருப்பம் வேறாக

இருந்தது. அவன் பொதுவுடைமை வாதிகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்றான். எனவே, படைத்தலைவர்களே சியாங்கைச் சிறை வைத்து விட்டார்கள்: மக்களுக்குப் பேச்சு, எழுத்துரிமை கொடுப்பது போன்றவற்றைச் செய்து விடலாம் என்று கேட்டபோது சியாங் மறுத்து விட்டான். எனினும் தங்கள் மீது வெறுப்புக் கொண்ட சியாங்கை விடுதலை செய்து பொதுவுடையாளர்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்கள்.

ஒருவழியாக கோமிண்டாங் கட்சியினரும், பொதுவுடைமை யாளர்களும் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து நெருங்கி வந்தனர். சீனா ஒற்றுமைப் படக்கூடாது என்று எண்ணிய ஜப்பான் 1937 இல் சீனாவை வலுச் சண்டைக்கு இழுத்தது. எனவே சீனர்கள் ஒற்றுமையாக நின்று எதிர்க்க நேர்ந்தது. இரு கட்சிகள் இருந்தாலும், 'ஐக்கிய தேசிய முன்னணி' எனும் பெயரில் சியாங் தலைமையில் இயங்கினார்கள்.

இந்நிலையில் சீன-ஜப்பான் போர். ஜப்பானியர் முதலில் பீகிங்கை, அடுத்து, சியாங்காயை, தொடர்ந்து நான்கிங்கைக் கைப்பற்றினர். சீனர்கள் பின்வாங்கிக் கொண்டே போனார்கள். இந்நிலையில் சீனர்கள் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு பல ஜப்பானியப் படைவீரர்களை அழித்தார்கள்.

ஜப்பானியப் படையினரோ, "சீனாவில் தாங்கள் ஆக்கிரமித்துக் கொண்ட பிரதேசவாசிகளை, இருவர் இருவராக மணிக்கட்டுகளை இரும்புக் கம்பிகளினால் இறுக்கிக் கட்டிச் சுட்டுக் கொன்றார்கள்; துப்பாக்கி முனை யினால் குறிபார்த்துக் குத்தும் பயிற்சி பெறுவதற்காக, சிறைப்பட்ட சீனப் போர்வீரர்களின் கண்களைக் கட்டிவிட்டு அவர்களைப் பயன்படுத்தினார் கள்; பச்சைக் குழந்தைகளை ஆகாயத்திலே தூக்கிப்போட்டுக் கீழே துப்பாக்கிக் கத்தியை நீட்டினார்கள்; கும்பல்கும்பலாகக் கூடியிருக்கும் நிரபராதிகளான மக்கள் மீது ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்தார்கள்; அந்நியர்களுடைய தொழில் நிறுவனங்களையும் சீனர் களுடைய தொழில் நிறுவனங்களையும் தீயிட்டுப் பொசுக்கினார்கள். இந்த மாதிரி எத்தனையோ அக்கிரமங்கள். மக்களுக்குத் தங்களிடம் ஒரு பயம் உண்டாகும்படி செய்ய இப்படியெல்லாம் செய்தார்களென்று பொதுவாகச் சொல்லலாம்" என்கிறார் சாமிநாத சர்மா.

சீனா-ஜப்பான் போர் 7 ஆண்டுகள் நீடித்தது. பொதுவுடைமையாளர் கடுமையாக எதிர்த்துப் போராடினார். ஏற்கெனவே, ஜப்பான் அமெரிக்காவை வம்புக்கு இழுத்திருந்தது. இந்நிலையில் 1945 ஆகச்டு 6 இல் அமெரிக்கா 'ஹிரோஷிமா' மீது குண்டு வீசியது. 9.8.45 இல் நாகசாகி மீதும் குண்டு வீசியது. பிறகு ஜப்பான் சரணடைந்தது. ஒரு வகையில் அமெரிக்கா தொடுத்த போர்தான் சீன-ஜப்பானியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. 2.9.1945 இல் போர் ஓய்ந்தது.

எனினும், ஒரே சீனாவைக் காண்பதில் சியாங்குக்கும் பொது வுடைமைத் தோழர்கட்கும் இடையில் கருத்து வேறுபாடு எழுந்தது. ஜப்பான் சரண் அடைந்ததால் அமெரிக்கா கோமிண்டாங் கட்சிக்கும் பொது வுடைமைக் கட்சிக்கும் சமரசம் ஏற்படுத்த முயன்றது. எனினும் ஒத்து வரவில்லை. சியாங்கின் உள்நோக்கம் கொண்ட விடாப்பிடி இதனைக் கெடுத்து வந்தது. 1947 இல் பேச்சு முறிந்தே போனது. 1947 மே-யில் இரு தரப்புக்கும் சண்டை மூண்டது. அமெரிக்காவோ பொதுவுடைமையர் தலை யெடுத்து விடக்கூடாது என்பதற்காகச் சியாங்குக்கு உதவியது. நேர்முகப் போருக்கு உதவியது. எதிர்த்துப் போரிட்ட பொதுவுடைமையினர்க்கு மாசேதுங், சூ தேஹ் போன்றவர்கள் தலைமை தாங்கினர்.

1948 முதல் பொதுவுடைமையினர் கை மேலோங்கியது. சியாங் சரிவடைந்தான். 1949 செப்டம்பருக்குள் சீனா முழுவதும் பொதுவுடைமைக் கட்சியின் கைக்குள் வந்துவிட்டது.

"1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் பொது வுடைமைக் கட்சியினர், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டனர்; சீன மக்களின் குடியரசு நிறுவப்பட்டது. வெகு காலமாகச் சீனாவில் தலைநகரமாக யிருந்து வந்த பீக்கிங், மீண்டும் தலை நகரமாக்கப் பெற்றது. குடியரசின் முதல் தலைவன் மாத் ஸே துங்; முதல் பிரதம மந்திரி சௌ என் லாய்". "சீனர்கள், எப்பொழுதுமே திறமையைப் போற்றுகிறவர்கள்; அறிவுக்கு மதிப்புக் கொடுக்கிறவர்கள்; இலக்கியத்தில் இன்பம் நுகர்கிறவர்கள்".

கவிதைத் துறையில் சீனர்கள் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் விளங்கினர். மேலும், வரலாறு எழுதுவதிலும் அவர்கள் இணையற்று விளங்கினார்கள். மற்ற நாடுகளை விட, சீனாவில் தான் வரலாற்றாசிரியர்கள் அதிகம். விரிவான வரலாறுகள் இங்கு எழுதப்பட்டன. அதேபோல, அகராதி வெளியீடும் இங்கு உச்சம். கி.பி.க்கு முன்பே சீனாவில் அகராதிகள் உருவாகியிருக்கின்றன. பிற் கால விரிவை மற்றோர் இடத்தில் தந்துள்ளேன். கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தொடர்பு இருந்துள்ளது.

வட இந்தியாவுடன் தொடர்பு கொள்ளச் சீனர்களுக்குத் தரை வழி பயன்பட்டது. அசோக மன்னன் புத்தமதத்தைப் பரப்பிடச் சிலரைச் சீனாவுக்கு அனுப்பியுள்ளான். சீனாவில் மிங் மன்னன் ஆண்ட போது (கி.பி.57–75) புத்தமதம் வேரூன்றத் தொடங்கியது. சீன அறிஞர்களும் இந்தியாவுக்குள் வந்தனர். பாகியான் என்பவன் குறிப்பிடத் தக்கவன். இவன் இந்தியா வந்து சேர 6 ஆண்டுகள்; பாடலிபுரத்தில் தங்கி வடமொழி கற்றிட 3 ஆண்டுகள். பின் இவனால் எடுத்துச் செல்லப்பட்ட வடமொழி நூல்கள் சீனமொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

இவ்வாறாக, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே பெரிய தொடர்பு ஏற்பட்டது. 7 ஆம் நூற்றாண்டில் வந்த யுவான் சுவாங்தான் 2

ஆண்டுகாலம் நாலந்தா பல்கலைக் கழகத்தில் இருந்து பயிற்சி பெற்றவன். பின் சீனா திரும்பியதும் 74 இந்திய நூல்களைச் சீனமொழியில் மொழி பெயர்த்தான். அடுத்து வந்த இட் ஸிங் என்பவனும் இந்தியா வந்து திரும்பியதும் 56 நூல்களைச் சீனமொழியில் மொழி பெயர்த்தான். சமஸ்கிருத - சீன மொழி அகராதியையும் இவன் உருவாக்கினான்.

இங்கிருந்து, சென்ற தர்மதேவன் என்பான் பல வடமொழி நூல்களைச் சீனமொழியில் ஆக்கி வழங்கினான்.

வடஇந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட தரை வழித் தொடர்பில் அறிஞர்கள், புத்தத் துறவிகள் பரிமாற்றம் இருந்தது. ஏராளமான வடமொழி நூல்கள் சீனமொழியில் அறிமுகமாகி விட்டன. எனவே வடமொழிதான் இந்தியாவின் தொன்மை மொழி என்று அவர்கள் சொல்லும் நிலைமை வந்துவிட்டது.

அப்படியானால் சீனாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் தொடர்பு இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். இருந்தது. நன்றாகவே இருந்தது. கி.மு.140-87 க்கு முந்தியே சீனா - தமிழகத் தொடர்பு இருந்தது. அதிலும் கடல்வழியாக ஆம்! கப்பல் பயணத்தோடு தொடர்பு ஏற்பட்டது. தமிழர்கள் பெரிய கப்பல்களைக் கட்டிக் கடலில் செலுத்த வல்லவர்களாக இருந்தார்கள். இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகள், சீனா ஆகியவற்றுடன் வணிகத் தொடர்பு ஏற்பட்டது. சீனர்கள் பலரும் தமிழகம் வந்தனர். தமிழகத்துக் கப்பல்கள் தாம் இவர்களுக்கு உதவின. கி.பி.யில் தான் சீனர்களும் கப்பல் கட்டத் தொடங்கினர். சீன வணிகர்கள் பொன்னையும் பட்டையும் நிரப்பிக் கொண்டு ஓர் ஆண்டு பயணத்தின் பின் காஞ்சிபுரம் (மாமல்லபுரம்) துறைமுகம் வந்தனர். இங்கிருந்து முத்து, பவழம், இரத்தினம் ஆகிய வற்றைப் பெற்றுச் சென்றனர். இவற்றுக்கும், யானைத் தந்தங்களுக்கும் சீனாவில் பெரும் மதிப்பு. சீனாவிலிருந்து வந்த சீனப்பட்டு, சீனாக்கற் கண்டு, சீனவெடி, மருந்து, பீங்கான் ஆகியவை தமிழகத்தில் பெருமளவில் விற்கப்பட்டன.

இந்த வணிகம் நான்காம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை நடந்து வந்தது. பல்லவர் காலமும், சோழர் காலமும் இவற்றில் அடங்கும்.

அனைத்தும் பண்டமாற்று முறையில் (Bartar Economy) நடை பெற்றன. காயல், நாகை, கொல்லம், கோழிக்கோடு ஆகிய துறை முகங்களிலும் சீனப் பொருள்கள் குவிந்தன. இங்கும், சீனத் துறை முகங்களிலும் தமிழும் சீன மொழியும் தெரிந்தவர்கள் பலர் இருந்தார்கள் என்பதும் அறியப்படுகிறது.

இரு நாடுகட்கும் இடையில் தூதுக்குழுக்கள் சென்று வந்தன. பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இங்கிருந்து அனுப்பப்பட்ட ஒரு தூதுவன்

தென்னிந்தியாவில் மணம் கமழும் செடி, கொடிகள் உள்ளதையும், தேன், மிளகு, இஞ்சி பெருமளவில் கிடைப்பதையும், பூவேலையுடன் கூடிய மெல்லிய துணிகள் அதிகம் என்பதையும் எடுத்துச் சொன்னதாகச் சீன வரலாறு கூறுகிறது.

சோழர்கள் காலத்தில் இராசராசசோழனால் அனுப்பப்பட்ட தூதுக் குழு 1015 ஆம் ஆண்டு சீனாவை அடைந்தது. இக்குழு சென்றடைய மூன்று ஆண்டுகள் ஆயினவாம். கப்பல் பயணம் மட்டும் எட்டு மாதகாலம். இராசேந்திர சோழன் காலத்துத் தூதுக்குழு 1033 ஆம் ஆண்டிலும், முதலாம் குலோத்துங்க சோழன் காலத் தூதுக்குழு 1077 ஆம் ஆண்டிலும் சீனா சென்றடைந்தன. மூன்றாம் குழு கர்ப்பூரம், பூவேலைப்பாடுள்ள துணிகள், தந்தங்கள், மணப் பொருள்கள், பன்னீர் முதலியவற்றை எடுத்துச் சென்றது.

"சீனாவில் பொதுவாக இந்தியர்களுடைய, சிறப்பாகத் தமிழர் களுடைய நுண்ணறிவு, தொழில் திறமை, மொழிப் புலமை முதலியவற்றிற்குப் பெருமதிப்பு இருந்து வந்ததென்பது மறுக்க முடியாத உண்மை" என்கிறார் சாமிநாத சர்மா.

பெரு வியப்பு என்னவென்றால் வட இந்தியாவிலிருந்து சீனா சென்ற சிலரும், வடஇந்தியாவுக்கு வந்த சீனர் சிலரும் வடமொழி சார்ந்த பல படைப்புகளை எடுத்துச் சென்று சீனமொழியில் மொழிபெயர்த்துள்ளனர். சமஸ்கிருத-சீன அகராதி வெளியிடும் அளவிற்கு அங்கு வடமொழி வேரூன்றியது. ஆனால் தமிழக - சீன உறவில் யாரும் தமிழ்ப்படைப்புகளை எடுத்துச் சென்றதாகவோ, அவை சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட தாகவோ தெரியவில்லை. நம் சங்ககாலப் படைப்புகள் கூட ஓலைச் சுவடி களில் இருந்து கொண்டு வெளியே வர முடியாத நிலை இருந்துள்ள தாகவே கொள்ள வேண்டும்.

தமிழர் - சீனர்களிடையே வணிக உறவு, அரசியல் தூது உறவுகள் வளர்ந்த அளவுக்கு, மொழிசார்ந்த பரிமாற்றங்கள் இல்லை. குறிப்பிடும்படி ஏதும் இல்லை. யுவான் சுவாங்தான் நம்மைப் பற்றி நன்கு எடுத்துச் சொல்லியிருக்கிறான். நரசிம்ம பல்லவன் காலத்தில் காஞ்சிபுரம் வந்த யுவான் சுவாங் (கி.பி.640) காஞ்சியில் அப்போது 100 புத்த மடங்கள் - அவற்றில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட புத்த பிக்குகள் இருந்துள்ளதைக் குறிப்பிடுகிறான் (இன்று புத்த மதம் தமிழ் நாட்டில் இருக்கிறதா? ... ?)

தொண்டை மண்டலத்தார் அறிவுக்கு மதிப்பளிப்பதாகவும் பாண்டி நாட்டார் முத்துகளை விற்று நாட்டையே ஒரு களஞ்சியமாக வைத்திருந்தனர் என்றும் கூறுகிறான். நமது சிற்பக் கலையும், ஓவியக் கலையும் சீனாவில் வரவேற்புப் பெற்றன. நம் கலைஞர்கள் அங்குச் சென்று தம் திறமைகளை வெளிப்படுத்தினர்.

நமது இசைக்கும் அங்கு மதிப்பும் வரவேற்பும் இருந்தன. நமது கணிதவியல், வான நூல் அறிவு. மருத்துவ நுண்கலை ஆகியவை சீனர்களிடம் செல்வாக்குப் பெற்றன.

இப்படியாக 1949 வரையிலான சீன வரலாற்றை ஓரளவு உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இனி, இன்றைய சீனாவுக்கு வருவோமா?

சீனநாடு 1949 ஆம் ஆண்டில் விடுதலை பெற்ற நாடாகியது. இது, 3,691,502 சதுர கற்கள் (Miles) பரப்புடைய பெரிய நாடு. கிழக்காசியாவி லேயே மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்டது இது. ஏன்? உலகத்திலேயே மக்கள் தொகைப் பெருக்கம் மிகுந்த நாடு இது. இன்றைய மக்கள் தொகை 130 கோடியாகும். மொத்த மக்கள் தொகையில் சீனர்கள் மட்டும் 94% ஆவர். எஞ்சியுள்ள மக்கள் 56 சிறுபான்மைத் தேசிய இனங் களுக்குள் அடங்குவர்.

மியா-டி-யாவ், தாய், துருக்கிஷ் போன்றவை சிறுபான்மையர் மொழிகளாகும்.

அவர்கள் அனைவர்க்கும் தங்கள் மொழிகளைப் பேணவும், விரும்பிய சமயத்தைப் பின்பற்றவும் தன்னாட்சி உரிமையே தரப் பட்டுள்ளது. 'தமிழில் வழிபாடு' செய்ய வேண்டும் என்று கேட்பவர்கள் நாட்டைப் பிரிவினைக்கு ஆளாக்குகிறார்கள் என்று சொல்லும் பொறுப் பற்ற பேச்சுகளுக்கு அங்கே இடமில்லை. அதே நேரத்தில் நாட்டின் சட்ட திட்டங்களை அறிந்து பின்பற்றவும் நடைமுறை வாழ்க்கையில் எல்லாருடனும் கலந்து பழகவும் சீனமொழி கற்றிருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சீனமொழி பேசுபவர்களில் 95% பேர் சீனாவில் வாழ்கிறார்கள். ஏனையோர் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள். ஐக்கிய நாட்டு அவையில் உள்ள ஐந்து ஆட்சிமொழிகளில் சீனமொழியும் ஒன்று. பல்வேறு மொழி வழக்குகள் இருந்தாலும், 'மாண்டரின்' மொழிதான் சீனமொழியாகச் செல்வாக்குப் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சீனமொழியில் இலக்கணத் தொன்மை இல்லை என்பர். எனினும் சொற்களில் 'பகுபத' உறுப்புகளின் முறையான ஒழுங்கு, சொல்லமைப்பதில் முறையான கட்டமைப்பு, சொற்களை இணைத்து வாக்கியமாக்குவதில் தெளிவான கட்டுக்கோப்பு ஆகியவை உள்ளன.

சீனமொழி தொன்மையான மொழியாகும். தற்போதைய மாண்டரின் மொழியை விடப் பழைய சீனமொழியில் ஒலிகளின் வளமான செல்வாக்கு அதிகமாகவே உள்ளது. இந்த 20 ஆம் நூற்றாண்டில், மொழிசார்ந்த 3 பேரியக்கங்களைப் பார்க்கிறோம்.

1. வட்டார இலக்கிய இயக்கம்
2. தேசியமொழி மேம்பாட்டு இயக்கம்
3. எழுதும் முறையில் சீர்திருத்தங்கள் செய்யும் இயக்கம்.

கி.பி. 654 வரை மக்கள் எப்படிப் பேசினார்களோ, அந்தப் பேச்சு மொழி தான் அப்படியே எழுத்து மொழியாக இருந்தது (நமது சங்க இலக்கிய நடையை எண்ணிப் பார்த்துக் கொள்ளவும்) ஆனால் தற்போது பேச்சு நடையாக வரும் கொச்சை வழக்குகள் பெருமளவு கைவிடப் பட்டுள்ளன (கி. இராசநாராயணன் கவனத்துக்கு) 'தேசிய மொழி' ஆக்கம் என்பது 1910 ஆம் ஆண்டிலேயே தொடங்கப் பட்டது. 1960இல் எழுத்து வடிவங்களை எளிமைப்படுத்தும் முறை செயற்படுத்தப்பட்டது.

3000 ஆண்டுகளாக இடைமறிப்பும், மறைப்பும் இன்றி உலக இலக்கிய மரபுகளுக்குத் தன் பங்களிப்பைச் செய்து வரும் தொன்மை மொழிகளுள் ஒன்றாகச் சீன மொழி திகழ்கின்றது. கி.மு.1400க்கும் 1122க்கும் இடையில் எலும்புகளிலும், ஆமை ஓடுகளிலும் பொறிக்கப்பட்ட சீன மொழிக் கல்வெட்டுகள் இப்போது கிடைத்துள்ளன. (நமது கல்வெட்டுகள் பல்லவர் காலத்திலிருந்துதான் தொடங்குகின்றன).

கன்பூசியசு எனும் அறிஞர் வாழ்ந்த காலம் (கி.மு.551-479). 'Chu-y-van' சூ-ஓய்-வான் என்பவர்தாம் முதற்கவிஞர். (அவர் பெயரால் தான் சீன நாணயம் 'Yuvan' எனும் பெயர் பெறுகிறதோ?)

கி.மு.400இல்தான் சீனமொழியினர் உரைநடையில் எழுதத் தொடங்கினர்.

பலவகைகளில் பண்பாட்டுக் கூறுகள் செழித்து வளர்ந்தன. 8ஆம் நூற்றாண்டிலேயே அச்சுக்கலை வந்துவிட்டது. (நமது முதல் தமிழ் நூல் 1578இல் தான் அச்சிடப்பட்டது) 1044 ஆம் ஆண்டிலேயே பொதுமக்களுக் கான பொதுப்பள்ளிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

கி.பி.1234க்கும் 1368க்கும் இடையில் 600 நாடகங்கள் எழுதப் பட்டுள்ளன. அப்போது 100 நாடக ஆசிரியர்கள் இருந்துள்ளனர்.

1949 இல் நரவண்டிகள் தடைசெய்யப்பட்டன. தற்போது மிகமிகச் சில .... அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறுக்குத் தெருக்களில் உள்ளன. எனினும் இவை, முதன்மைச் சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் தலை காட்டுவதே இல்லை.

மின்தடை என்பது அறவே இல்லை. தண்ணீரும், எரி ஆவியும் (Gas) குழாய் வழியே ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஒழுங்காக வந்துவிடுவ தால் இவை தொடர்பான சிக்கல்களும் இல்லை. இந்த மூன்றும் தடையின்றிக் கிடைக்க வகை செய்த பின் பொது மக்களுக்கு வேறு என்ன இடர் இருக்க முடியும்?

சீனாவில் உருவாக்கப்படும் பொறிகள் (இயந்திரம்) விலை குறைவாகவே உள்ளன. எனவே உலகில் பலர் இங்குப் பொறிகளைக் கொள் முதல் செய்து செல்கின்றனர்.

வீட்டில் 'வெப்ப ஆவி' யை இதயாக வெளியிடும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இது குளிர்காலத்தில் பிறர் வாட்டம் போக்கும் ஏற்பாடாகும். அதே நேரத்தில் கோடை காலத்தில் குளிர்ச்சி தருவதற் கென்றே 'குளிர் பதனக் கருவிகள்' வீட்டில் பொருத்தப்பட்டுள்ளன. எனவே எங்கும் மின்விசிறிகளைப் பார்க்க இயலவில்லை.

சந்தைப் பொருளாதாரம் மேலோங்கி உள்ளது. சில தலைவர்களின் அறிவிப்பு இதுதான். "முதலில் ஒரு சிலரைப் பணக்காரர் ஆக்குவோம், பின் நாம் அனைவரும் பணக்காரர் ஆவோம் என்பதுதான் அது. பிறநாட்டு முதலீடுகளை வருக! வருக! என வரவேற்கும் நாடாக அது உயர்ந்துள்ளது.

OOO

2

# பயண ஏற்பாடு

நான் எப்படிச் சீனாவுக்குப் போனேன் என்பதை இப்போது நினைத் தாலும் வியப்பாக இருக்கிறது. எதிர்பாராதது, இன்ப அதிர்ச்சி தரக்கூடியது என்றால் இது தான் போலும்.

முதலில் இதற்கெல்லாம் மூலகாரணமான முனைவர் வ.அய்.சுப்ர மணியம் அவர்களைப்பற்றித் தாம் எடுத்துச் சொல்ல வேண்டும். 1981 இல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராகப் பொறுப்பேற்றவர். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகம் பெரும் விழாக் கோலத்தோடு முகம் காட்டியது. அந்த விழாவில் யாதவர் கல்லூரி முதல்வராக இருந்த எனக்கும் ஒரு பங்கு. ஒரு வழக்காடு மன்றம். அப்போது அமைச்சராக இருந்த பண்ணுருட்டி இராமச் சந்திரன் நடுவர்; நானும் திருவாரூர் தங்கராசுவும் வழக்காடுபவர்கள். "தந்தை பெரியாரின் கொள்கைகளில் மேலோங்கி நிற்பது பகுத்தறிவா? இன உணர்வா?" இருவரும் சிறப்பாகவே தருக்கமிட்டோம். முதல்வர் எம்.ஜி.ஆரும் பிற அமைச்சர்களும் இருந்து கேட்டனர்.

அந்த வேளையில், ஓர் ஓய்வில் புதிய துணைவேந்தரான முனைவர் வ.அய்.சு.வைப் பொதுவாகக் கண்டு பேசி வாழ்த்தி விட்டுத் திரும்பினேன்.

அவர் அங்குப் பணியாற்றிய காலங்களில் மூன்று நான்கு முறை கருத்தரங்குகளில் பங்கு பெற்றேன். அதனால் அவரிடம் ஒரு நெருக்கம் ஏற்பட்டது.

இரண்டாம் முறை தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றும் அவர் அதிக காலம் அங்கு நீடிக்கவில்லை. இடையிலேயே விலகிச் சென்று விட்டார். அவர் உருவாக்கி வளர்த்துள்ள நிறுவனம் தான் 'அனைத்துலக திராவிட மொழியியற் பள்ளி' எனும் பெயர் கொண்ட அமைப்பு. (International School of Dravidian Linguistics) திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள இந்த நிறுவனம் திராவிட மொழிகளில் மட்டுமின்றி, வங்காளம், ஒரியா, போன்ற மொழிகளிலும் ஈடுபாடு காட்டி உழைத்து வருகிறது.

இந்த நிறுவனத்தில் கட்டடங்கள் எழுவதற்கு, தமிழ்நாடு, புதுவை, கேரளம், கருநாடகம், ஆந்திர மாநில அரசுகள் அனைத்தும் நிதி உதவி

செய்துள்ளன. மிகச் சிறந்த நிறுவனத்தை நடத்தி வரும் வ.அய்.சு. அவர்கள் இடைக்காலத்தில் ஆந்திரமாநிலம் குப்பத்தில் அமைந்துள்ள திராவிடப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராகவே இருந்தவர். எனினும் அப் பதவியில் தொடரவில்லை.

தன் பிள்ளையைப் போல் வளர்த்து வரும் ISDL தான் அவருக்கு எல்லாம்.

என்னை ஓர் அரசியல் வாதியாக இவர் என்றும் பார்த்ததில்லை, நானும் அவரிடம் அப்படிப் பழகியதில்லை.

பல சூழ்நிலைகளில் - பல இடங்களில் நாங்கள் சந்தித்துப் பேசுவதுண்டு. பல செய்திகளைப் பரிமாறிக் கொள்வதுண்டு.

அவர்க்கு ஒரு சிந்தனை. தொன்மை மொழிகளாகக் குறிப்பிடப்படும் ஆறு மொழிகளில் தமிழும் சீனமும் வாழும் மொழிகள், சமஸ்கிருதமும் எபிரேயமும் (Hebrew) இறந்து போன மொழிகள். ஆனால் உலக அதிசயங்களில் ஒன்றாக - இன்று எபிரேயம் - வாழும் மொழியாக - இசுரேல் நாட்டினை ஆளும் மொழியாகத் திகழ்கின்றது.

இட்லரின் கொடுமைக்கு ஆளாகி எங்கெங்கோ சிதறிக் கிடந்த யூதர்கள் எல்லாம் ஒன்று திரண்டு இசுரேல் நாட்டை அமைத்துக் கொண்டார்கள். அவர்களை ஒருங்கிணைக்கும் வகையில் எபிரேய மொழியைத் தூக்கிப் பிடித்தார்கள். ஆம்! இறந்துபோனதாக -வழக்கற்றுப் போனதாகக் கருதப்பட்ட எபிரேய மொழி மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. மேலும் வளர்ப்பானேன்! இன்று இசுரேல் நாட்டின் ஆட்சி மொழி எபிரேயம், உயர்கல்வி வரையிலும் அந்நாட்டின் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் இன்று எபிரேய மொழிதான் பயிற்றுமொழி!

இது உலகில் பலருக்கும் வியப்பளித்தது. வ.அய்.சு. அவர்களும் மிகவும் வியந்தார். How they have revived their language to suit the modern world? இதுதான் அவரது கேள்வி.

எனவே இதனை ஆராய வேண்டும் என அவர் நினைத்தார்.

இந்த இடத்தில் தான் நான் வருகிறேன். 1989 முதல் நேரடி அரசியலில் இருப்பவன் நான்; ஒரு முழுநேர அரசியல்வாதியாக இயங்குபவன். இடையில் 'மாண்புமிகு' பொறுப்புகளை ஏந்தியவன். 1.4.2001 க்குப் பின் என் அரசியல் வாழ்வில் ஒரு திருப்பம். இன்றும் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்த முழுநேர அரசியல்வாதியாக இருப்பவன்.

ஆனால் வ.அய்.சு. என்னை அப்படிப் பார்க்கவில்லை. ஐந்து ஆண்டுகாலம் தமிழை நிலை நிறுத்திடப் பல முனைகளிலும் முனைந்தவன் என்பதை மனத்திற் கொண்டு இதே முனைகளில் எபிரேய மொழி எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிய என்னால் முடியும் எனும் நம்பிக்கை அவருக்கு இருந்தது.

என் அரசியல் பற்றி அவர் துளியும் கவலைப்படவில்லை. என் மொழி ஆய்வில் அரசியலைக் கலக்கமாட்டேன் என்றும், கொடுத்த பணியைச் சிறப்பாகச் செய்வேன் என்றும் அவர் நம்பினார். எனவே இசுரேலுக்குச் சென்று எபிரேய மொழியை ஆராய்ந்து வரவேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் எழுதுகிறார்; "Dr.Tamilkudimakan, the former Minister for Tamil Culture and a devoted Tamil Scholar was awarded a Fellowship to visit Israel to find out from old Hebrew how the subjects of studies in the Universities have been changed to Modern Hebrew" நானும் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். எல்லா நாடுகளிலும் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளவும், வரவேற்கவும், தங்கிட ஏற்பாடு செய்யவும், இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தவும் ஒருவரோ பலரோ இருக்கிறார்கள். ஆனால் இசுரேல் நாட்டில் அப்படி எந்தத் தொடர்பும் இல்லை. முன்பின் அறியாத நாட்டில் எப்படிச் சென்று, நாடெங்கிலும் சுற்றி ஆராய்ந்துவிட்டு வருவது என்பது விளங்கவில்லை. அதற்காகப் பின் வாங்க முடியுமா!

'பிரித்தானிய கலைக்களஞ்சியம்' (Ency. of Brittanica) என்ற நூலைப் புரட்டி, இசுரேல் நாட்டைப் பற்றியும், எபிரேய மொழி பற்றியும் வெளிவந்துள்ள எல்லாக் குறிப்புகளையும் தொடுத்தேன். அதிலும், ISDL இல் உள்ள தொல்காப்பியர் அரங்கில் அமைந்துள்ள நூலகத்திலிருந்து குறிப்புகளைத் தொகுத்தேன். இதற்காக 2 நாள்கள் திருவனந்தபுரத்தில் தங்கினேன்.

வ.அய்.சு. இசுரேலில் உள்ள பார்-இலான் (Bar-Ilan) பல்கலைக் கழகத்துக்கு எழுதினார் - விடையும் வந்தது. பல்கலைக் கழகத்துக்குள் தங்கிட வாய்ப்பில்லை என்றும் வெளியில் உள்ள விடுதியில் தங்கிக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் சி.பி.இராமசாமி ஐயர் அறக்கட்டளையின் இயக்குநராக உள்ள டாக்டர் நந்திதா கிருட்டிணா இசுரேல் நாட்டின் மதிப்புறு துணைத் தூதராக உள்ளார் என்று அறிந்து, நேரில் அவரைச் சந்தித்துப் பேசினேன். அவரும் மும்பையில் உள்ள இசுரேலியத் தூதரகத்துக்கு விவரங்களை அனுப்பி வைத்து விரைவில் நுழைவு இசைவு (visa) கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

· இதற்கிடையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வந்து தமிழ் பயின்று செல்லும் வெளிநாட்டு மாணவர்கள் பலர் உண்டு என்பதால் அதில் இசுரேல் நாட்டைச் சார்ந்தவர்கள் எவரேனும் உண்டா என்று பார்த்தோம். செருசலத்தைச் சேர்ந்த செல்வி. மிரியம் இட்சிகாஸ் (Miriam Irsikas) என்பவர் 1989 இல் இங்குப் பயின்றுள்ளார். அவருக்கு மடல் எழுதப்பட்டது.

இந்த நேரத்தில் தான் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என் பணிக்கு உதவ முன் வந்தது. இயக்குநர் மு.பொன்னவைக்கோ மிகமிக உதவியாக இருந்தார். இப்போது தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின்

வாயிலாகத் தமிழ் பயில விரும்புவோர் உலகமெங்கு மிருந்து தொடர்பு கொண்டு வருகின்றனர். அப்படித் தொடர்பு கொண்டவர்களில் இசுரேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் முகவரியைத் தேடினோம். இரெகோவாட் நகரில் வாழும் ஜோஸ்லைன் ஒருவர். மற்றொருவர் பார்-இலான் பல்கலைக் கழகத்தில் வேதியியல் துறையில் ஆய்வு மேற்கொண்டுள்ள மாணிக்கம் சிவகுமார். இவர் முகவரியும் பெயரும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. தமிழ் இணையப் பல்கலைக் கழகம் வாயிலாகவே தொடர்பு கொண்டோம்.

பொன்னவைக்கோ விடுத்த (E.mail) மடலுக்கு மாணிக்கம் சிவகுமார் விரிவான விடை எழுதியிருந்தார். தங்குவதற்கான ஏற்பாடு செய்து விடலாம் என்றும் ஒரு நாளைக்கு 25 முதல் 30 டாலர் வரை செலவாகும் (ரூ.1250 முல் 1500 வரை) என்றும், தான் ஒரு பல்கலைக்கழகத்தில் பொறுப்பில் இருப்பதால் தன்னால் தமிழ்க் குடிமகனுடன் 14 நாள்களும் பயணம் செய்ய முடியாது என்றும் ஒரு மொழி பெயர்ப்பாளரை ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்றும் அவருக்கு 14 நாள்களுக்கு ஏறத்தாழ 1000 டாலர்தர வேண்டியிருக்கும் (ரூ.50,000) என்றும் எழுதியிருந்தார்.

தங்குதல், மொழிபெயர்ப்பாளர்க்கே ரூ.70,000 வரை செலவாகும் என்று தெரிந்தது.

எனினும் அவர் கருத்தினை ஏற்றுப் புறப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டது. 19.9.2002 இல் மும்பை வழியாக டெல்அவிவ் செல்வ தென்றும் 7.10.2002 அன்று திரும்புவதென்றும் முடிவு செய்து பயணச் சீட்டும் பதிவு செய்தாகிவிட்டது.

இதற்கிடையில் இசுரேல் நாட்டுக்கும் பாலத்தீனத்துக்கும் இடையி லான கசப்பு முற்றியுள்ள நிலை. அவ்வப்போது வேட்டு ஓசைகள் அங்கே கேட்டுக் கொண்டிருந்தன. மனித வெடிகுண்டுகள் சிதறிக் கொண்டிருந்தன. எனவே இவற்றை எல்லாம் மனத்திற் கொண்டு மா. சிவகுமார் ஒரு மடல் எழுதியிருந்தார். இப்போதுள்ள சூழ்நிலையில் தாங்களே பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் அதனால் தமிழ்க்குடிமகன் இந்த நேரத்தில் இங்கு வந்து நாடு முழுவதும் சுற்றி வருவது பாதுகாப்பானதாக இல்லை என்றும் சூழ்நிலை சரியானதும் வரலாமென்றும் தெரிவித்தார். ஏற்பாடு செய்த மா.சிவகுமாரே இப்படி எழுதிவிட்டமையால் நானும் பொன்னவைக்கோவும் கலந்து பேசினோம். மா.சிவகுமார் கருத்தை வ.அய்.சு வுக்கும் தெரிவித்தோம். அவரும் தற்போது வேண்டா என்றே கருத்துத் தெரிவித்தார். இது தொடர்பாக வ.அய்.சு. வே ஒரு மடல் எழுதிவிட்டார்.

அங்குள்ள சூழ்நிலையில் அவர் அங்குச் செல்வது சரியாக இராது. மேலும், அங்கு வாழ்க்கைப் பாதுகாப்பே கேள்விக் குறியாகிவிட்டதாகப் பொன்னவைக்கோவும் தெரிவித்து விட்டார்.

He could not go over there because of the disturbed condition there. A friend of Dr. Ponnavaikko also emailed that safety of life is questionable என்று எழுதிவிட்டார். எனினும், வ.அய்.சு வின் மனம் ஓயவில்லை, இசுரேலுக்குப் பதிலாக, சீனா சென்று சீனமொழி குறித்து ஆய்வு செய்துவரலாம் என்று கருதினார். நான் சீனாவிற்குச் சென்றுவர முடியுமா என்று கேட்டு எழுதினார். அவரது மடல் இது "It was good to talk from Chennai over Phone. The friend at Tel Aviv has not given a comfortable picture about the situation there. Though you are courageous to face any situation, for Tamil research, we are concerned about your safety. So we all think that you may go to China and explore the change to Chinese. Ofcourse, that country never had any other language for education in its long history. Except in the border areas, it has only one language Chinese with many dialects spoken by its people. So the situation is different from Israel where an ancient language, old Hebrew like Tamil has been modernized into a language to be the medium of all subjects in the University". தற்போது தாங்கள் டெல் அவிவ் செல்வது சரியாக இராது என்று நண்பர் சொல்லிவிட்டார். மொழி ஆய்வுக்காகத் தாங்கள் எதையும் துணிந்து எதிர்கொள்வீர்கள் என்றாலும், தங்கள் பாதுகாப்பில் எங்களுக்குக் கவலை உள்ளது. எனவே, தாங்கள் சீனா சென்று தொன்மையான சீனமொழியை ஆய்ந்து வரவேண்டும்'' மொழி ஆய்விற்காக நான் என்றும் துணிந்து செல்வேன் என்று அவர் நம்பினாலும், அதில் வெற்றிவாகை சூடி வரவேண்டும் என்றும் அவர் கருதினார். எனவே இசுரேல் பயணம் கைவிடப்பட்டது. அவருடைய கருத்தை ஏற்று நானும் சீனா செல்வதற்கு உடன்பட்டேன்.

சீனா செல்வதில் எந்தச் சிக்கலும் இல்லை. அதற்கு எனக்குக் கிடைத்த முதல் காரணம் பெய்சிங் வானொலியில் தமிழ் வல்லுநராகப் பணியாற்றும் முனைவர் கடிகாசலம் அங்கிருப்பதுதான். உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்திலிருந்து 'அயலிடைப் பணி' யில் அனுப்பப்பட்டவர் அவர். ஏற்கெனவே முனைவர் ச.வே.சு. காலத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டு உரியகாலம் முடிந்த பின் திரும்ப வந்துவிட்டார். பிறகு மீண்டும் அழைப்பு வந்தபோது அவரை ஏற்றுக் கொள்ளச் செய்து - விடு வித்து அங்கு அனுப்பியது அப்போது அமைச்சராக இருந்த நான்தான் என்பதால் என்மீது அவர்க்கு மிகுந்த மதிப்பு இருந்தது.

உடனே தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வாயிலாகப் பொன்ன-வைக்கோ மின் அஞ்சலில் பேசத் தொடங்கிவிட்டார். என் மடல்கள் அவரது விடைகள் என விரைவில் பரிமாற்றம் நடைபெற்று முடிந்தது.

அவர் தன் வீட்டில் தனியாகத் தங்கியிருப்பதால் நானும் அங்கே தங்கியிருப்பதில் இடர் ஒன்றும் இல்லை என்றார். தனியே வாழ்ந்து வரும் அவருக்கு நான் உடனிருப்பது ஆறுதலாக இருக்கும் என்றார்.

மேலும் பெய்சிங் வானொலியில் பணியாற்றும் சுன் கோ சாங் என்னுடன் எல்லா இடங்களுக்கும் வந்து மொழிபெயர்ப்பாளராகவும் பணி யாற்றுவதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இசுரேல் சென்றிருந்தால் இதற்கு 70,000 உரூபா செலவு, சீனாவில் இந்த இரண்டும் இல்லை.

மேலும், கடிகாசலம் வழங்கும் தமிழ்நாட்டுச் சாப்பாடு இருப்பதால் அந்தக் கவலையும் இல்லை. எனினும் சியாங்காயில் இருந்த இரண்டு நாள்கள், மற்றும் பெய்சிங்கில் ஒரு சிலர் அளித்த விருந்துகளில் மட்டும் சீன உணவு சாப்பிட நேர்ந்தது. சற்று இடர் இருந்தாலும், அந்த வாடை என்னைச் சற்றுத் திகைக்க வைத்தாலும் முட்டை, இறால், மீன் மற்றும் காய்கறி வகைகளை முழுமையாக உண்ண வாய்ப்புக் கிடைத்தது.

மேலும் 'நுழைவு இசைவு' (விசா) பெறுவதற்காகத் திருவாட்டி கலையரசி கையொப்பத்துடன் பெய்சிங் வானொலியே ஓர் அழைப்பு மடலை அனுப்பிவைத்தது. அதனைக் கொண்டு விண்ணப்பித்தோம். வழக்கமாக என்னை வெளிநாட்டுக்கு அனுப்பும் நண்பர் முரளி மூன்றே நாள்களில் இசைவு முத்திரை பெற்ற கடவுச் சீட்டு பயணச் சீட்டு ஆகிய எல்லாவற்றையும் கொண்டு வந்துவிட்டார்.

இந்த வகையில் சீனாவுடன் மின் அஞ்சலில் செய்திகளைப் பரிமாறி நான் விரைந்து பயணம் மேற்கொள்ள உதவிய அருமை நண்பர் பொன்னவைக்கோவை என்றும் மறக்க முடியாது. தமிழ் என்றால் அவர்க்கு உயிர். தமிழ்க்குடிமகன் மீதும் தான்.

வ.அய்.சு. அவர்கள் இப்பயணத்துக்காக உரூபாய் 1,10,000/–அளித் திருந்தார். கூடுதல் செலவானாலும் ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். புறப்படுமுன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தில் இரண்டு நாள் அமர்ந்து சீனநாடு பற்றியும் சீனமொழி பற்றியும் வெளிவந்த குறிப்பு களையும் எடுத்துக் கொண்டேன். மணியன் எழுதிய பயணநூலும் எனக்கு மிகவும் பயன்பட்டது.

15.10.2002 அன்று புறப்பட்டு 30.10.2002 அன்று திரும்புவது என முடிவு செய்து பயணச்சீட்டுகளும் உறுதி செய்யப்பட்டன. எதிர்பாராமல் என் தலைமைக் கழகம் தொடர் பொதுக்கூட்டங்களை அறிவித்து நான்கு இடங்களில் நான் பேச வேண்டுமென்று பட்டியலிட்டு விட்டது. கட்சி இட்ட கட்டளையைப் புறம்தள்ள விரும்பாமல் பேசிவிட்டே செல்வது என்று முடிவு செய்தேன். பயணச் சீட்டுகள் அதற்கேற்ப மாற்றிப் பதிவு செய்யப்பட்டன. 17.10.2002 வீரபாண்டி ஒன்றியம் 18.10.2002 வாழப்பாடி ஒன்றியம் 19.10.2002 ஆத்தூர் ஒன்றியம் 20.10.2002 சங்ககிரி ஆகிய நான்கு கூட்டங்களையும் முடித்து விட்டு 20.10.2002 இரவே சேரன் விரைவு வண்டியில் சென்னைக்குப் புறப்பட்டேன். 21.10.2002 அன்று கடவுச்சீட்டு, பயணச்சீட்டு, செலவுக்கான பணம் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து கொண்டு புறப்பட அணியமானேன். இதற்கிடையில் வ.அய்.சு. சீனாவில் உள்ள நிறுவனங்கட்கும் முக்கியமானவர்கட்கும் கொடுக்கலாம் என்பதற்

காகச் சில நூல்களை அனுப்பி வைத்திருந்தார். Handbook of Tamilnadu, Handbook of Kerala, Handbook of West Bengal, Dravidian Encydopaedia ஆகியவை பெரிய நூல்கள். என் தனிச் சுமைகளைக் குறைத்து இவற்றைப் பெட்டியில் எடுத்துக் கொண்டேன்.

அன்று இரவு புறப்பட்டேன். சென்னையிலிருந்து சிங்கப்பூர், சிங்கப்பூரிலிருந்து பெய்சிங். அதே வழியில் திரும்புதல் என்றவாறு திட்டமிடப்பட்டது. எல்லாமே சிங்கப்பூர் ஏர்லைன்சு வானூர்திகள் தாம். உலகத்தில் நன்கு நடத்தப்படும் நம்பகமான வானூர்தியாக அது திகழ்கிறது.

21.10.2002 இரவு 11.30 க்கு வானூர்தி. நண்பர் முரளி உடன் வந்திருந்து எல்லா ஏற்பாடுகளையும் முடித்துக் கையில் கொடுத்து வழியனுப்பினார். மருமகன், மகள், பேரப்பிள்ளைகள் விசயராகவன், சேகர் முதலானோர் வான்திடலுக்கு வந்து வழி அனுப்பி வைத்தனர்.

சிங்கப்பூருக்கு 3.45 மணி நேரம் பயணம். இரவு நேரமானதால் ஒரு தூக்கம். 22.10.2002 காலை 6 மணிக்கெல்லாம் சிங்கப்பூர் சென்றடைந்தேன். இங்கிருந்து மாறிச் செல்வதால் (Transit) வேறு யாரையும் வரச் சொல்லிச் சொல்லவில்லை. காரணம் நானும் வெளியே போகமுடியாது. அடுத்த வானூர்திக்குக் குறுகிய நேரம் தான் இருந்தது. என்றாலும் வான்திடலிலிருந்தே கலைச்செல்வனுக்கும் பன்னீர்ச் செல்வத்துக்கும் தொலைபேசினேன். வான்திடலிலிருந்து உள்ளூர்க்குப் பேசுவதற்கும் கட்டணமில்லை. என் பயணநோக்கத்தைச் சொல்லி விட்டு 6.11.2002 இல் திரும்புவதாகவும் அப்போது சந்திப்பதாகவும் கூறினேன். கோவலங்கண்ணனின் 'செல்பேசி' எண்ணில் பேச முயன்றேன், கிடைக்கவில்லை. விடியற்காலமாகலின் எழுந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதி விட்டுவிட்டேன். ஆனால் காலை 7.50 க்குப் போட்ட போதும் கிடைக்கவில்லை.

இடையில் இரண்டு மணிநேரம் இடைவேளை. பல்துலக்கி, சிற்றுண்டி முடித்து அணியமானேன். பெரிய பெட்டிகள் அடுத்த வானூர்திக் குள் சென்றிருக்கும். கையில், ஒரு பெட்டி மட்டும் தான். கிடைத்த நேரத்தில் ஒரு நூலைப் புரட்டினேன், சில பக்கங்கள் படித்தேன்.

நம் நேரத்தைவிட சிங்கப்பூரில் 2.30 மணி நேரம் அதிகம். ஆனால் சீனாவுக்கும் சிங்கப்பூர்க்கும் ஒரே நேரம். காலை 8.55 க்கு வானூர்தி. 6 மணி நேரம் பயணம்.

காலையில் சிற்றுண்டி, பகல் உணவு இரண்டும் வழங்கப்பட்டன. சற்று ஓய்வாகக் கண்ணயர்ந்தேன். விழித்திருந்த நேரத்தில் படிப்பில் ஆழ்ந்தேன்.

சென்னையிலிருந்து சிங்கப்பூர் வந்தபோது வானூர்தியில் ஏராள மான தமிழர்கள், ஒருசில சீனர்கள், ஒரு சில மலாய்க்காரர்கள், ஒரு சிலர் இந்தியாவின் பிற மாநில த்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் சிங்கப்பூரிலிருந்து பெய்சிங் செல்லும்போது வேறு ஒரு தமிழரையோ, இந்தியரையோ காண முடியவில்லை. எல்லாருமே சீனர்கள்.

சிங்கப்பூரே சீனர்களின் நாடு போலத்தான். 73% சீனர்கள். ஆட்சியே அவர்கள் கையில்தான். எனவே, சிங்கப்பூரிலிருந்து தங்கள் தாயகமான சீனாவிற்குப் பலர் சென்று திரும்புவதே இயல்பு. அதனால்தான் அவ்வளவு கூட்டம்.

மாலை 2.50 க்கு – வானூர்தி பெய்சிங்கில் தரையிறங்கியது. புதிய நாட்டைப் பார்க்கப் போகிறோம் என்ற பூரிப்புடன் இறங்கினேன். வழக்க மான வேலைகள் முடித்துப் பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு வெளியில் வந்தேன். எங்கும் எந்தக் கெடுபிடியும் இல்லை.

வெளியில் தலைகாட்டியதும் கடிகாசலம் கை ஆட்டி வரவேற்றார். அவருடன் வானொலி நிறுவன வண்டியுடன் குழந்தை வந்திருந்தார். மகிழ்வுடன் கிளம்பினேன்.

சீனாவில் குளிர் இருக்கும் என்று சொல்லப்பட்டது. நவம்பர் 1 முதல் மார்ச்சு 31 வரை கடுங்குளிர் என்றும் கூறினர். ஆனால் அக்டோபர் 22 இல் இவ்வளவு குளிரா?

ஆம்! நான் வெளியே வந்ததும் நடுங்கத் தொடங்கிவிட்டேன். கடிகாசலம் எவ்வளவு தெளிவானவர்! கையில் புதிய கம்பளிச் சட்டை (ஸ்வெட்டர்) வைத்திருந்தார். போட்டுக் கொள்ளச் சொன்னார். நானோ இப்படி எதுவும் எடுத்துச் செல்லவில்லை. தற்காப்புக்காக ஒரு சால்வை போட்டிருந்தேன். அது போதாது. எனவே, அவர் கொடுத்த சட்டையை மாட்டிக் கொண்டு மகிழுந்துக்குள் புகுந்து கொண்ட பிறகுதான் இயல்புநிலை வந்தது.

வ.அய்.சு. அனுப்பி வைத்தார், கடிகாசலம் வரவேற்றுப் பேணினார்.

ஒரு மணி நேரத்தில் 'நண்பர்கள் விடுதி' (Friendship Hotel) எனும் பெயர் தாங்கிய பெரிய விடுதி வளாகத்துக்குள் வந்திறங்கினோம்.

## மொழிப்பெயர்ப்பாளர்

மொழி பெயர்ப்பாளர் இல்லாமல் எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தைக் கொண்டோ, புலமை மிக்க ஆங்கிலத்தைக் கொண்டோ சீனாவில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியாது.

எனக்கு உறுதுணையாகவும், மொழி பெயர்ப்பாளராகவும் பீகிங் வானொலியின் தமிழ்ச்சேவைப் பிரிவின் முன்னாள் தலைவராக இருந்த சுன்கோசாங் அமைந்தார். நான் அவருடன் தமிழில் தொடுக்கும் வினா உரியவரிடம் சீனமொழியில் எடுத்துச் சொல்லப்பட்டு விடை சீனமொழி யில் வந்தவுடன் எனக்குத் தமிழில் தரப்படும்.

ooo

3

# அனைத்துலகச் சீன வானொலி (அ) பீகிங் வானொலி

அனைத்துலகச் சீன வானொலி எனப்படும் (China Radio International) பெய்சிங் வானொலி தமிழுக்கான சிறப்பிடத்தைத் தந்துள்ளது.

இங்கு 38 அயல்நாட்டுமொழிகளிலும், சீனம் உட்பட 4 உள்நாட்டு மொழிகளிலும் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டு உலகெங்கும் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. தற்போது இங்குள்ள தமிழ்ப் பிரிவின் தலைவராக (Tamil Service) இருப்பவர் சூ சுவான் ஹுவா (SHU JUAN HUA) ஆவார். இவர் தன் பெயரைக் கலையரசி என்று மாற்றி அமைத்துக் கொண்டு கோலோச்சுகிறார். இவர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 1991 ஆம் ஆண்டில் முறையாகத் தமிழ் பயின்றவர்.

இதில் பணியாற்றும் மற்றொருவர் சுன்கோ சாங் ஆவார். இவர்தான் கலையரசிக்கு முன்னால் இருந்த தலைவர் ஆவார். ஓய்வு பெற்றாலும், தற்போது அதே தமிழ்ப் பிரிவில் பகுதி நேரமாகப் பணியாற்றுகிறார். இவர்தான் என் சுற்றுப் பயணத்தில் மொழி பெயர்ப்பாளராக இருந்து துணை செய்தவர். இவர், கொழும்பு பல்கலைக் கழகத்தில் முறையாகத் தமிழ் பயின்றவர். மற்றொருவர் தமிழ் வல்லுநராகப் (Tamil Expert) பணியாற்றும் முனைவர் ந. கடிகாசலம் ஆவார். இவர், தமிழகத்தின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து அயலிடைப் பணியில் (on lien) அனுப்பப்பட்டவர். 1983 இல் சென்றவர். இடையில் வந்து பணியாற்றி விட்டு மீண்டும் சென்றவர். மறுபடி திரும்பி வந்தபின், நான் அமைச்சராக இருந்தபோது மீண்டும் அனுப்பப்பட்டார். இப்போது நான்காவது ஆண்டாக அங்கு பணி யாற்றி வருகிறார். அவருடைய பணிக்காலம் மட்டும் 11 ஆண்டுகள். எனவே சீனமொழியிலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும், அல்லது எந்த ஒரு பிற மொழியிலிருந்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட செய்திகளைச் செப்பம் செய்து வெளியிடும் பொறுப்பு அவர்க்கு. எனவே, நல்ல தமிழ் அங்கு கோலோச்சுகிறது என்பதை மறவாமல் குறிப்பிட வேண்டும். நான் சீனா சென்ற போது தங்கியிருந்ததும், தமிழ் நாட்டு உணவு உண்டதும் இவருடைய இல்லத்தில்தான். குடும்பத்தார் அனைவரும் சென்னை, நங்கநல்லூரில் இருக்கிறார்கள். இவர் அங்கு தனிக்கட்டை, எனவே என் வருகை அவருக்கும் மகிழ்ச்சியாகவே அமைந்தது.

38 அயல் நாட்டு மொழிகளில் பணி நடைபெற்றாலும் இந்தியாவில் தமிழும், இந்தியுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும் வங்காளமொழி ஒலிபரப்பும் உள்ளது. இது மேற்குவங்காளம், வங்காளதேசம் ஆகிய இரண்டையும் இணைத்து விடுகிறது. அடுத்தது உருதுமொழி. இது பாகித்தானையும், இந்தியாவில் உள்ள மக்களையும் இணைக்கின்றது.

அவர்களுடைய செய்திக் குறிப்பில் உள்ள கவிதையைப் படித்துப் பாருங்கள். அவர்கள் பணி பளிச்சென விளங்கும்.

"*சங்கம் கண்டு பாண்டியர் தமிழை வளர்த்தனர்.*
*வங்கம் கடந்து சேர சோழரும் பரப்பினர்.*
*தங்கத் தமிழைத் தாயெனக் கொள்ளும் மக்களைச்*
*சங்கமம் செய்வது சீன வானொலி ஒன்றுதான்.*

*மஞ்சள் ஆற்றுப் பகுதியில் பிறந்து நாளும்*
*விஞ்சும் வகையில் வளர்ந்து வாழும் சீனக்*
*கொஞ்சும் தாயின் குழந்தைகள் பேசும் தமிழ்தான்*
*மஞ்சு சூழும் வானில் வந்திடும் வளமாய்.*

*அறுபத்து மூன்று ஆகஸ்டில் துவங்கி, நாற்பது*
*பெருகிய ஆண்டில் லீலிஜிங், வாங்கூஷு, மூன்றாம்*
*பிறையென சுன்கோ சியாங், வளரும் நிலவென*
*திருமதி கன்சியங்குவா கண்டது வரலாறே.*

*மலையா உழைப்பு மாண்புடைப் பண்பு தாய்மை*
*நிலையால் உலகை உயர்த்தும் மகளிர் பலராம்*
*மலையென உயரும் சீன வானொலி தமிழ்த்துறை*
*கலையரசி தலைமையில் காணுதே நாளும் புரட்சி*".

சீனாவில் உள்ள சிறப்பிடங்களை எல்லாம் சுட்டிக் காட்டி, சுற்றுலாத் துறையினர் வளர்ச்சிக்குச் சீன அரசுக்கு உதவியாக உள்ளது இந்த வானொலி.

அவர்களே தங்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றைச் செய்துள்ளார்கள்.

"39 ஆண்டுகளுக்கு முந்திய இன்று, அதாவது 1963 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் நாளன்று, தமிழ் ஒலிபரப்பு துவங்கியது. அன்று முதல் இன்றுவரை பல தலைமுறையினரின் கூட்டு முயற்சி மூலம் தமிழ் ஒலிபரப்பு பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. துவக்கத்தில் செய்திகளும் சில சிறப்பு நிகழ்ச்சிகளும் மட்டும் இருந்தன. இப்போது செய்திகளுடன் வாரத்துக்கு 5 நாட்களில் செய்தித் தொகுப்புகள், திங்களுக்கு 19 சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம் பெறுகின்றன. தமிழ் ஒலிபரப்புத் துறை வளர்ச்சி யடைந்து வருகிறது. அதன் வளர்ச்சிப் போக்கில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவது தவிர, பணியாளர்களாகிய நாங்கள் தமிழகத்துக்குச் சென்று அனைத்திந்திய சீன வானொலி நேயர் மன்றக் கருத்தரங்கில் கலந்து

கொண்டு, நேயர்களிடமிருந்து கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் கேட்டு, நிகழ்ச்சிகளை மேம்படுத்தியுள்ளோம். நேயர்களுக்கு மேலும் செவ்வனே சேவை புரியும் பொருட்டும், நேயர்களின் பொருளாதார சுமையைக் குறைக்கும் பொருட்டும், இலவச கடித உறை அனுப்புவதென, இவ்வாண்டு ஜுன் திங்களில் சீன வானொலி நிலைய தலைமை பீடம் தீர்மானித்துள்ளது.

ஜுலைத் திங்களில் இலவச கடித உறையைப் பயன்படுத்தி, பல நேயர்கள் எங்களுக்குக் கடிதம் அனுப்புவதால், கடித எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முன்பு பொருளாதாரச் சிக்கல் காரணமாக எங்களுடன் தொடர்பை நிறுத்திய பலபல மூத்த நேயர்கள் இந்தத் தொடர்பை மீட்டுள்ளனர். இந்த வழிமுறையின் மூலம் பல புதிய நேயர்கள் எங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்பது மட்டுமல்ல தொடர்பும் கொள்ளத் துவங்கியுள்ளனர்.

தமிழ் ஒலிபரப்பின் 39 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் பல நேயர்கள் தொலை பேசி, ஒலி நாடா, கடிதம் ஆகியவற்றின் மூலம் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்".

நான் சீனா சென்று திரும்பிய பின், பாவாணர் நூல் வெளியீட்டுக்காக மலேசியா சென்றிருந்த நேரத்தில் திருவாட்டி கலையரசியும் அவரது குழுவினரும், திருச்சியில் சீன வானொலி நேயர் மன்ற நிகழ்ச்சியினை நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் வந்த போது வரவேற்று விருந்தளித்து நம் தமிழ் உணவுகளையும், விருந்தோம்பல் பண்பையும் வெளிக்காட்ட முடியவில்லையே என்ற எல்லையற்ற வருத்தம் எனக்கு. அவர்களும் மதுரை, கன்னியாகுமரி வந்து சென்னை திரும்பி புதுதில்லி, வங்காளதேசம் சென்று சீனா திரும்ப வேண்டிய நிலை.

தொடங்கிய காலத்திலிருந்து லீலி சியூக், வான் கு சூ, சுன்கோ சாங் ஆகியோர் தமிழ்ப் பிரிவுத் தலைவர்களாக இருந்துள்ளனர்.

இங்கு 12 சீனர்கள் தமிழ்ப் பிரிவில் பணியாற்றுகின்றனர். அனைவரும் அழகாகத் தமிழ் பேசுவதைக் காது குளிரக் கேட்டு மகிழ்ந்தேன். அவர்களது தமிழ்ப் பெயர்களைக் கவனியுங்கள்.

**Zhu Yuan Hua** – கலையரசி

**Zhang Juujie** – குழந்தை

மற்றும் வாணி, மலர்விழி, நடராசன், இலட்சுமி, கலைமகள் என்ற பெயர்களைத் தாங்கி வலம் வந்து ஒரு தமிழ் உணர்வு உலகத்தையே உருவாக்கி விட்டனர்.

இரண்டு மாணவப் பணியாளர்களும் உண்டு. ஹுவோ லினா – Hou Lina – லூ லிங்லிங் – Lu Lingling தற்போது நிகழ்ச்சிகள் மிகவும் செறிவாகத் தரப்படுகின்றன. செய்திகள், செய்தித் தொடர்பு, நேயர் கடிதம், நேருக்குநேர் அறிவியல் உலகம், நேயர் நேரம் என்பவையோடு சீனப் பண்பாட்டைப்

பரப்ப எப்படியெல்லாம் நிகழ்ச்சிகள் அமைக்கிறார்கள் என்பதையும் பாருங்கள். மக்கள் சீனம் (History) சீனாவில் இன்பப் பயணம் (Tourism) சீன உணவு அரங்கம் (Food habits) சீனத் தேசிய இனக் குடும்பம் (Social life) சீன மகளிர், சீனக்கதை, சீனப்பண்பாடு ஆகியவற்றுடன் தமிழ் மூலம் சீனம் கற்றுக் கொடுக்கப்படும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

தங்கள் வரலாற்றை, பண்பாட்டை, மொழியைப் பிறருக்கும் அறிவுறுத்தி அவற்றை வாழ வைக்கும் இந்த அரிய பணியைப் பாராட்டாமல் என்ன செய்ய முடியும்?

தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்து, தமிழ் நேயர்களைச் சந்தித்து அவர்களது கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெற்று வந்து மேலும் மேலும் நிகழ்ச்சிகளைச் செழுமைப் படுத்துகிறார்கள். தமிழக நேயர்களை ஈர்த்து, அவர்கள் பெரிய அளவிலும், தொடர்பிலும் சீன வானொலி உறவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பாக அஞ்சல் வில்லையே ஒட்டத் தேவை யில்லாத அஞ்சல் சலுகையை அளித்துள்ளார்கள். இந்த முயற்சி நல்ல தாக்கத்தையும், விரும்பிய முன்னேற்றத்தையும் அளித்துள்ளது. '15%' ஒட்ட வேண்டுமே என்று கவலைப்பட்டு, கடிதத்தை நிறுத்தியவர்கள் கூட இப்போது விழுந்து விழுந்து எழுதுகிறார்கள். எல்லாம் இலவசம் படுத்தும் பாடுதான்.

அவர்கள் பயன்படுத்துகிற சொற்களைக் கொஞ்சம் நம் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சியினர் கவனித்தால் நன்றாக இருக்கும். அஞ்சல் கட்டணம், பதிவு அஞ்சல், உள்நாட்டுக் கடிதம், அஞ்சல் அட்டை, அஞ்சல் தலை, வானஞ்சல், பேருந்து போன்ற சொற்களைத் தாராளமாக வழங்குகிறார்கள். அங்கு அவர்கள் பயன்படுத்தும் அகரமுதலிகளில் இரண்டு குறிப்பிடத்தக் கவை.

ஒன்று அ. சிதம்பர நாதனார், கா. அப்பாதுரையார் ஒருங்கிணைந்து உருவாக்கிய 'ஆங்கிலத் தமிழ் அகரமுதலி'. மற்றொன்று என் காலத்தில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட வணிகச் சொற்பட்டி. இதைக் கண்டதும் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். கூடவே ஒரு கசப்பும் சேர்ந்தது எனினும் இதனை அப்படியே விழுங்கிவிட்டேன். ஆம்! இந்த நூலே தேவையில்லை என்று ஓர் அமைச்சர் எழுதி, முற்றிலும் கைவிடப்பட்ட நிகழ்ச்சி அது. நான் வந்து உயிர் கொடுத்து, சிலம்பொலி செல்லப்பன், ம. இலெனின் தங்கப்பா ஆகியோர் துணையுடன் வெளிக் கொணர்ந்தேன். பயன்பாடு தெரியாதவர்கட்குப் பண்பாட்டுத் துறைப் பதவிகள்! என்ன செய்வது? தமிழ் நாட்டில் இத்தகைய நிலை பலகாலும் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறது.

சீன வானொலி தங்கள் ஒலிபரப்பின் மூலம் சீன தமிழ்ப்பண் பாட்டுக் கூறுகளை வளர்த்தெடுக்கிறது. நான் சீனா செல்ல வேண்டும் என்று

முடிவெடுத்த போது, ஒரு நிறுவனமாக முன்வந்து அழைப்பு விடுத்ததே இந்த வானொலியகம் தான். அவர்கள் அழைப்பு இது:

We have already written to the Education Ministry of China regarding your visit. We will make all necessary arrangements for your stay and the places to be visited and the offices and persons to be contacted.

We hope that your trip to Beijing will be fruitful and helpful for the development of Tamil language.

தங்கள் வருகை குறித்துக் கல்வி அமைச்சுக்கு எழுதிவிட்டோம். தாங்கள் தங்கவும், இடங்களைப் பார்வையிடவும், உரியவர்களைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்வோம். பெய்சிங்கிற்கு வருவதால் தமிழ் மேம்பாட்டுக்குப் பெரிதும் பயன் விளையும்."

உலகமயமாக்கல் என்ற நிலை நோக்கி எவ்வளவு வேகம் சென்றாலும், தங்கள் பண்பாட்டைக் கட்டிக் காப்பதில் அவர்கள் பின்வாங்கவே இல்லை.

"A nation rich in cultural resources, China has an ocean of non-material cultural heritage including folk art, literature, opera and dance. But many of these precious traditions are under the threat of extinction with the modernization of the country". என்று பளிச்செனக் கூறும் அவர்கள் இந்த விலைமதிப்பற்ற கலைகளும் அவை உணர்த்தும் பண்பாடுகளும் உலகமயமாக்கலில் மாட்டி, மெல்ல மெல்லச் சிதைந்து விடக் கூடாதே என்ற கவலையும் அவர்களுக்கு இருக்கிறது. எனவே தான் அவற்றைக் கட்டிக் காப்பதில் அவர்கள் பேரார்வம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

மற்றொரு குறிப்பும் அவர்களால் சொல்லப்படுகிறது.

"Although the development of cultural industry can help with the economy in ethnic areas, it is certainly not everything. We need to protect the traditional cultural heritage of these areas".

பண்பாட்டு மரபுகளை விட்டுக் கொடுக்காத சீன நாடு பெய்சிங் தொலைக்காட்சி (BTV) வாயிலாகத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளையே காட்டித் தனித்தன்மை பெற்றுள்ளது.

மொத்தத்தில் சீனாவின் சிறப்பினை இன்று உலகம் உணரச் செய்து வரும் சீன வானொலியை அதிலும் நம்மை உணர வைத்த சீன வானொலியின் தமிழ்ப் பிரிவை மறக்க முடியாது.

பொங்கல் திருநாளின் போது என் நேர்காணலை ஒலி பரப்பினார்கள்.

OOO

# 4

# சியாங்காய்

அடுத்து நாம் ஒரு பெரு நகருக்குப் போய்விட்டுப் பெய்சிங்குக்கு வரலாம். சியாங்காய் ஒரு துறைமுகம். எனவே, பெய்சிங்கை விட அதிக மக்கள் தொகை கொண்ட மாநகரமாக இது திகழ்கிறது. 1 கோடியே 60 இலட்சம் மக்களைக் கொண்ட இந்த நகரின் சிறப்புக்குறித்து விரிவாகப் பேசுவோம்.

பழமையில் மிதமிஞ்சிய நம்பிக்கையும் ஈடுபாடும் உள்ள சியாங்காயை எண்ணும் போது அது ஒரு காலத்தில் சொர்க்க பூமியாக இருந்ததா அல்லது எல்லாத் தீமைகளும் குடி கொண்ட பகுதியாக இருந்ததா என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

**சியாங்காய் – (Shanghai) பூடோங் புதுநகர் (Pudong New City)**

அண்மையில் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் ‘விரைவில் ஒரு மாதிரி நகரத்தை உருவாக்கப் போகிறோம் என்றும் அந்த நகரம் சீன நாட்டின் சியாங்காய் நகரத்தைப் போல் அமைய வேண்டும்’ என்றும் தெரிவித்துள்ளார். நான் மொழியாராய்ச்சிக்காகச் சீனா செல்லும்போதே, சியாங்காய் நகரையும் பார்த்துவிட வேண்டும் என்றே எண்ணினேன்.

அங்கே போன பிறகு, அந்த நகரைப் பார்த்தே ஆக வேண்டும். எனும் நிலை. காரணம் பெய்சிங் பழைய நகர். மக்கள் தொகை 1 கோடியே 20 இலட்சம். சியாங்காய் புதுநகர், மக்கள் தொகை 1 கோடியே 60 இலட்சம். எனவே சீனா சென்று அதன் மிகப் பெரிய மாநகரைப் பார்க்காவிட்டால் எப்படி?

எனவே சென்று பார்த்தேன், மகிழ்ந்தேன், வியந்தேன், அதிலும் உலகத்தின் மிகப்பெரிய கட்டிடங்களில் மூன்றாவது இடம் பெற்ற ஜின் மாவ் கோபுரம் (Jin Mao Tower) அங்கு தான் உள்ளது. அதற்கு இணையான உயரம் உள்ள தொலைக்காட்சிக் கோபுரமும் (TV Tower) அதன் அருகிலேயே உள்ளது.

இந்த இரண்டும் இணைந்த படத்தைத்தான் நீங்கள் அட்டையில் பார்க்கிறீர்கள்.

ஜின் மாவ் கட்டிடத்தில் நம் பார்வையில் படும்படி ஒரு புள்ளி விவரத்தைப் பொறித்து வைத்துள்ளார்கள். உலகின் 10 உயரமான கட்டிடங்கள் பற்றிய விவரம் அது. அதன்படி,

1. மலேசியா நாட்டின் தலை நகரான கோலாலம்பூரில் உள்ள இரட்டைக் கோபுரம் தான் உலகிலேயே மிக உயரமானது. பெட்ரோனாக்சு எரிநெய் நிறுவனம் அமைத்துள்ள இக்கட்டிட உயரம் 452 மீட்டர்.
2. சிக்காக்கோவில் உள்ள சியர்சுக் கோபுரம் (Sears Tower) 443 மீட்டர்.
3. சியாங்காயில் உள்ள ஜின்மாவ் கோபுரம் 420.5 மீட்டர்.
4. நியுயார்க்கில் இருந்த உலகவர்த்தக மையத்தின் 110 மாடிகளைக் கொண்ட இரட்டைக் கட்டிடங்கள் 417 மீட்டர் உயரம் கொண்டவை. (நம் கண் முன்னாலேயே காணாமல் போன இவை பற்றி எழுதும் போது ஒரு வேதனை இழையோடுகிறது).
5. நியூயார்க்கில் உள்ள எம்பயர்ஸ்டேட் (Empire State) கட்டிடம் 102 மாடிகளைக் கொண்டது 381 மீட்டர் உயரம்.
6. ஹாங்காங்கில் உள்ள மையத்தொகுதித் (Central Plaza) கட்டிடம் 78 மாடிகளைக் கொண்டது 374 மீட்டர் உயரம்.
7. அதே ஹாங்காங்கில் உள்ள சீன வங்கிக் (Bank of China Tower) கட்டிடம் 90 மாடிகளைக் கொண்டது 369 மீட்டர் உயரம்.
8. தைவானில் 85 மாடிகளுடன் 347.5 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள T & C Tower.
9. சிகாகோவில் 80 மாடிகளுடன் 346 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமோகோ (Amoco) கட்டிடம்.
10. அதே சிகாகோவில் அமைந்துள்ள 100 மாடிகளைக் கொண்ட 344 மீட்டர் உயரமுள்ள ஜான் ஹான் காக் (Jan Han Cock) எனும் கட்டிடம்.

இந்த ஜின் மாவ் கோபுரத்தின் 54 ஆம் மாடி முதல் 87 ஆம் மாடி வரை பல்வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப் பட்டிருக்கின்றன. 88 ஆம் மாடிதான் பார்வையாளராகிய நாம் சென்று பார்க்கக் கூடிய இடமாக அமைக்கப்பட்டுள்ளது. இதுவே 340 மீட்டர் உயரத்தில் உள்ளது. இதற்குச் செல்லும் மின்தூக்கி (Lift) நொடிக்கு 9 மீட்டர் எனும் வேகத்தில் நம்மை எடுத்துச் செல்கிறது.

இது லூசியாஜுயி நிதி மற்றும் வர்த்தக மையத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. தற்போதைய கட்டடக் கலைத் தொழில் நுட்பத்துக்கு எடுத்துக் காட்டாக இது விளங்குகிறது. 88 ஆவது மாடிக்குச் செல்ல 45 நொடிகள் தான் ஆகின்றன. அந்தப் பகுதிக்கு 'Skywalk' என்று பெயர்.

கீழ்வானம் சிவப்பதையும், மேற்குவானில் கதிரவன் மறையும் காட்சியையும் இங்கிருந்து நாம் அருமையாகக் காணலாம் (நமது கன்னியா குமரியிலும் ஒரு வீட்டு மாடியிலிருந்தே நாம் இவற்றைக் காணலாம் என்பது நமக்குப் பெருமைதான்) இரவு நேரத்தில் பார்த்தால் சியாங்காய் நகரத்தின் வியக்கத் தக்க இரவுக்காட்சியைக் காணலாம். கண்கவரும் குளக்கரை (Bond) உலகக் கட்டடக்கலையின் அடுக்குமனையாகக் காட்சி யளிக்கிறது. இந்த 'Sky Walk' பகுதியில் ஓர் அஞ்சலகம் இருப்பதும், எல்லா வகையான அஞ்சல் தலைகளும் இங்குக் கிடைக்கும் என்பதும் வியப்புக் குரியவையாகும்.

இங்குள்ள யூயுவான் கடைத் தொகுதிகளும் புதுமையான குளக் கரையும் (Bond), கட்டிடங்களுக்கு எதிரில் அமைந்துள்ள லூஜியாஜுய் பகுதியின் பச்சை நிறத் தோட்டமும், சியாங்காய் விளையாட்டரங்குகளும் வயாடக்ட் யானான் சாலையின் அரிய காட்சியும், சியாங்காய் பேரரங்கும் (Grand Theatre) யாங் பூ பாலமும், மக்கள் சதுக்கம் (People's Square) எனும் மாபெரும் திடலும், தொலைக்காட்சிக் கோபுரமும் (The oriental pearl TV Tower) நம்மை எங்கோ கொண்டு செல்கின்றன. ஜின் மாவ் கோபுர அளவுக்கு இதுவும் உயர்ந்து நிற்கிறது.

700 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறிய மீன்பிடிச் சிற்றூராக இருந்த சியாங்காயா இப்படி 21 ஆம் நூற்றாண்டின் 'அதிசயமாக' உயர்ந்திருக்கிறது என்பதை நினைக்கும் போது வியக்காமல் இருக்க முடியுமா?

மேலும் பசிபிக் கடலின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகம் என்பது சியாங்காய்க்கு உள்ள தனிச் சிறப்பாகும்.

சியாங்காய்க்குள் ஒரு புது நகரம். பூடோங் எனப்படும் அந்நகரம் யாங்ட்ஜி (Yangtze) ஆறு மற்றும் ஹுவாங்பூ ஆறு (Huangpu) ஆகியவற்றின் விளிம்பில் அமைந்துள்ளது. சியாங்காயின் நடுப்பகுதிக்குள் அமைந்துள்ள இப்புதுநகர் 533 சதுர கி.மீ. பரப்புடையது. பூடோங் புதுநகரமாக உருவாக்கப்பட வேண்டும் என்று சீன அரசு 18.4.1990 அன்று தான் அறிவித்தது. இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் நகரத்தின் தோற்றமே மாறிப் போய் விட்டது. 12 ஆண்டுகட்குள் இப்படியொரு மாபெரும் நகரத்தை உருவாக்க முடியுமா என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. It is the show - case of Shanghai's all round competitiveness என்றார்கள் அவர்கள். எல்லா வகையிலும் போட்டியிட்டு நிமிர்ந்து நிற்கும் சியாங்காயின் காட்சிப் பெட்டி தான் பூடோங் புதுநகர்.

அவர்கள் சொல்வதை அப்படியே ஏற்கவேண்டும். அங்குள்ள அனைத்துலக மாநாட்டு அரங்கு. அகலமான அரண் சாலை (Bouliward) காலைக் கதிரவன் ஹுங்பூ ஆற்றின் இருமருங்கிலும் பாய்ச்சும் ஒளி வெள்ளம். பசுமையான நூற்றாண்டுப் பூங்கா (Century Park) சியாங்காயின்

தொழில் நுட்ப நகரின் அழகிய தோற்றம், நூற்றாண்டுச் சதுக்கத்தின் அழகு, லூசியாசுவி (Lujiazui) வட்டாரத்தின் பொலிவான தோற்றம் ஆகியவற்றை யாரும் எளிதில் மறக்க முடியாது.

பூடோங்கில் உருவாகியுள்ள 'பன்னாட்டு வான்திடல்' இரவு நேரத்தில் ஒளி வெள்ளத்தில் முழுகி, பார்க்கும் நம்மையே திக்கு முக்காட வைக்கிறது.

சியாங்காயின் தெருக்கள் கூடக் கதை சொல்கின்றன. 4200 க்கு மேற்பட்ட தெருக்கள் இங்கு உள்ளன. ஒவ்வொரு தெருவும் பழைமையை இழக்காமலும், புது மெருகுடனும் அமைக்கப் பட்டிருப்பதுதான் இங்குச் சிறப்பு.

நான்கிங் சாலை பற்றி அவர்கள் கூறுவதே சிறப்புத்தான். "The first street of China's Commerce at Nanging Road emerges the stream of people, also emerges the popular element in the world".

சியாங்காய் அருங்காட்சியகத்துக்கும் ஒரு சிறப்பு உண்டு. இது சியாங்காயின் கலைக் களஞ்சியம் என்று அவர்கள் பெருமையோடு கூறுகிறார்கள்.

சியாங்காயின் நகர வளர்ச்சி வரலாறு பற்றிய கண்காட்சி மிக அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. 10000 சதுர மீட்டர் அளவில் அமைந்துள்ள இந்தக் கண்காட்சி வரலாறு, பண்பாடு, பொழுது போக்கு போன்றவற்றை உணர்த்துவதாக, சிற்பக் கலை அழகோடு விளங்குகிறது.

அதேபோல வானொலி, தொலைக்காட்சிக் கோபுரமும் 420 மீட்டர் உயரத்தில் நம்மை வியக்க வைக்கிறது. ஹுங்பூ ஆற்றின் கரையில் பூடோங் புதுநகரில் பல்வேறு நாடுகளின் கட்டிடக் கலை யழகையும் உணர்த்தும் வகையில் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டு விளங்குகிறது.

சியாங்காய் மாநகரின் அடையாளச் சின்னமாக - பார்க்க வேண்டிய பத்து இடங்களில் ஒன்றாக நிமிர்ந்து நிற்கிறது. நாங்களும் 240 மீட்டர் வரை சென்று பார்த்து வந்தோம்.

சியாங்காயில் ஒரு மேல் நிலைப்பள்ளியைப் பார்வையிட்டேன். சுன்கோ சாங்கின் மருமகள் படிக்கும் பள்ளி அது. விடுமுறையில் வீட்டுக்கு வந்த அவரை விடுதியில் கொண்டு போய் விட வேண்டும் என்பதால் அப்படியே பள்ளியையும் பார்வையிட்டு வந்துவிடலாம் என்று நானும் புறப்பட்டேன்.

அடடா! இங்கு நமது பல்கலைக் கழகங்களிலாவது இந்த வசதிகள் உண்டா?

மிகப்பெரிய நூலகம் - பலர் படிப்பதற்கான மிகப்பெரிய கூடம்.

செயற்கை ஏரி. எங்குப் பார்த்தாலும் பசும்புற்றறை. சீர் செய்து தந்துள்ளது சீன அரசு - சீர் குலைக்க அங்கு யாருமில்லை.

கூட்டம் நடத்துவதற்கென்றே சிறியதும், பெரியதுமான இரண்டு பெரிய அரங்குகள்.

நம் நாட்டிலுள்ள பல உயர்நிலைப் பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளிகளும் அடிப்படை வசதிகள் இன்றி - அல்லற்படுவதைப் பார்க்கிறோம். அதிலும் அரசு சார்ந்த பள்ளிகளில் தான் அதிகம்.

ஆனால் சீன அரசு பள்ளியை ஒரு சொர்க்க உலகமாக அல்லவா வைத்திருக்கிறது.

பெரும்பாலான பள்ளிகளும், கல்லூரிகளும் அரசால் நடத்தப் படுபவைதாம். இப்போதுதான் ஒரு சில நிறுவனங்கள் தனியார் பள்ளிகளை நடத்திட அனுமதிக்கப்படுகின்றன.

0°யில் குளிர் வாட்டினாலும், வெயில் கொளுத்தினாலும் அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகள் தடுமாறுவதில்லை. அனைத்தும் காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 4 மணிக்கு முடிகின்றன.

சீனர்களின் உணவு நேரம் இதுதான் : காலை 7 மணி சிற்றுண்டி, பகல் 11.30 - 12.00 பகலுணவு. மாலை 5.30 - 6.00 இரவுணவு.

பெய்சிங் இயல்புப் பல்கலைக்கழகம் (Beijing Normal University) 1902 இல் நிறுவப்பட்டது. இஃதோர் ஆசிரியப் பயிற்சி நிறுவனம். இந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் திறமையும், புகழும் மிக்க பல ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்த நிறுவனமாக விளங்குகிறது. அந்நாட்டில் புகழ்பெற்ற லியாய் கிஜாகோ (Liang Qichao) லூ சுன் (Lu Xun), லி டாசாவ் (Li Dazhao) பாய் சொயி (Bai Shouyi) ஆகியோர் புகழ் பெற்ற ஆசிரியர்களாகப் பாராட்டப் பட்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் உருவாக்கிய நிறுவனம் இதுதான்.

OOO

# 5

# வேலைகளுக்கான தொழில் நுட்பம் சார்ந்த, மென் தொழிற் பயிற்சிக் கல்லூரி (Beijing Light Industry College of Professional Technology)

'வேலை ... கல்லூரி'யை நடத்துபவர்கள் பெய்சிங் மாநகராட்சியின் கல்விக் கழகத்தினர் ஆவார்கள். எனினும், இது சீனர்களின் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலும், அதிகார பூர்வமான ஏற்பிலும் உள்ளது. இந்தக் கல்லூரியில் இரு வளாகங்கள் உள்ளன. இவற்றில் தான் 'வேலைவாய்ப்புக் கான தொழில் நுட்பக் கல்லூரி தொழிற் பயிற்சிப் பள்ளி, இதனோடு தொடர்புடைய உயர்நிலைப் பள்ளி, அனைத்துப் பட்ட வகுப்புகளையும் கொண்ட கல்லூரி ஆகியவை உள்ளன. பட்டயங்களையும் சான்றிதழ்களை யும் பெறக் கூடிய அளவில் செயல்முறை விளக்கங்களும் கொள்கை சார்ந்த படிப்புகளும் அடங்கிய முழு வீச்சிலான நிறுவனம் இது. இதில் பெறப்படும் சான்றிதழோ, பட்டமோ, சீனநாடு முழுவதும் செல்லுபடியாகும் செல்வாக்குப் பெற்றவை. இவற்றைக் கொண்டு எங்கும் வேலை வாய்ப்புப் பெறலாம். கல்லூரியை மேம்படுத்தவும், கல்வித்தரத்தை உயர்த்தவும், கல்விக் கூடங்களை விரிவுபடுத்தவும் மாணவர்கள் தரத்தை உயர்த்தவும் ஆசிரியர்கள் பாடுபட்டு உழைத்து வருகின்றனர். (அரட்டை என்பதுதான் அந்த நாட்டில் இல்லையே அப்புறம் என்ன?) இந்த நிறுவனத்தில் பயில்பவர்கள் மட்டும் 5000 பேர்.

இங்குத்தான் எத்தனை வகையான பயிற்சிகள்?

அனைத்துலக வணிகம்

பெரும் உணவகம் மற்றும் பொழுதுபோக்கு மேலாண்மை

அங்காடியியல்

கணினி கொண்டு கலை வடிவமைப்பு

கற்பனை வடிவமைப்பு

பியானோ பயிற்சி

தொழில் நுட்பத் துறையில்தான் எத்தனை படிப்பு?

உணவுப் பண்டச் சோதனை

உயிர்த்தொழில் நுட்பப் பயன்பாடு

இணையதளத் தொழில் நுட்பம்

பயன்படும் கணினித் தொழில் நுட்பம்

இவை அனைத்தும் சீனமொழியில் Business English, English Tour Guide இரண்டு மட்டும் ஆங்கிலத்தில். இங்கே பாருங்கள் அண்ணா சாலையில் - வழித்தடத்தில் Tl Auto Car Bus என்று ஆங்கிலத்தில் தான் எழுதியிருப்பார் கள். இவர்கள் இன்றும் ஆங்கில அடிமைத் தனத்திலிருந்து மீளவே இல்லை.

**பயிற்றுமொழி**

இந்த நிறுவன முதல்வர் பெயர் திருவாட்டி டாய் ஹாங் (Dai Hong) இவர் சீனமொழியில் மட்டுமே பேசினார். அவரிடமிருந்து ஒரு தொடர் கூட ஆங்கிலத்தில் வரவில்லை. திருவாட்டி ஹுனா (Huna) என்பவர் தான் எங்களுடன் ஆங்கிலத்தில் உரையாடினார். காரணம் அவர் அங்கு ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஆசிரியை. நம்மூர் பி.ஏ., பி.எட். போல. தமிழில் வல்லுநராகத் திரு. கடிகாசலம் இருப்பது போல, சீன வானொலியில் இத்தாலி மொழி வல்லுநராக இருப்பவர் காப்பிரியல்லோ பொனினோ (Gabriella Bonino) இவர். இந்த நிறுவனத் தலைவியோடு நல்ல நட்புடையவர் என்பதால் கடிகாசலம் ஏற்பாட்டில் இவர்தான் துணைக்கு வந்தார். பெரிதும் உதவியாக இருந்தார்.




இந்த நிறுவனத்தின் பயிற்றுமொழி சீனமொழிதான். இதனை நேரில் அறிவதற்காக ஒரு வகுப்புக்குள் நுழைந்து அமர்ந்து கேட்டோம். அது 'விளம்பரங்களும், அதற்கான வடிவமைப்புகளும்' பற்றிய வகுப்பாகும்

(Advertisement & Designing) ஆசிரியர் சீனமொழியில் அழகாக, எளிதாக விளக்கிச் சொல்கிறார். மாணவர்கள் அனைவரும் கேள்வியைத் தொடுத்து விளக்கம் பெறுகிறார்கள். இது ஒரு தற்காலப் பாடம் (Modern subject) ஆனால் அதனை விளக்கிச் சொல்வதில் சீனமொழிக்கு எந்த இடர்ப்பாடும் இல்லையே!

ஆனால், இங்கே +2 வகுப்பில் கணிதத்தைத் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியாது என்று கூறும் தறுதலைகள் எத்தனையோ பேர்!

மொத்தத்தில் இங்கும் ஆங்கிலம் இருந்தாலும், அது ஒரு பாடமாக மட்டுமே சொல்லித் தரப்படுகிறது.

**வார இதழ்கள்**

மாணவர்களின் நலன் கருதி வார இதழ்கள் இங்கு வெளியிடப்படு கின்றன. 3/2002 ஆம் எண்ணுள்ள இதழை இங்குப் பார்வையிட்டோம் இந்த இதழில் உள்ள 62 பக்கச் செய்திகளும் சீனமொழியில் தான். ஒரே ஒரு பக்கம் மட்டும் அதுவும் இதழுக்குள் வரும் கட்டுரைகள் குறித்த உள்ளடக்கங்களைச் சுட்டும் பக்கம் மட்டும் தான் ஆங்கிலத்தில்.

அறிவியல் இதழ்கள் பலவற்றை அங்குப் பார்த்தோம். மின்னணுவியல் உலகம், நாகரிக மேம்பாடு, உயிரியல் தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுக்கானவை அவை. முக்கியமான உள்ளடக்கங்களை அவர்கள் ஆங்கிலத்தில் தந்திருந்தாலும், மற்ற உடல், பிறபகுதிகள் எல்லாம் சீன மொழியில்தான். அறிவியல் இதழ்கள் அனைத்துமே சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு விடுகின்றன.

சுசோவ் (SuzHov) பல்கலைக்கழகம் சார்ந்த கலைப்பள்ளியி லிருந்து பல ஆசிரியர்கள் இங்கு பகுதி நேரமாக வந்து வேலை பார்க்கிறார்கள்.

இங்கு எந்த இடத்திலும் மண் தரையைப் பார்க்க முடியவில்லை. விளையாட்டுத் திடல் முழுவதும் இரப்பர் கலவையால் ஆன மென்மை யான புல்வெளி. நீண்ட ஓட்டத்திற்கான ஓடுதடம் (Track) கூட முற்றிலும் புல் - இரப்பர் கலவையால் ஆன பூச்சோடு கூடியது.

எனவே எல்லா இடங்களும் செம்மையாகப் பேணப்பட்டு அழகுறக் காட்சியளிக்கின்றன.

பார்வையிட்டு முடிந்த பின் எங்களுக்கு அந்த நிறுவனத் தலைவர் ஒரு விருந்து கொடுத்தார். ஒரு பெரிய உணவகத்தில் தனி அறையில் - சீன உணவு விருந்து. குழம்பில் மிதந்த மீன் அவ்வளவு சுவை. வழக்கம் போல ஏழெட்டு வகைக் காய்கறிகள், இறால் மீன், முட்டை என்று ஏகத் தடபுடல். நிறுவனத் தலைவரின் கணவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மிகுந்த நிறைவோடு அறைக்குத் திரும்பினோம்.

ooo

6

# கல்விப் பிரிவுகள்

வகுப்பு 1 முதல் 6 வரை - தொடக்கக் கல்வி

7 முதல் 9 வரை - நடுநிலைப்பள்ளி (Middle School - Junior)

10 முதல் 12 வரை - உயர்நிலைப்பள்ளி

அவர்கள் தங்கள் எல்லா நடைமுறைகளிலும் அராபிய எண்களாகிய 1,2,3 ஆகியவற்றையே பயன்படுத்துகின்றனர். சுன்கோ சாங் சொன்ன ஒரு செய்தி என்னை வியப்பில் ஆழ்த்தியது. கணித ஆசிரியராக இருந்தவன் நான். எண் கணிதம் (Algebra) பாடம் நடத்தும் போது a கூட்டல் b wholesquare சமம் $a^2$ கூட்டல் $b^2$ கூட்டல் 2ab என்று நாம் நடத்துவோம். இதைச் சொல்லி விரைவில் புரிந்து கொள்வதற்காக $(a+b)^2 = a^2 + b^2 + 2ab$ என்றும் சொல்வோம். ஆனால் சீனக் கணித ஆசிரியர்கள் plus, whole square, equal to போன்றவற்றையும் சீனமொழியில் - சீனச் சொற்களைப் பயன் படுத்தித் தான் சொல்லித் தருகிறார்கள்.

இது வியப்பான, கடுமையான விடாப்பிடிதான். சீனாவிலிருந்து வரும்போது 6,9,10,12 ஆம் வகுப்புகளுக்குரிய பாடநூல்கள் சிலவற்றை வாங்கி வந்தேன். அவை அனைத்தையும் பேரா, வ.அ.ய் சு.வும் கருத்தரங்குக்கு வந்திருந்தவர்களும் பார்த்து வியந்தனர்.

எனினும் தமிழ் நாட்டில் பி.எசி. மூன்றாமாண்டு வரை எல்லாப் பாடநூல்களும் தமிழில் உள்ளன. 67 அரசினர் கல்லூரிகளிலும் தமிழில் பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ooo

# 7

# ஒரே வளாகம் - நான்கு பல்கலைக் கழகங்கள்

சியாங்காய் சென்றிருந்தபோது, சுன்கோ சாங்கின் அளியர் (மைத்துனர்) தன் மகிழுந்தில் எங்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார். அதில் ஓர் இடம் - ஒரு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகம். இன்னும் திறக்கப்படவில்லை; எனினும் 90% வேலைகள் முடிந்து அந்த வளாகம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கிறது. பூங்காக்களும், செயற்கையாக அமைக்கப்பட்ட குளங்களும், புற்றரைகளும், பசுமை விளங்கும் மேடுகளும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இங்கே, ஒரே வளாகத்தில் 4 பல்கலைக் கழகங்கள் அமையவிருக்கின்றன.

1. வெளிநாட்டு வர்த்தக நிறுவனம் (Institute of Foreign Trade) 2. லிக்சிம் கணக்கியல் நிறுவனம் (Lixim Accountancy institute) மற்றொன்று அனைத் துலகக் கல்விக்கான பள்ளி (School of International Studies) இங்கு 14 அயல்நாட்டு மொழிகள் கற்பிக்கப்பட உள்ளன. இவற்றுக்கான அனைத்து வசதிகளும், உள் கட்டமைப்புகளும் விடுதி வசதிகளும் செய்யப்பட்ட வுடன் தான் இவை தொடங்கப் பெறும் என்று கூறினார்கள்.

நம்மூரில் அடிப்படை வசதிகளும் செய்யாமல் கழிப்பிட வசதிகள் கூ டச் செய்யாமல் - ஏன்? அரசின் ஏற்புக் கூடப் பெறாமல் 'காசு' பார்க்கும் நிறுவனங்களைத் தான் நிறையப் பார்க்கிறோமே!

'வதவத' என்று தொடங்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகளில் அரசின் ஏற்பே பெறாத - மாணவர்களை ஏமாற்றிக் காசு பறிக்கும் பள்ளிகள் பல உள்ளன என்பதை அண்மையில் அரசே வெளியிட்டதை நாம் பார்க்கிறோமே!

சூ ஹுவி உயர்நிலைப் பள்ளி (Xu Hui High School) பார்வையிடப் பட்டது. தூய்மை (Neatness) ஒழுங்கு (Regularity) காலந்தவறாமை (Punctuality) ஆகியவை எங்கும் உள்ளன.

ooo

# 8

# பெய்சிங்கு ஒலிபரப்பு நிறுவனம்
(B - Broad casting Institute)

இந்த நிறுவனத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்றிருக்கும் ஐவரைச் சந்தித்துப் பேசினேன். சுன் கோ சாங் தான் மொழி பெயர்ப்பாளராக இருந்து துணை செய்தார்.

1. லீ ஜினான் (Liu Jinan) தலைவர் & பேரா.
2. கியாவ் ஜு ஆன் (Gao Ju An) துணைத் தலைவர் & பேரா.
3. சியாங் லிலீ (Zhang Lili) துணைத் தலைவர்
4. ஸ்டீவன் லீ (Steven Li) தலைவர், அனைத்துலகப் பரிமாற்றங்கள், வெளியுறவுத் துறை.
5. யாங் சின் வென் (Yang Xin Wen) துணைப் பேராசிரியர். அனைத்துலகத் தொடர்புகளுக்கான கல்லூரி.

1954 இல் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. உயர் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு பல்கலைக்கழகமாக இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்பு, தொடுப்பு (Editing) ஆகிய இனங்களில் மிக நுட்பமான, திறமிக்க பயிற்சிகளை இந்த நிறுவனம் வழங்குகிறது. இந்தப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு வியந்து மகிழ்ந்தேன்.

மொத்தத்தில் 16 பாடநூற் கூறுகளும் அவற்றின் விரிவாக 37 துறைகளும் உள்ளன. அவற்றில் 5 ஆய்வுத் துறைகளும், 12 முதுகலைத் துறைகளும், 20 இளங்கலைத் துறைகளும் அடங்கும். இதில் முகாமையானது, இளங்கலையிலும் முழுநேரப் படிப்புகள் மட்டுமின்றி, தொலைத் தொடர்புக் கல்வியும் இங்கு உண்டு. முழுநேர மாணவர்கள் 12000 பேர், தொலை நிலைக் கல்வி (Distance Education) பயில்பவர்கள் 14000 பேர். 19 அயல்நாட்டு மொழிகளில் படிப்பும், பயிற்சியும் வழங்கப்படுகின்றன. பல்வேறு துறைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் விறுவிறுப்பாக இயங்குகிறார்கள். குறிப்பாக, தகவல் தொழில் நுட்பம், கணினி மற்றும் மென்பொருள், கலையும் இலக்கியமும், பொறியியற் கல்வியின் அனைத்துப் பிரிவுகள் தகவல் தொடர்பும் ஊடகமும், சமூக நிர்வாகம் ஆகிய பல துறைகளும் ஆர்வத்தோடு இயங்குகின்றன. இதில் மேலும் வியப்பு என்னவென்றால் கேலிப்படம் (Cartooning) வரையும் கலைக்கு இங்கு நல்ல வரவேற்பு உள்ளது.

என்னிடம் அவர்கள் தெரிவித்த செய்தி எனக்குப் பெரு மகிழ்வைத் தந்தது. இங்கு அயல்மொழிப் பயிற்சி பெறுபவர்கள் தான் சீன வானொலியின் பல்வேறு பிரிவுகளில் பணியமர்த்தப்படுகின்றனர். தற்போது தமிழ்ப் பிரிவுக்கு ஆட்கள் தேவைப்படுவதால் அடுத்த ஆண்டு தமிழில் 4 ஆண்டுப் பட்டப் படிப்பினைத் தொடங்க இருக்கிறார்கள். இதில் சேரும் மாணவர்கள் 3 ஆண்டு காலம் இந்த நிறுவனத்தில் படித்து விட்டு, கடைசி ஓராண்டு மட்டும் தமிழகத்தில் பயின்று திரும்புமாறு திட்டமிட்டுள்ளார்கள். அது குறித்த கருத்துருவினைத் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கூறியுள்ளேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று மாண்புமிகு கல்வி அமைச்சர் மற்றும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆகியோரது ஒத்துழைப்புடன் இதனைச் செயற்படுத்திட முடியும் என்று நம்புகிறேன்.

குறிப்பாக கணினி, மென்பொருள் துறையில் தமிழ்நாடு சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதனை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, புகழ்பெற்ற நமது அண்ணா பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவும், அறிவார்ந்த பல கூறுபாடுகளில் பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்கள் விரும்புகிறார்கள். அதற்காகவே துணைவேந்தருக்கு ஒரு மடலும் அளித்துள்ளார்கள்.

**இந்த நிறுவனம் பற்றிய பிற செய்திகள்.**

1. பல்வேறு ஊடகங்களில் பணியாற்ற விரும்புபவர்கட்கு இதுதான் பயிற்சிப் பாசறை. திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மற்றும் பதிப்புத்துறையில் பல்வேறு அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, தொலை நிலைக் கல்வியில் சீனாவில் முன்னணியில் இருப்பது இந்த நிறுவனம் தான்.

2. இலக்கியம், கலை, பொருளியல், மேலாண்மை, பொறியியல், சட்டம், அறிவியல், கல்வியியல் எனும் துறைகள் அனைத்திலும் ஓர் ஒருங்கிணைந்த பயிற்சியை இந்நிறுவனம் வழங்குகிறது. இதழியல், விளம்பரக்கலை, அனைத்துலகத் தொடர்புகள் எனப்படும் 16 வகைப் பாடங்கள் இங்கு தலையாயவை. இளங்கலையில் 70 தலைமைப் பாடங்களும் (Majors) முதுகலையில் 13 தலைமைப் பாடங்களும் முனைவர் பட்டத்துக்கு 6 தலைமைப் பாடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

3. இதில் வியப்பு என்னவென்றால் இந்த நிறுவனம் பல வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துள்ளதுதான். சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா, பிரான்சு, ஜெர்மனி, உருசியா, தென்கொரியா, சப்பான், அமெரிக்கா உள்ளிட்ட 40 நாடுகளில் உள்ள 100க்கு மேற்பட்ட வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களுடன் உயர்கல்விக்கான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு நட்பு முறையிலும் கூட்டுறவுடனும் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது. அனைத்துலக அளவிலான கல்விக் கருத்தரங்குகளையும் நடத்துகிறார்கள். இந்தப் பாடப்பகுதிகளிலும், பணிகளிலும்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடர்புடைய பலரை இவர்கள் தங்கள் தொடர்புக்குள் வைத்துள்ளனர். சிலெக்ட் (Cilect) எனும் அமைப்பில் முழு நேர உறுப்பினர் இந்த நிறுவனம். இந்த நிறுவனத்தின் உலகத்தரத்திற்கு இணை யாக மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது. வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து பயில விரும்பும் மாணவர்கட்கும் கல்வியை வழங்குகிறது. இந்த நிறுவனத் தில் தற்போது 280 வெளிநாட்டு மாணவர்கள் பயின்று வருகின்றார்கள்.

தொழில் நுட்பத் துறையில் உருவாகியுள்ள உலகத்தரத்துக்கு இணை யாகத் தாங்கள் விளங்க வேண்டும் என்றும், எல்லா வகையிலும் பிறரோடு போட்டி போட வேண்டும் என்றும் சீனமக்கள் முனைப்போடு உள்ளனர் என்பதை என்னால் காண முடிந்தது. பொருளியல் மற்றும் அரசியல் கோட் பாடுகளில் சீனக் குடியரசு அவ்வப்போது கொண்டு வரும் மாற்றங்கட்கு ஏற்ப, இந்த நிறுவனத்தின் போக்குகளும் மாற்றங்கட்கு உட்படுகின்றன.

அது எவ்வளவு பெரிய தொழில் நுட்பமானால் என்ன? அல்லது சுருக்கமாக, நுட்பமாகத் தெரிவிக்க வேண்டிய கருத்தாக இருந்தால் என்ன? எப்படியிருந்தாலும் அது சீனமொழியில்தான். தேவைப்படும் அளவுக்கு மட்டுமே ஆங்கிலத்தின் சிறிதளவு பயன்பாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இங்கு பயிற்றுவிக்கப்படும் பிறமொழிகள் 19 பெர்சியன், நேபாளம், பெங்காளி போன்ற மொழிகளில் பயிற்சி பெற்ற பலர் இங்கு பணியமர்த்தப் பட்டுள்ளனர். இங்கு அடிப்படைத் தமிழில் பயிற்சி பெற்றவர்கள் தான் பீகிங் வானொலியில் தமிழ்ப் பிரிவில் பணியாற்றுபவர்கள்.

மொழிப் பிரிவுகளை இரண்டாகப் பிரித்துள்ளனர். ஆசிய மொழிகள், 9 துறைகள், ஐரோப்பிய மொழிகள் 8 துறைகள் வெளியுலக அறிவியல் கண்டுபிடிப்புகளின் வரவுகள், மாறிவரும் அனைத்துலகத் தொடர்புகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் 15% மாணவர்கட்கு மட்டும் ஆங்கிலத்தில் உரையாடல் பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்ற 85% விழுக் காட்டினர் 'சீனம்' மட்டுமே அறிவர். எப்படியிருந்தாலும் 26000 மாணவர் களில் 280 அயல்நாட்டு மாணவர்கள் மட்டுமே சீனமொழியைப் புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளவர்கள்.

தலைவர், துணைத்தலைவர், பேராசிரியர்கள் எனும் பெரும் பதவி வகிப்பவர்கள் கூட என்னுடன் ஆங்கிலத்தில் உரையாட முன்வரவில்லை, ஆங்கிலத்தைப் படிக்க முடியும், பேச இயலாது என்பதே அவர்கள் நிலை. அடி முதல் முடி வரை எல்லாமே சீனமொழிதான். இதில் சிறிய வியப்பு, இளைய தலைமுறையினரில் சிலர் எங்களுடன் ஆங்கிலத்தில் பேசிட முன் வந்தது தான்.

எனவே, எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு, எத்தனை பேர்க்குத் தேவையோ அத்தனை பேர்க்கு மட்டும் ஆங்கிலம் படிப்பதற்காக வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மற்றபடி எல்லாமே சீனம் தான் என்பது மகிழ்ச்சிக்குரியது.

OOO

# ௭

# சின்குவா பல்கலைக் கழகம் (T'Singhua University)

பெய்சிங்கின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகம் 1911 இல் நிறுவப்பட்டது. இங்கு 'பெய்சிங் பல்கலைக்கழகம்' ஒன்று உள்ளது. அதைவிட இது பெரியது என்பதால் இதனைப் பார்வையிட்டோம். நிறுவப்பட்டுப் பதினான்கு ஆண்டுகள் கழித்து 1925 இல் பல்கலைக்கழகப் பிரிவு தொடங்கப் பட்டது. அங்கிருந்து பட்ட வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1928 இல் 'தேசிய சின்குவா பல்கலை' எனும் பெயரைப் பெற்றது. 1929 இல் ஆராய்ச்சிப் பிரிவு தொடங்கப்பட்டது. இந்த இடத்தின் பரப்பு 3.79 சதுர கி.மீட்டர் ஆகும்.

1937 இல் ஏற்பட்ட சப்பானியப் படையெடுப்பை எதிர்த்துப் போரிட்ட காலத்தில், இந்தப் பல்கலை வளாகத்துக்குப் பாதிப்பு வந்தது. அந்த நிலையில் இந்தப் பல்கலை குன்மிங் பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கு பீகிங் பல்கலைக்கழகமும் நாங்கிங் பல்கலைக் கழகமும் ஒருங்கிணைக்கப் பட்டன. எல்லாம் சேர்ந்து 'தென்மேற்கு ஒருங்கிணைந்த பல்கலை' எனும் பெயரால் இணைக்கப்பட்டன. 1946 இல் பெய்சிங்கில் இப்போதுள்ள இடத்திற்குப் பல்கலைக் கழகம் வந்தது. அடிப்படையில் இது ஒரு பொறியியல் நிறுவனம். ஆனால் 1952 இல் நாட்டில் உள்ள பொறியாளர்கள் பொறியியல் பயிற்சி தரும் நிறுவனமாக பல துறைகளையும் உள்ளடக்கிய பல் தொழில் நுட்பப் பள்ளியாக மிளிர்ந்தது. 1978 வரை இது தொடர்ந்தது.

1978 முதல் உலகோர் அனைவரும் வந்து செல்லும் நிறுவனமாக உயர்ந்து, அறிவியல், பொருளியல், மேலாண்மையியல் மற்றும் கலையியற் பிரிவுகளை வளர்த்துக் கொண்டது. தற்போது பொறி. இ. (B.E.) ச.இ. (B.L.) மற்றும் மருத்துவப் (M.B.B.S.) பட்டங்களை வழங்கும் நிறுவனமாகத் திகழ்கிறது.

2001 இல் இப்பல்கலை தன் 90 ஆம் ஆண்டு விழாவினைக் கொண்டாடியது.

இவர்களது நோக்கம் அனைத்துலக அளவில் அறிமுகமான பல்கலையாக இது திகழ வேண்டும் என்பதுதான்.

இங்கு ஆசிரியர்கள் நீங்கலாக, பெரும் புகழ் பெற்ற பேரறிஞர்கள் என்று 49 பேர் உள்ளனர். இவர்களது நோக்கமே 100 வகைத் துறைகளைக்

கொண்டு வந்து 'மூத்த, வருகைதரு பேராசிரியர்கள் 100 பேரை வரவழைத்துப் பணிபுரிய வைத்திட வேண்டும் என்பதுதான். இதற்காக உலகமெங்கும் உள்ள புகழ்பெற்ற பேராசிரியர்களைக் கண்டறிந்து வரவழைத்துச் சிறப்புச் சேர்க்கின்றனர்.

அழகிய காட்சிகளும், சீனப் பண்பாட்டின் மிடுக்கும், வரலாறும் விளங்குமாறு இப்பல்கலை முன்னேற்றத்துடன் விளங்குகிறது அவர்களுடைய குறிக்கோள் இது தான்.

"To build a world class university and strive for significant revival of the Chinese culture"

"சீனப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபடும் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக் கழகமாக விளங்கவேண்டும்" என்கிறார்கள்.

**இங்குத்தான் எத்தனை துறைகள்?**

1. கட்டிடக் கலை, நகரத்திட்ட அமைப்பு, கட்டிட அறிவியல் பொறியியல்.
2. பொதுப் பொறியியல், கட்டுமான நிர்வாகம்.
3. இயந்திரப் பொறியியல்.
4. தானியங்கிப் பொறியியல், தொழிலகப் பொறியியல்.
5. மின்னியல் பொறியியல், கணிப்பொறியியல் (ம) தொழில் நுட்பம் - தன்னியிக்கவியல் (Automation).
6. கணித அறிவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், உயிரியல் தொழில் நுட்பம்.
7. நிர்வாக அறிவியல், வர்த்தக மேலாண்மை, பொருளியல், அனைத்துலக நிதி மற்றும் வர்த்தகம், கணக்கீட்டியல், பொதுக் கொள்கை (ம) நிர்வாகம்.
8. அயல்நாட்டு மொழிகள், சீனமொழியும் இலக்கியமும், வரலாறு, தத்துவம், அரசியல் அறிவியல், தொடர்பியல், சமூகவியல்,
9. சட்டம்.
10. கலை வரலாறு, புனைவுக் கலை, வண்ணக்கலை, சிற்பவியல், கலைத்தொழில்.
11. மருத்துவ அறிவியல்.
12. மென்பொருள் துறை.

இவ்வளவையும் சொல்வதற்குக் காரணம், ஒரு பல்கலைக் கழகம் எத்தனை துறைகளை உள்ளடக்கி இயங்கி வருகிறது என்பதைக் காட்டத்தான். சீனநாடு கல்வித் துறையில் எத்தகைய மேம்பாட்டை அடைந்துள்ளது என்பதை உணர்த்தத்தான்.

தற்போது இங்குள்ள ஆசிரியர்கள் 3000 பேர் இவர்களில், 1000 க்கும் மேற்பட்டவர்கள் பேராசிரியர்கள். 1800க்கும் மேற்பட்டவர்கள் உதவிப் பேராசிரியர்கள், 660 பேர் முனைவர் பட்ட வழிகாட்டிகள்.

தற்போது பல்கலையில் பயிலும் மாணவர்கள் : 13861 பட்டவகுப்பு மாணவர்கள், 6927 முதுகலை மாணவர்கள், 3275 முனைவர்பட்ட ஆய்வாளர்கள்.

நிதிப் பற்றாக்குறையினால் எந்தவொரு மாணவரும் பாதியில் நின்றுவிடாதவாறு இப்பல்கலை கவனத்துடன் பார்த்துக் கொள்கிறது.

இப்பல்கலை, தன் 91 ஆவது ஆண்டு வரை ஓர் இலட்சம் பட்டதாரிகளை உருவாக்கியிருக்கிறது.

இதன் நூலகத்தின் பரப்பு மட்டும் 27280 சதுர மீட்டர் ஆகும். ஒரே நேரத்தில் 2800 பேர் அமர்ந்து படிக்கலாம். இந்த நூலகத்தில் உள்ள நூல்கள் மற்றும் இதழ்களின் எண்ணிக்கை மட்டும் 26 இலட்சம் ஆகும்.

தொலை நிலைக்கல்வி, முதியோர்கல்வி போன்றவை 1985 முதல் இங்குச் செயற்படுகின்றன.

ஒரு பல்கலைக்கழகத்தை எவ்வளவு ‘பிரம்மாண்டமாக’ அமைக்க முடியும் என்பதனை நம் நாட்டுத் துணைவேந்தர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக.

OOO

# 10

# அனைத்துலகக் கல்விக்கான சீன நிறுவனம்

## CIIS - China Institute of International Studies

இந்த நிறுவனம் சீன வெளியுறவு அமைச்சகத்தின் சிந்தனை முடிவால் அமைக்கப்பட்ட ஒன்றாகும். வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர் பான விவரங்களைப் பரந்த அளவில் அலசி ஆராய்ந்து 'ஆராய்ச்சி மற்றும் பகுப்பு' எனும் முறையில் வழங்குவது இந் நிறுவனம்.

1956 இல் நிறுவப்பட்டது இது. பழைய பெயர் Institute of Inter national Relations என்பது தற்போதைய பெயருக்கு 1986 டிசம்பரில் மாற்றம் பெற்றது 1998 இல் சீன மாநிலங்களின் நிறுவனமான 'China Center for International Affairs' என்ற நிறுவனமும் இதனுடன் இணைக்கப்பட்டது.

இங்கு தொழில் முறையினர் மற்றும் ஆய்வாளர்கள் எனும் முறையில் நூறுபேர் பணியாற்றுகின்றனர். இவர்களுள் பலர் மூத்த அரசியல் மேதைகள், பல்வேறு பகுதிகளையும் பகுத்தறியும் சிறப்புப் பார்வையினர், துறை வல்லுநர்கள் ஆகியோர் ஆவர். இங்கு வரும் இளம் ஆய்வாளர்கள் அனை வரும் 'International Relations' அல்லது அதற்கு இணையான துறைகளில் பல்கலைப் பட்டம் தாங்கியோர்.

உலகப் பொருளாதாரம் மற்றும் அனைத்துலக அரசியல் ஆகிய வற்றோடு தொடர்புடைய மொழிவழியிலான மற்றும் நீண்டகாலக் கோட் பாடுகள் அடிப்படையில் இங்கு தந்திர உத்திகள் பற்றிச் சிந்திக்கப்படு கின்றன. குறிப்பிட்ட ஒரு சிக்கலை மையமாக வைத்தும் அனைத்துலக அவ்வப்போதைய நடவடிக்கைகள் குறித்தும் கருத்தரங்குகளும் மாநாடு களும் நடத்தப் பெறுகின்றன. சமமான ஆர்வத்துக்குரிய துறைகளைத் தேர்ந்தெடுத்து வெளிநாட்டு ஆய்வு நிறுவனங்கள் மற்றும் ஆய்வாளர் களோடு உலகளாவிய தொடர்புகளை வைத்துக் கொண்டு இயங்குகின்றனர். அடிக்கடி இருதரப்பினரும் சந்தித்தும் உரையாடுகின்றனர்.

இதன் ஆராய்ச்சி முடிவுகள் அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்குவோரிடமும் தொடர்புடைய நிறுவனங்களிடமும் தரப்படு கின்றன. இதற்காகப் பல்வேறு நூல்களும் கட்டுரைகளும் வெளியிடப்படு கின்றன.

இங்கு ஏழு ஆராய்ச்சிப் பிரிவுகள் உள்ளன 1. அனைத்துலக அரசியல் பிரிவுகள் 2. உலகப் பொருளாதாரம் 3. அமெரிக்கா பற்றிய ஆய்வுக்களம் 4. ஆசிய - பசிபிக் ஆராய்வகம் 5. மேலை ஐரோப்பிய ஆராய்வகம் 6. தெற்கு ஆசிய நடுகிழக்கு மற்றும் ஆப்பிரிக்க ஆராய்வகம் 7. கிழக்கு ஐரோப்பிய நடு ஆசிய மற்றும் உருசிய ஆராய்வகம்.

இங்கு மிகப்பெரிய நூலகமும் தகவல் தொடர்பகமும் உள்ளன. இங்கு 3 இலட்சம் நூல்கள் உள்ளன என்பதே அதிர்ச்சி கலந்த வியப்புத் தானே! சீன நாட்டிலேயே அனைத்துலக விவரங்கள் தொடர்பான பல நூல்கள் இடம் பெற்றிருப்பது இங்கு மட்டுமே!

'International Studies' எனும் இதழை வெளியிடுகின்றனர். CIIS ஆராய்ச்சியாளர்களும் வெளிநாட்டிலுள்ள அயலகத் தொடர்பு வல்லுநர்களும் இதில் எழுதுகின்றனர்.

10000 படிகள் விற்பனையாகும் இந்த இதழில் சீனாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்தும் மிக முகாமையான அனைத்துலகச் சிக்கல்கள் குறித்தும் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் இந்த இதழின் வாயிலாகத் தங்கள் விவாதங்களை முன் வைக்கின்றனர். அதற்காகவே, வெளிநாடுகளும் தெரிந்து கொள்ளும்படி ஆங்கிலத் திலும் இந்த இதழ் வெளியிடப்படுகிறது.

மூத்த ஆராய்ச்சியாளரான திரு. செங்ருக்கியாங் (Zheng Ruixiang) என்பவரைச் சந்தித்தோம். அவர் தன் கருத்துக்களைச் சீன மொழியில் மட்டுமே கூறினார். ஒரே வரியில் I can read English but I cannot speak English என்று தெரிவித்து விட்டார்.

CIIS போன்ற உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் - உலக அளவிலான தொடர்பு கொள்ளும் நிறுவனங்கள் கூட ஓரளவுக்குத்தான் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

OOO

# ஜியாவ் டாங் பல்கலைக்கழகம் (Jiao Tong University)

இது முற்றிலும் பொறியியல் கல்விக்காக அமைக்கப்பட்டது.

இதில் படித்த மாணவர் ஒருவர் அமெரிக்காவில் செல்வ வளத்தோடு பெரிய ஆளாகி விட்டார். அவர் தன் பல்கலைக் கழகத்துக்காக 1 கோடி அமெரிக்க டாலர் செலவிட்டு ஒரு தொழில் நுட்பக்கட்டிடம் (Technical Building) கட்டிக் கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு நிறுவனத்தின் வாசலிலும் அரசுத் தலைவரின் அழகான வாசகம் எழுதப்பட்டுள்ளது. (சீனமொழியிலும், ஆங்கிலத்திலும்) சில இடங்களில் சீனமொழியில் மட்டுமே.

இந்தப் பல்கலைக் கழகத்தில் அரசுத் தலைவர் கூறியிருப்பது.

"முன்னோரின் பாரம்பரிய மிக்க உறவைத் தொடர்ந்து கைக் கொள்ளவும் அறிவியல் சிகரத்தில் ஏறி உலகின் முதல் பல்கலைக் கழகமாக விளங்கவும் சூளுரை மேற்கொள்வோம்" என்கிறார்.

இங்கு 'கப்பல் கட்டும் துறை' 'மின்னணுப் பொறியியல் துறை' கள் சிறப்புப் பெற்றவை.

திறந்த வெளிப் பல்கலைக் கழகப் பகுதியும் உண்டு.

ஒவ்வொரு நிறுவனமும் போட்டி போட்டுக் கொண்டு தன் சிறப்பை உலகுக்கு உணர்த்தவும் சீன நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோலவும் முயல்கின்றன என்பதை நேரில் கண்டு வியந்தேன்.

இங்கு மிகச்சிறப்பான உணவகம் உள்ளது.

இங்கு ஒரு மிகப்பெரிய கூட்ட மண்டபம் உள்ளது (Auditorium) ஆனால் வெளியில் உள்ள பெயர்ப்பலகையில் மருந்துக்குக் கூட ஆங்கிலம் இல்லை. எல்லாமே சீனமொழியில்தான். 1946 இல் கட்டப்பட்ட இந்த மண்டபத்தில் 1590 இருக்கைகள் உள்ளன.

**கலைச் சொல்லாக்கம்**

பி.இ., எம்.பி.பி.எஸ். இறுதி இரண்டாண்டுகளில் பயிலும் மாணவர் களும், ஆசிரியர்களும் கூட்டாக ஒரு முயற்சியை மேற்கொள்கிறார்கள். ஆம்! ஆங்கிலத்தில் வெளிவரும் ஒவ்வொரு புதிய கலைச் சொல்லுக்கும் சீனமொழியில் புதிய சொல்லாக்கம் செய்கின்றனர். அச' புழக்கத்துக்கும்

விடப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குப் பின் தேவைப்பட்டால் அந்தச் சொல்லாக்கம் செம்மை செய்யப்படுகிறது. மொழி மேம்பாட்டு மையம் (Language Bureau) இதற்கென இயங்குகிறது.

தற்போது மென்பொருள் துறையில் 50% ஆங்கிலம் பயன்படுத்தப் படுகிறது. அதிலும் பி.இ., எம்.பி.பி.எஸ் வகுப்புகளில் இறுதி இரண்டாண்டு களில் பாடங்கள் ஆங்கிலத்திலும் விளக்கிச் சொல்லப்படுகின்றன. பார்வை நூல்களாக ஏராளமான ஆங்கில நூல்கள் உள்ளன.

## ஆங்கிலக் கல்விக்கு ஊக்கம் தரும் அரசு

அண்மைக் காலமாக உலக வர்த்தக மையத்தோடு (World Trade Organisation) சீனநாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கமான உறவு காரணமாகவும் 2008 இல் ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் நடைபெற இருப்பதாலும் சீன இளைஞர்களும் பிறரும் ஆங்கிலத்தில் கூடுதல் தேர்ச்சி பெறவும் ஆங்கில மொழித் திறனை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும் என்று சீன அரசு தெரி வித்துள்ளது. புள்ளி விவரப்படி பார்த்தால் பெய்சிங்கில் உள்ள 1 கோடியே 30 இலட்சம் பேரில் 10 இலட்சம் பேராவது ஆங்கிலம் பயின்று வருகிறார்கள் என்பது தெரிகிறது. 'உலகமயமாக்கலில்' சீனா விரைந்து சென்று கொண்டிருப்பதால் இந்த முயற்சிக்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது. "Government Encourages Public to learn English" என்பது China Daily தந்த தலைப்பு - உள்ளே:

Beijing is striving to reach its goal of teaching citizens to speak English to improve its image as an international metropolis.

Government departments and several industries such as travel and medicine are major target groups to learn English.

சீன நாட்டின் எல்லாப் பள்ளிகளிலும் சீனமொழியே பயிற்றுமொழி. இதுவரை 7 ஆம் வகுப்பிலிருந்து தான் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படித்திருக்கிறார்கள் ஒரு System Engineer - பெயர் : யி ஜியான் பிங் (Ye Jian Ping) அவர் என்னிடம் சொன்னபோது 7 ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் படித்ததாகக் கூறினார். இந்த வாய்ப்பும் 12 ஆம் வகுப்பு வரைதான்.

ஆட்சிமொழி முழுவதும் சீனமொழியில் தான், பிறநாட்டுக்கு மட்டுமே ஆங்கிலம். நம்மைப்போல் 'தாய்மொழி' யை ஏளனமாக இளக்காரமாக நினைக்கும் எவரும் அங்கு இல்லை.

'உலக மயமாக்கல்' விரைந்து வருவதால் ஆங்கிலத்திலும் பயிற்சி தேவை என உணரப்பட்டுள்ளது. முன்பு உருசிய மொழியோடு தொடர்பு இருந்தது. எனவே உருசிய மொழி விரும்பிப் பயிலப்பட்டது. தற்போது அந்தத் தொடர்பு இல்லாமல் போன நிலை. எனவே வெளிநாட்டு முதலீடுகளைச் சீன நாட்டிற்குள் கொண்டு வரும் ஆர்வம் அரசுக்கு இருப்பதால் ஆங்கில ஈடுபாடு ஓரளவு தேவை என்று கருதுகிறார்கள்.

"P.M. has said we will over take America in inviting the Foreign investments into our country".

அந்நாட்டுப் பிரதமரின் கூற்றைக் கவனித்தீர்களா? "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, சீனநாட்டில் பெருமளவு முதலீடு செய்வதில் நாம் விரைவில் அமெரிக்காவை முந்தி விடுவோம்" என்கிறார். வேலை நிறுத்தமே இல்லாத நாடு இது. எனவே, எவரும் துணிந்து இங்கே முதலீடு செய்யவே முன் வருகிறார்கள்.

'தீவிர வாதம்' அறவே ஒழிக்கப்பட்ட நாடு இது. 11 செப்டம்பர் அமெரிக்காவை எவ்வளவு பாதித்துள்ளது என்பதை நாம் அறிவோம். அதனால்தான் பிரதமரால் இவ்வளவு துணிவாகப் பேச முடிகின்றது.

தற்போது மூன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலம் சொல்லித் தர ஏற்பாடாகி உள்ளது. சீன மொழியில் முக்கியத்துவம் எந்த வகையிலும் குறைந்து விடாத அளவுக்கு மட்டுமே ஆங்கிலம் என்பது வரையறை.

முதல் வகுப்புக்கான பொதுவான நூல் 1

6 ஆம் வகுப்புக்குரிய ஆங்கில நூல் 2

7 ஆம் வகுப்புக்குரிய ஆங்கில நூல் 3

ஆகிய மூன்றும் கருத்தரங்கில் காட்டப்பட்டுள்ளன.

## ஆங்கிலப்பயிற்று மொழி

திரு. தட்சிணாமூர்த்தியின் மனைவி அனைத்துலகப் பள்ளியில் (International School) வேலை பார்க்கிறார். சீனாவில் ஆங்கிலப் பயிற்று மொழியில் முதல் வகுப்பிலிருந்து பாடம் நடத்தப்படுவது இங்கு மட்டும் தான். தூதரகத்தில் பணியாற்றுபவர்களின் இளங் குழந்தைகள் அனைவரும் இங்குதான் பயில்கின்றனர். இது நடத்தப்படுவதும் தூதரகத்தால் தான். இவர்கள் மூன்றாண்டுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் பணியாற்ற நேர்வதால் இந்த ஏற்பாடு மற்றப்படி சீன மொழி தவிர, வேறெந்தத் தொடக்கப் பள்ளியிலும் வேறு மொழியிலான கல்வி பயில்வதற்கு வாய்ப்பே இல்லை.

சுன்கோசாங் (Sun Ko Jiang) படித்த நடு நிலைப் பள்ளியையும் பார்வையிட்டோம். தற்போது 3 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுக்கும் திட்டம் வந்துள்ளது. ஆனால் 'ஆங்கிலப் பயிற்றுமொழி' என்பதோ, அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தில் என்பதோ அறவே இல்லை. சில இடங்களில் சீனமொழிக்குக் கீழே ஆங்கிலச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. Ring Road, Road Entrance, Express Way, Lotus Super Center, Petro China போன்ற சொற்கள் நமக்கு விளங்க வேண்டும் என்பதற்காகவும், தற்போது 'உலகமயமாக்கல்' கொள்கை கடைப்பிடிக்கப்படுவதன் தொடக்கமாகவும் இடம் பெறுகின்றன.

ஆனால் பெய்சிங், சியாங்காய் நகரங்களில் அதிக அளவில் காணப் படும் பாலங்களைக் குறிக்க 'Bridge' எனும் சொல்லைப் பயன்படுத்தக் காணோம்.

Qaio எனும் சொல்லே இடம் பெற்றுள்ளது. இதையும் 'கியாவ்' என்று தான் ஒலிக்க வேண்டுமாம்.

OOO

# 12

# கட்டாயக் கல்வி

ஒரு குழந்தைக்கு மேல் யாரும் பெறக்கூடாது என்பது சட்டம்.

ஒவ்வொரு குழந்தையும் 9 ஆம் வகுப்பு வரை (Junior Middle School) கட்டாயம் படித்தாக வேண்டும் எனும் கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்தியாவைப் போலப் படிக்க வேண்டிய காலத்தில் பலர் பட்டாசுக் கடைகளில் வேலை பார்ப்பதும் தீப்பெட்டித் தொழிற் சாலைகளில் தீக்குச்சி அடுக்குவதும், சென்னைக் கடற்கரையில் பட்டாணி சுண்டல் விற்பதும், பள்ளிக் கூடம் போகாமல் ஆடுமாடு மேய்க்கப் போவதுமான எந்தத் தவறுக்கும் இடமில்லை. இங்கும் அரசியல் சட்டத்தின் 45 ஆவது பிரிவு பின் கண்டவாறு கூறுகிறது. "வரப் போகின்ற 10 ஆண்டுகட்குள் இந்தியாவில் உள்ள 5 அகவைக்கு மேல் 14 அகவைக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் அனைவர்க்கும் இலவச கட்டாயக் கல்வி தரப்படும்". 1950 இல் வெளியான இந்தச் சட்டப் பிரிவு ஏன் சரியாகக் கடைப் பிடிக்கப்படவில்லை?அப்படி கடைப்பிடித்திருந்தால் இந்தியா முழுவதும் கல்வி நிலையில் இவ்வளவு முரண்பாடுகள் ஏன்? 2001 ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி கேரள மாநிலத்தில் கல்வி கற்றோரின் எண்ணிக்கை 96% மராட்டிய மாநிலம் 79% தமிழ்நாடு 76% இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் 50க்கும் கீழே! ஏன் இந்த முரண்பாடு? அரசியல் சட்டமே - சட்டப்பிரிவே ஏன் இவ்வளவு மோசமான தோல்விக்குள்ளாகி இருக்கிறது! இந்தியாவில் 62% தான் கல்வி என்கிறார் கல்வி அமைச்சர். சீனாவில், அனைவரும் படித்தவர் - 100 க்கு 100 கல்வி என்ற இலக்கினை இந்த நாடு எளிதாக எய்தியிருக்கிறது.

○○○

# 13

# இந்தியத் தூதரகம்

நானும் நண்பர் கடிகாசலமும் இந்தியத் தூதரகம் சென்றோம். ஏற்கெனவே நேர ஒதுக்கீடு பெற்றிருந்ததால் உரிய நேரத்தில் அழைக்கப் பட்டோம். இந்தியாவுக்கான தூதராக (Ambassador) விளங்கும் திரு. சிவசங்கர மேனன் மிகுந்த ஆர்வத்தோடு வரவேற்றார். பல செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது சென்னை திரும்பியதும் சீனாவைப் பற்றி ஒரு நூல் எழுதப் போகிறேன். அதற்குத் தலைப்பு 'சீன நாடும் சின்ன நாடும்' என்று வைக்கப்போகிறேன் என்றேன். அவர் மிகவும் மகிழ்ந்தார். 'எழுதுங்கள், பெரிய நாடான சீனா எவ்வளவு சாதித்திருக்கிறது - அதே சாதனைகளை நாம் ஏன் செய்யக் கூடாது? மக்கள் தொகையைக் காட்டியே நாம் வெறும் விவாதம் சொல்வதால் பயனில்லை. அதற்கு உங்கள் நூல் அதிலும் உங்கள் நூலின் தலைப்பே உண்மையை உரக்கச் சொல்வதாக அமையும் என்றார்.

அதே தலைப்பில் தான் இப்போது நூல் வந்துள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

ஒரு மதிப்பியல் கருதி, தூதுவரிடம் 'A Hand book of Kerala' எனும் நூலைக் கொடுத்தேன். வாங்கிப் பார்த்ததும் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. என்ன இருந்தாலும் அவரது தாய் மாநிலமாயிற்றே.

ஒரு சில பக்கங்களைப் புரட்டி விட்டுச் சொன்னார். "கேரளம் பற்றி இவ்வளவு விவரங்களைத் திரட்டி வெளியிடப்பட்ட ஒரு நூலினை இப்போதுதான் பார்க்கிறேன். உண்மையில் அற்புதமான முயற்சி. எனக்கு மிகவும் பயன்படும், வீட்டிலும் விரும்பிப் படிப்பார்கள். உங்கள் வருகையால் எனக்குக் கிடைத்த பரிசு இது" என்று கூறி மகிழ்ந்தார்.

நான் இங்கிருந்து செல்லும் போதே A Hand book of West Bengal, A hand book of Tamilnadu, Dravidian Encyclopaedia போன்ற நூல்களைக் கொண்டு சென்றேன். முக்கியமானவர்களுக்கெல்லாம் அந்த நூல்கள் தரப்பட்டன.

ISDL எடுத்துக் கொள்ளும் அரிய முயற்சியால் உருவாக்கப் பட்ட நூல்கள் இவை. இவற்றைச் சீன நாட்டில் சிலராவது படிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமை மகிழ்ச்சியைத் தந்தது.

ooo

14

# நீதி மன்றங்கள்

உயர் நீதிமன்றமாயினும் உச்ச நீதிமன்றமாயினும் வழக்குரைஞர் விவாதங்களும், தீர்ப்புகளும் சீனமொழியிலேயே அமைகின்றன. நம்மூரில் உச்ச நீதிமன்றத்தை மனத்தில் வைத்துக் கொண்டே, உயர்நீதி மன்றத்திலும் ஆங்கிலத்திலேயே எல்லாம் நடைபெறுகின்றன. ஆனால், சீனாவில் சட்டம் முழுவதும் சீனமொழியில் சொல்லித் தரப்படுவதால் எந்தச் சிக்கலும் இன்றிச் சீனம் கோலோச்சுகிறது. அனைத்துச் சட்ட நூல்களும் சீனமொழி யில் உள்ளன. நீதி மன்றங்களில் புழக்கத்தில் உள்ள படிவங்கள் அனைத்தும் சீனமொழியில்தான் உள்ளன என்றாலும், தற்போது சிலபடிவங்கள் மட்டும் ஆங்கிலத்திலும் தரப்படுகின்றன.

○○○

15

# தேசிய நூலகம்

ஒவ்வொரு நாட்டிலும் பெரிய அளவிலான தேசிய நூலகம் ஒன்று கட்டாயம் இருக்கும். இங்கு சென்னையில் உள்ள கன்னிமாரா நூலகம், மும்பை, கொல்கத்தா போன்ற இடங்களில் உள்ள நூலகங்கள் அத்தகையவை.

பெய்சிங்கில் உள்ள தேசிய நூலகத்தைப் பார்வையிடச் சென்றேன். சுன் கோ சாங் உடன் வந்து உதவி செய்தார். எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்தாலும், ஒரே ஒரு பகுதியை மட்டும் சற்று விரிவாகச் சொன்னால் சரியாக இருக்கும். அகரமுதலிகளும், கலைக் களஞ்சியங்களும் அடங்கிய பகுதிக்குச் சென்றேன். இந்த ஒரு பிரிவின் அகல, நீளம் மட்டும், உலகத் தமிழாராய்ச்சி நூலகத்தின் பரப்புக்கும், திருவனந்தபுரம் ISDL இல் உள்ள 'தொல்காப்பியர் நூலக அரங்கின்' பரப்பிற்கும் சமம். அப்படியானால் 4 மாடிக் கட்டிடத்தில் இன்னும் உள்ள பிறபகுதிகளின் பரப்பளவையும் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். சீனமொழியில் மொழி பெயர்க்கப் பட்ட குறள் நூல் உள்ளது.

தமிழ் - ஆங்கில அகரமுதலியும், தமிழ் - உருசியமொழி அகர முதலியும் கண்ணில் பட்டன.

ஆங்கிலம் - சீனமொழி அகரமுதலிகள் பல வெளிவந்துள்ளன. ஆங்கில வினைச்சொற்களைச் சீனமொழிகளில் அடுக்கித் தரும் அ.மு. பிரெஞ்சு - சீன அ.மு. - ஆங்கிலத் தொடர்பான சொற்கள், தொடர்கள் தொடர்பான அ.மு. / மருத்துவம் சொல் அ.மு. (விளக்கம் ஆங்கிலத்தில் - சொல் சீனத்தில்) தொழில் நுட்ப அ.மு. / சீன - ஆங்கில அறிவியல் தொழில் நுட்பப் பேரகராதி / பண்டைய சீனமொழி அ.மு. / சீனம் - சப்பானிய மொழி அ.மு. / புதிய உருசிய / சீன அ.மு.

ஜெர்மனி - சீனப் பேரகராதி / பிரெஞ்சு சீனப் பேரகராதி / கல்லூரி அ.மு. / பல்கலைக் கழக அ.மு. / வெளிநாட்டுச் செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள் பற்றிய அ.மு.

இவர்கள் வகுத்துள்ள கொள்கையே சிறந்ததுதான். 'புழக்கத்தில் உள்ள சொற்களைக் கொண்டே இயன்ற வரை புதுச் சொல்லாக்கம்

அமையவேண்டும்' என்பதே அது. (Every new term must be invented using the existing characters if at all possible)

25 பல்கலைக் கழகங்கட்கான முதுகலை நூல்கள் யாவும் உள்ளன. சீனமொழியில் அறிவியல் தொழில் நுட்பத் தொடர்பாக வெளிவந்த நூல்களின் தொகுப்பு உள்ளது (1991-2000).

இப்படி, ஒரே பிரிவில் மட்டும் எண்ணற்ற நூல்களைத் தன்னகத்தே கொண்டு இந்த நூலகம் விளங்குகிறது என்றால் ஒட்டுமொத்தமாக எவ்வளவு சிறப்பு இருக்கும் என்பதை நீங்களே உணர முடியும்.

புராதன சீனப் பொருள்களைத் தொகுத்தளிக்கும் அகராதி ஒன்று உள்ளது. பல்வேறு அறிவுச் செல்வங்கள் அடங்கிய பேரகராதி 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. Encyc. of Foreign Language Works என்றும் ஒரு கலைக்களஞ்சியம் உள்ளது.

1985 - 93 க்கு இடைப்பட்ட காலத்தில் நூல்களின் வெளியீடு பற்றிய அறிக்கை உள்ளது.

சீன நூல்கள் பற்றிய பேரகராதி ஒன்று (1949 முதல் 1992 வரை) 18 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

சமஸ்கிருத - ஆங்கில அகராதி ஒன்று 1899 இல் வெளியிடப்பட்டு 7 மறுபதிப்புகளைப் பெற்றுள்ளது.

ஜப்பானிய மொழியில் வெளியான விரிவான அகராதிகள் உள்ளன. சீன மொழியில் எழுந்துள்ள நவீன இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் ஆகியவற்றை உள்ளடக்கி 70க்கு மேற்பட்ட தொகுதிகள் வெளி வந்துள்ளன.

இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் கலைக்களஞ் சியம் மற்றும் அகராதித் துறையில் மட்டும் 'சீனமொழி' எந்த அளவுக்கு வளமாக வளர்ந்துள்ளது என்பதைத் தெரிந்து கொண்டால் தான் நமக்கு உறைக்கும் என்பதற்காகத்தான்.

கணிதம் பற்றிய கலைக்களஞ்சியமே சீனமொழியில் 5 தொகுதிகள் வந்துள்ளன.

சீன - ஆங்கில மொழிகளில் அறிவியல் தொழில் நுட்பப் பேரகராதி. செர்மன் - சீனப் பேரகராதி, பிரெஞ்சு - சீனப் பேரகராதி. உலக இடப்பெயர் களுக்கென ஓர் அகராதி. ஆங்கிலம் - சீன மொழியில் அமைந்த (அறிவியல்- தொழில் நுட்ப அகராதி). மின்னாற்றல் கலைக்களஞ்சியம் China digital Library - English - Chinese Dictionary of Electro Technology. French - Chinese Dictionary of Electro Technology போன்ற பல நூல்களைப் பார்க்க முடிகின்றது.

பொறியியலும், மருத்துவமும் சீனமொழியிலேயே பயிற்றுவிக்கப் படுவதால் தேவை கருதி இத்தனை நூல்கள் எழுந்துள்ளன. இது போன்ற செய்திகளை எடுத்துச் சொன்னால், இங்குள்ள சில மரமண்டைகளுக்குப் புரிவதில்லை என்பதுதான் என் வருத்தம்.

நவீன மருத்துவ இயல் நூல்கள் பல வெளி வந்துள்ளன. உலகப் புவியியல், வானியல், நீர்ப்பாசன வசதி, சட்டவியல், இசை நடனம் கலைகள் தொடர்பான விரிவான நூல்கள் சீனமொழியில் படைக்கப் பட்டுள்ளன.

'Eng-Chinese ency. of knowledge' - இப்படியும் ஒரு கலைக் களஞ்சியம். சீனப் பேரகராதி என்றே ஓர் அகராதி நூல் - Ency - Brittanica நூல் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு இதுவரை 20 தொகுதிகள் வந்துள்ளன.

**கலைக் களஞ்சியங்கள்**

வ.அய்.சு. ஏற்கெனவே ஒரு செய்தி சொல்லியிருக்கிறார். சீனாவில் 2000 ஆண்டுக்கு முன்பாகவே 'கலைக்களஞ்சியம்' உருவாக்கப்பட்டது என்று தெரிவித்தார். ஆனால், நான் சென்ற பிரிவில் உரியவர்களிடம் உசாவிப் பார்த்தும், எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தும் அந்தப் பழைய நூலைப் பார்க்க முடியவில்லை. உரியவர்கட்கும் அது தொடர்பாக எதுவும் சொல்ல முடியவில்லை எனினும் 1980 முதல் சீனமொழியிலான கலைக் களஞ்சியம் வெளிவரத் தொடங்கி விட்டது. ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு தொகுதிகள் வந்து கொண்டே இருக்கின்றன. இன்றுவரை 15 க்கு மேற்பட்ட தொகுதிகள் வந்துவிட்டாலும், கலைக் களஞ்சியப்பணி இன்றும் முடிவடையவில்லை. பணி நடந்து கொண்டிருக்கிறது. விளையாட்டு, இசை தொடர்பான நூல்கள் விரைவில் வர இருக்கின்றன என்றனர்.

கணினி அறிவியல் தொழில் நுட்பம் தொடர்பான கலைக் களஞ்சியங்கள் - கணிதம் பற்றிய கலைக் களஞ்சியம் 5 தொகுதிகள்-

சீன பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சுருக்கமான கலைக்களஞ்சியத்தில் 8 தொகுதிகள் உள்ளன.

சப்பானிய மொழிக் கலைக் களஞ்சியம் 18 தொகுதிகளில் உள்ளது. எனவே இக்காலத் தேவைக்கேற்ப எல்லா வகையான கலைக் களஞ்சியங்களையும் வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளார்கள். 1931 இல் 4,00,000 நூல்களை மட்டுமே கொண்டிருந்த நூலகம் 1949 இல் 12 இலட்சம் நூல்களுக்கு வந்துவிட்டது.

பண்பாட்டுப் புரட்சிக் காலத்தில் மட்டும் இந்த நூலகம் மூடிவைக்கப்பட்டிருந்தது - இரண்டு, மூன்று ஆண்டுகள் மட்டும்.

தற்போது 15 இலக்கம் நூல்களுக்கு மேல் கொண்டு சிறந்து விளங்குகிறது.

தரமான, புகழ்பெற்ற ஆங்கிலச் சிறுகதைகளைக் கூடத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்கள். 'Selected Short Stories of O'Henry both in English and Chinese' இதில் ஓ' ஹென்றியின் சிறந்த சிறுகதையான 'The gift of the Magi' எனும் கதையும் அடங்கியுள்ளது.

ooo

# 16

# கதைகள்

"சீனாவில் அறிவியல் நோக்குக்குப் பதிலாக மந்திர சக்திகளில் நம்பிக்கை வைத்திருப்பதையும் குறிப்பிட்ட சில எண்களுக்கும் சின்னங் களுக்கும் தெய்வீக சக்தி இருப்பதாக நினைக்கும் உளப்பாங்கு அவ்வப் போது தலைகாட்டியுள்ளதையும் சுட்டுகிறார் லாரன்ஸ் பின்யன்".

சீன மொழியில் தோன்றிய கதைகளைப் பார்க்கும் போது நமக்கும் அந்த எண்ணமே வருகின்றது. சீனாவை நன்கறிந்த கடிகாசலம் வெளியிட்டுள்ள சீனக்கதைகளிலிருந்து நாம் சில உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

பு சாங்லிங் என்பவர் தொகுத்த கதைகளே நவதந்திரக் கதைகள் மற்றும் விசித்திரக் கதைகள். 431 கதைகளை வெளியிட்டவர் அவர்.

இந்தக் கதைகளின் வாயிலாக சமூகத்தின் மீது அவர் கொண்ட அக்கறையும் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க வேண்டும் எனும் ஆதங்கமும் அவரிடத்தில் இருந்தன என்பதை உணரலாம். ஆனால் அவரால் இப்போது நம் கதைகளில் வருவது போல நேரடியாகச் சுட்டிக் கண்டிக்க இயலவில்லை. எனவே தான் இயற்கை இறந்த கதைகளாகத் திரட்டி (Supernatural elements) பேய் பிசாசு கதைகளையும் இணைத்து இவற்றிற்கு முழு வடிவம் கொடுத்து வெளியிட்டார்.

எதார்த்தத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்துவதற்கு அவருக்கு இந்தக் கதைகள் கைகொடுத்தன" என்கிறார் கடிகாசலம். காரணம் அவரது காலத்திலிருந்த அரசியல் சூழ்நிலைகள் ஆகும். கடிகாசலம் குறிப்பிடுவது போல, 'பு சாங்லிங் வாழ்ந்த காலத்தில் தேசியப் போராட்டமும் வர்க்கப் போராட்டமும் சீனாவில் தீவிரமாக நடைபெற்றன. அந்நிய ஆதிக்கத்தின் அடக்கு முறைகளினால் வாய் திறந்து உண்மை பேசினால் குடும்பத்தையே கூண்டோடு தொலைத்து விடும் அபாயமும் நிலவியது.

1640 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்பும் சீனாவின் நிலை அது. கதைகளின் தலைப்பைப் பார்த்தாலே நாட்டின் போக்கைப் புரிந்து கொள்ளலாம் 'மந்திரத்தால் மாங்காய்' 'சூனியக்காரன்' 'நாய்களும் நரிகளும்' விரிவஞ்சி, நான் கதைகளுக்குள் போகவில்லை.

சீன விந்தைக் கதைகளும் இந்த வகையைச் சார்ந்தவைதாம் ‘வெந்நீரில் முளைத்த மரம்’ எனும் கதையைப் பாருங்கள். துறவி கேட்ட ஒரு பேரிக்காயை, கடைக்காரன் கொடுக்க மறுத்தல் - பிறர் விலை கொடுத்து வாங்கிக் கொடுத்தல் - அதன் விதையிலிருந்தே புதிய மரத்தை உருவாக்கி, உடனே விளைந்த பேரிக்காய்களை எதிரில் இருந்தவர்களுக்கு வழங்குதல் - கடைசியில் பார்த்தால் இவை அனைத்தும் பழைய கடைக்காரன் கடையில் இருந்தவைதாம்.

எல்லாம் ‘சூ! மந்திரக்காளி’ கதைதான். இதே போல் ‘கனவில்’ கிடைத்த நாற்காலியும் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் அடங்கிய கற்பனைதான்.

சித்து விளையாட்டுக் காட்டும் துறவிகள் பிசாசுகளின் கொட்டத்தை அடக்கும் துறவிகள் என்று பல கதை மாந்தர்கள்.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே அரசியல், அநீதிகளையும் கல்வியாளரிடையில் காணப்படும் ஊழல்களையும் தேர்வுக்கு முன்பே ஓர் இளைஞன் கையில் வினாத்தாள் கிடைத்து விடும் அநீதியையும் இவர் கதைகள் படம் பிடிக்கின்றன.

சீனம் தொன்மை மொழி என்பதால், கி.மு. 7 ஆம் நூற்றாண்டிலேயே சீனாவில் நீதிக் கதைகள் தோன்றியுள்ளன.

நீண்ட காலத்திற்கு முன் தோன்றிய நீதிக் கதைகள் இன்று பதிவு செய்யப்பட்டிருப்பது நமக்கு வியப்பைத் தருகின்றன.

தமிழில் தொல்காப்பியர் காலத்தின் பிற படைப்புகள் எவையும் பதிவில் இல்லையே!

பழைய கதைகளும், இக்கால நீதிக்கதைகளும் நூலாக நமக்குத் தரப்பட்டுள்ளன. சீனமொழியிலிருந்து கடிகாசலம் இவற்றைத் தமிழ் மக்களுக்கு விருந்தாகப் படைத்துள்ளார்.

அவர் கூறுவதுபோல, ‘வாழ்க்கை பற்றிய தத்துவார்த்த ரீதியிலான விமரிசனமாக’ சீன நீதிக் கதைகளைக் கருதலாம். என்னால் சீனாவின் மற்ற இலக்கியங்களையும் படித்து உடனடியாக இந்த நூலில் பதிவு செய்திட முடியவில்லை. இந்த நூலுக்கு அவை உடனடியாகத் தேவைப்படவுமில்லை. எனினும் கிடைத்தவற்றைக் கொண்டு சொல்லும் செய்திகளால் சீனாவின் பண்பாடு, பண்டைய வரலாறு, மக்களின் அன்றைய வாழ்வு முறை ஆகியவற்றை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். அதற்காகவே இந்தப் பகுதியைச் சற்றுத் தொட்டிருக்கின்றேன்’ என்கிறார்.

OOO

17

# பண்பாட்டுப் புரட்சி

மாசேதுங் கொண்டு வந்த 'பண்பாட்டுப் புரட்சி' சீனாவில் பெரிய மறுமலர்ச்சியை உண்டாக்கியது என்றாலும், அளவு கடந்த கட்டுப்பாடுகள் மக்களை ஒடுக்கி வைப்பதாகவே பலர் உணர்ந்தனர். சட்ட வடிவிலான கட்டுப்பாடுகளை ஏற்கும் மக்கள், உடையில் கூடக் கட்டுப்பாடு என்பன போன்ற சிலவற்றை ஏற்கத் தயாராக இல்லை. அதனாலேயே 'மா' வின் திட்டம் பாதி வெற்றியும், பாதி தோல்வியு மாகத் தத்தளிக்க நேர்ந்தது. இதை உணர்ந்த - பின்னால் வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மன நிலைக்கேற்பச் சில மாறுதல்களைச் செய்தனர். அதனால் தான் இன்று நாடு தெளிவாகவும், வலுவாகவும் உள்ளது. கடும் கட்டுப்பாடுகள் வந்ததற்கு மாசேதுங் காரணமில்லை, அவர் மனைவிதான் காரணம் என்று மக்களில் பலர் எண்ணுகின்றனர். எனவே, இன்றும் மாசேதுங்கின் மீது மக்கள் வைத்த மதிப்பு மாறாமல் இருக்கிறது.

'பண்பாட்டுப் புரட்சி' நடைபெற்ற காலத்தில் பலவகை இன்னல் களுக்கு ஆளாகி, இடர்மிகப்பட்டு, பிறகு அதிலிருந்து தான் மீண்டது மட்டு மின்றி, சீனமக்களையே மீட்டு, நல்வழிகாட்டிய மக்கள் தலைவராக டெங் ஜீயோ பிங் பாராட்டப்படுகிறார். மாசேதுங்கால் மூடப்பட்ட சில கதவு களைத் திறந்து விட்டுச் சீன மக்களை உரிமையோடு உலவச் செய்தவர் இவர்தாம். இன்றும் அந்த மக்களால் பாராட்டப்படுகிறார்.

மூடப்பட்ட சிலவற்றுள் பெய்சிங் தேசிய நூலகமும் அடங்கும்.

சீனாவில் ஏற்பட்ட பண்பாட்டுப் புரட்சியில் நன்மைகளும் விளைந்தன, தீமைகளும் ஏற்பட்டன.

புரட்சிக்குப்பின் விலைமாதராக இருந்த சிலர் கடுமையான மாற்றத்துக்குள்ளாயினர். அத்தொழிலை மேற்கொள்ளக் கூடாது என்று கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் விலை மாதரும் இல்லை, தேடிப் போவாரும் இல்லை. இது புரட்சிக்குப் பின்னால் ஏற்பட்ட மாற்றம். அத்தகைய பெண்கள் வேறு தொழில்கள் செய்து பிழைக்க வாய்ப்புகள் கிடைத்தன, பற்றிக் கொண்டார்கள், இன்று வாழ்கிறார்கள். நரக வாழ்வை உதறித் தள்ளிவிட்டு ஒழுங்கான வாழ்வில் அவர்கள் கதை நடந்து

கொண்டிருக்கிறது. 'நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம், ஆடைகள் வாங்குவதற்காக' என்று ஒரு 'விபசாரி' சொல்வதாக நா. காமராசன் கவிதை அமைகின்றது. இந்த மண்ணில் இன்றும் அது உள்ளது. ஆனால் சீனாவில் மாறிப்போய்விட்டதே எப்படி? இந்திய மக்கள் சிந்திக்க வேண்டிய இடம் இது.

பண்பாட்டுப் புரட்சி பற்றி மாசேதுங் சொன்னதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.

"These people lack constructive qualities and are given to destruction rather than construction; after joining revolution, they become a source of roving - rebel and anarchist ideology in the revolutionary ranks. Therefore, we should know how to remould them and guard against their destructiveness". Mao-Tse-tung.

தற்போது 'ஹாங்காங்' சீனாவில் தான் இணைந்திருக்கிறது. எந்த வகையிலும் 'ஹாங்காங்' கின் தனிச் சிறப்புகள் முடக்கப் படாமல் கவன மாக அவை பேணப்படுகின்றன. எனவே, நாம் சீனாவோடு இணைந்து விட்டதால் பலவற்றை இழந்து விட்டதாக நினைக்காமல் வலிமை வாய்ந்த நாட்டுடன் இணைந்திருக்கிறோம் எனும் புதுப் பொலிவோடுதான் அவர்கள் நடைபோடுகிறார்கள்.

OOO

18

# இதழ் உரிமையும் ஊழலும்

பொதுக் கூட்டங்களோ, தெருமுனை ஒலிபெருக்கிகளோ, அறவே இல்லை. என்றாலும் அங்கு பேச்சுரிமை உண்டு. இதழ்களுக்கு அரசின் நடவடிக்கைகளில் குறை கண்டு எழுதும் உரிமை உண்டு. சீன நாட்டில் ஆங்காங்கே சில ஊழல்கள் நடந்துள்ளன. அது குறித்து சீன நாளேடு (China Daily) எனும் இதழ் எழுதுவதை அப்படியே தருகின்றேன். படித்துப் பாருங்கள். உங்களுக்கே நிலைமை தெரிந்து விடும். ஆனால் இந்தியாவில் பத்திரிக்கைச் சுதந்திரம் அதிகமோ அதிகம்! பலருடைய தனிப்பட்ட வாழ்க்கையை எழுத முன்வந்து அதையே வெளியிடுமுன் பேரம் பேசி, எழுத்தை - பத்திரிகை சுதந்திரத்தை விலை பேசுபவர்களும் இருக்கிறார்கள் என்று நினைக்கும் போது நமது 'தாராள ஜனநாயகம்' புரிகிறது. ஆனால் சீனாவில் கட்டுப்பாடுள்ள - அதே நேரத்தில் உரிமை மறுக்கப் படாத சூழ்நிலை உள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

'Horizon Market Research Co' 1999 இல் ஒரு கணக் கெடுப்பு நடத்தியது. 'ஊழலற்ற அரசு' என்பதுதான் அப்போது மக்களால் அதிகம் பேசப்பட்ட செய்தியாகும்.

கி.பி. 2000 த்தில் அதே நிறுவனம் மீண்டும் ஒரு கணக் கெடுப்பை நடத்தியது. தற்போது 'ஊழல்' என்பது மக்களால் பேசப்படும் செய்திகளில் ஆறாவது இடத்திற்கு வந்துள்ளது. பியாங் நிங் (Fang Ning) எனும் சீன ஆராய்ச்சியாளர் "ஊழலை எதிர்த்துப் போராடுவதில் தான் எங்கள் நிலை கடுமையாகவே இருந்தது" என்கிறார் அவர். ஆளும் பொதுவுடைமைக் கட்சி (Communist party of China) (CPC) யும் சீன அரசும் ஊழலை ஒழிப்பதில் உண்மையோடும் உறுதிப்பாட்டோடும் முயன்றன என்பதை மறுக்க முடியாது.

கடுமையான சமுதாயத் தாக்கமும் நீதி நெறிக் கல்வியும் அதிகாரிகளிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அதன் விளைவாக ஊழலில் ஈடுபட முனைவதோ அல்லது கடந்த காலங்களைப் போல வெளிப்படை யாகத் தவறு செய்ய முற்படுவதோ தடுக்கப்பட்டன என்றே கொள்ளலாம்.

1950 களிலேயே அதாவது சீனக்குடியரசு உருவான காலத்திலேயே ஊழலை எதிர்த்துச் சீனா போரிடத் தொடங்கியது எனினும் முற்றாக அதில்

அவர்கள் வெற்றி பெறவில்லை. 1990களில் உயர் மட்ட அலுவலர்கள் பலர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன என்பதும், அவர்கள் கையூட்டாகப் பெற்ற தொகை பெருமளவில் இருந்தது என்பதும் சீனாவின் மோசமான நிலையைக் காட்டின.

ஒழுங்கு முறை ஆணையத்தின் மையக்குழு உறுப்பினர் ஒருவர் இப்படிக் குறிப்பிட்டார். திட்டமிட்ட பொருளாதாரத்திலிருந்து அங்காடிப் பொருளாதாரத்துக்குச் சீனா தன்னை மாற்றம் செய்வதில் முனைந்திருந்த தால் ஊழலை எதிர்த்து எடுக்கப்படும் முயற்சிகளைக் கடும் இடர்ப்பாடு களுக்கு இடையேதான் மேற்கொள்ள நேர்ந்தது என்கிறார்.

1970 இல் தொடங்கப்பட்ட சீர்திருத்த முயற்சிகளின் போது சீனா ஒரு நேர்மையான - மேலிருந்து கீழ் வரை ஒரு திறமையான அரசினை உருவாக்கும் கட்டாயத்தில் இருந்தது. என்கிறார் மேற்பார்வை அமைச்சர் ஹி யாங் (He Young) என்பவர். ஆளும் பொதுவுடைமைக் கட்சியின் ஒழுங்குமுறை ஆய்வுக்குழுவின் புள்ளி விவரங்களைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. 1992 அக்டோபர் முதல் 2002 சூன் வரை 1.6 மில்லியன் வழக்குகளை 1.51 மில்லியன் மக்களுக்கு எதிராகத் தொடுத் திருந்தது அக்குழு. ஒழுங்கீனங்களுக்காக 2,59,000 பேர் கட்சியிலிருந்தே நீக்கப் பட்டுள்ளனர்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஆளும் பொது வுடைமைக் கட்சியும் இறங்கியபோது மிகவும் உயர்நிலையில் இருந்த அதிகாரிகள் பலர் அதில் அகப்பட்டனர். 'தேசிய மக்கள் காங்கிரசின் நிலைக் குழுவின் துணைத்தலைவர் 'செங் கெஜீயி, ஜியாங்கி மாகாணத்தின் துணை ஆளுநராக இருந்த லி ஜியாடிங் ஹெமெய் மாகாண காங்கிரசின் துணை ஆளுநராக இருந்த புயூகி பொதுமக்கள் பாதுகாப்புக்கான துணை அமைச்சர் லி ஜிஜோங் மற்றும் சென்யாங் மாநகர முன்னாள் மேயர் மூ சுயிக்கின் ஆகியோர் இதில் குற்றவாளிகள் ஆயினர்.

இந்தக் காலகட்டத்தில் 6,90,000 பொருளாதாரக் குற்றங்களை நாட்டின் ஒழுங்குமுறை ஆணையம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தது.

இந்தக்கால கட்டத்தில்தான் சீன அரசு ஊழலை ஒழிப்பதற்கான கடும் சட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் கொண்டுவந்தது. ஆளுங்கட்சிக் குள்ளும் ஒழுங்கு நடவடிக்கையைக் கடுமையாக எடுத்து, நிர்வாக மேற்பார்வையுடன் ஊழலை ஒழிக்க முற்பட்டது.

மேலே கண்ட செய்திகள் 'China Daily' எனும் இதழில் வெளியிடப் பட்டவை. நாட்டின் நிலையை இவை படம் பிடிப்பதுடன் சீன அரசு எவ்வளவு கடும் நடவடிக்கையை மேற்கொண்டு பெரும்புள்ளிகள் மீது கூடக் கை வைத்திருக்கிறது என்பதைக் காண்பதோடு, இதனை வெளியிடும் அளவுக்குக் கருத்துரிமை அங்கு இப்போது உள்ளது என்பதையும் காண முடியும்.

## நாளிதழ்கள்

நாளிதழ்களோ அல்லது கிழமை இதழ்களோ அதிக அளவில் விற்பனையாகின்றன. அதுவும் இலட்சக் கணக்கில். 'பண்பாட்டுப் புரட்சி' காலத்தில் பொழுது போக்குக்காக யாரும் கதை எழுதக் கூடாது என்பது நிலை. ஆனால் இன்று முழு உரிமை உள்ளது. அதற்கோர் எடுத்துக்காட்டுத் தான் 'China Daily' இதழில் நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் ஊழல்களைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரை.

## சிறுபான்மை தேசிய இனங்கள்

இங்கு 56 சிறுபான்மை தேசிய இனங்கள் உள்ளன. அவர்கள் அனைவருக்கும் அவரவர் மொழியைப் பயிலவும், அவரவர் விரும்பும் சமய வாழ்வை மேற்கொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் சீனமொழி பயின்று சீன நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வேலை பார்க்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. மொத்த மக்கள் தொகையில் 130 கோடியில் 94% சீனர்கள். அதாவது 122.2 கோடி 56 தேசிய இனங்களும் சேர்ந்து 7.8 கோடிதான் என்றாலும் சிறுபான்மையரான இவர்களால் எந்த நாளும் எந்தத் தீங்கும், கலவரமும் நடத்திவிட முடியாது. அப்படியிருக்கும் போது, அவர்கள் முழு உரிமையோடு வாழட்டுமே என்று சீன அரசு முடிவு செய்து விட்டது. பெரிய சிறப்புத்தானே! இந்தப் பெருந்தன்மையான போக்கு சீன இனத்தவரான 'லீ குவான் யு' வுக்கும் இருந்ததால்தான் சிங்கப் பூரில் இன்று 5% உள்ள தமிழர்கள் தமிழ் ஆட்சிமொழி உரிமை பெற்று வாழ்கிறார்கள். மாரியம்மன் கோவிலுக்கும் முருகன் கோயிலுக்கும் தாராள மாகப் போகிறார்கள். தமிழர் திருநாள் கொண்டாடுகிறார்கள். நல்ல தனித் தமிழில் பேசி எல்லாரையும் அசத்துகிறார்கள். குடியரசுத் தலைவராக ஒரு தமிழர் - அதாவது இனவேறுபாடுகளைக் கடந்த ஒரு சிங்கப்பூரியர் மாண்புமிகு எஸ்.ஆர். நாதன் - அவர்கள் அமரும் அளவுக்கு வாய்ப்பும் உரிமையும் பெற்றுள்ளார்கள்.

எனவே, சீனாவில் தேசிய இனங்கள் பாதுகாப்போடு வாழ்கின்றன என்ற செய்தியே மகிழ்ச்சிக்குரியது தான்.

## கன்பூசியசு

கன்பூசியசின் தத்துவங்கள் இன்று உலகம் முழுவதும் அறிமுகமாகி யிருக்கின்றன. "கன்பூசியசு 2500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் புத்தர் வாழ்ந்த காலத்தில் - அவர் அரச குடும்பத்தில் பிறந்ததைப் போல், ஒரு போர் வீரரின் குடும்பத்தில் பிறந்தவர். ஒன்பது பெண் குழந்தைகளுக்குப் பிறகு பிறந்த ஆண் குழந்தை அவர். தந்தை இறந்து போன பிறகு, தானே படித்து ஓர் அரசுப் பணியில் அமர்ந்தார். அப்போது அரசனின் குழப்ப மான நிலைகளை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. பணம் படைத்த முதலாளிகள் தங்கள் விருப்பப்படி அரசனை ஆட்டி வைப்பதைப்

பார்த்தார். இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என எண்ணிக் கொண்டார்." என்பது அவரது கருத்து. அவரைப்பற்றி மணியன் நூலில் உள்ள செய்தியை அப்படியே தருகின்றேன். படியுங்கள் "அவர் ஓர் அரசியல் தத்துவஞானி. இந்தியாவில் சாணக்கியர் அர்த்த சாஸ்திரத்தை உருவாக்கி யதைப் போல், இவரும் கலகத்தின் விளைவாக ஓடிப் போன அரசனை மீண்டும் அரச பதவியில் கொண்டு வந்து உட்காரச் செய்து அரசனாவதற் குரிய சட்டங்களை இயற்றிக் கொடுத்தவர்; அரசில் பிரதம நீதிபதியாகவும், பிறகு பிரதம அமைச்சராகவும் இருந்தவர். ஆனால் பெரிய நிலப்பிரபுக் களின் ஏகபோக உரிமைக்கு இவர் தடையாக இருந்ததால் சூழ்ச்சி செய்து பதவியிலிருந்து விரட்டி விட்டார்கள். அதன் பிறகு, சீனா முழுவதும் சுற்றித் திரிந்து பல தத்துவங்களைப் போதித்தார். கடைசியில் எழுபத்து மூன்றாவது வயதில் தனியே வாழ்ந்து காலமானார்."

"ஆனால் பின்னால் அவருடைய உபதேசங்கள் தான் சீனர்களின் சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்தன. அவருடைய நூல்களைப் படிப்பதுதான் உண்மையான படிப்பு என்றும் கருதினார்கள். அவற்றைப் படித்துத் தேர்வில் தேறியவர்களே அரசுப் பணிகளில் அமர்த்தப்பட்டார்கள். அவர் பிறந்த குபூ என்ற நகரத்தில் கன்பூசியசின் நினைவாலயம் அமைக்கப் பட்டிருக்கிறது. சீனாவுக்கு வரும் பலரும் அங்கே போய்ப் பார்ப்பதுண்டு."

எனவே ஒரு காலத்தில் சூழ்ச்சிக்காரர்களின் கீழறுப்பு வேலை களால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பிற்காலத்தில் எல்லாரும் ஏற்றிப் போற்றும் சிறப்புக்குரிய மனிதராகச் சீனாவுக்கு அவர் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

OOO

19

# சீன நெடுஞ்சுவர் (Great wall of China)

உண்மையில் உலக அதிசயங்களில் ஒன்றுதான். சீனாவுக்குப் போய்ப் பார்க்காமல் வந்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் அந்த மனக் குறை இருந்து கொண்டே இருக்கும். அதனாலேயே அதைப் பார்த்தாக வேண்டிய கட்டாயம். ஒரு நாள் மகிழுந்தில் புறப்பட்டோம். அழைத்துச் செல்லும் பொறுப்பினைச் சுன்கோ சாங் ஏற்றுக் கொண்டார். அவருடைய மகன் ஒரு பொறியாளர். மகிழுந்தும் நன்கு ஓட்டக் கூடியவர். எனவே அவர் மகன் தன் சொந்த வண்டியிலேயே எங்களை அழைத்துச் சென்றார். பெய்சிங்கிலிருந்து 65 கி.மீ. தொலைவில் தான் படாலிங் எனும் பகுதி உள்ளது. அங்கிருந்து சுவர் வரை செல்ல நல்ல வசதிகள் செய்யப் பட்டுள்ளன.


இந்தச் சுவரின் மொத்த நீளம் 10,000 கி.மீ.க்கு மேல் இருக்கும். சீனாவுக்கு அன்றைய பாதுகாப்பு அரணாக இது உருவாக்கப்பட்டது. ஏறத்தாழ 17 மாநிலங்களின் மீது ஊடுருவிச் செல்கிறது.

இது மன்னராட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. எனவே அளவு கடந்த மனித சக்தி இதில் பயன்பட்டிருந்தது. பல இலட்சக்கணக்கான மனிதர்கள் பல்லாண்டு காலம் உழைத்துப் படிப்படியாகக் கட்டியுள்ளார்கள். இதைக் கட்டுவது தரையில் உயர்ந்த சுவர் எழுப்புவது போன்றதன்று, மலைகளில், மலைச்சரிவுகளில், பள்ளத்தாக்குகளில் ஏறி இறங்கிச் செல்லும் பாதைகளில் சுவரை அதுவும் பாதுகாப்பான சுவரை எழுப்புவது எவ்வளவு கடினம் என்பதை உணர முடியும்.

கிழக்குச் செர்மனியையும் மேற்கு செர்மனியையும் பிரிக்க ஒரு சுவர் எழுப்பப்பட்டது. அதுவும் உறுதியான சுவர்தான். ஆனால் இதுபோன்று பல்லாயிரம் கி.மீ. நீளம் படைத்ததன்று. மேலும் செர்மனி ஒருங்கிணைப் புக்குப் பின் அந்த உறுதியான சுவர் கூடப் பெரும்பாலும் இடிக்கப்பட்டு விட்டது. பெர்லினில், நாடாளுமன்றக் கட்டிடத்தின்முன் அடையாளத்துக் காக - நம்மைப் போன்றவர்கள் பார்ப்பதற்காக விட்டு வைத்துள்ளார்கள். ஆனால் சீனநெடுஞ்சுவர் அப்படியில்லை. அது இன்றும் சீனாவின் பாதுகாப்பு அரண் தான். உலக அதிசயம் தான். சீனாவுக்கு ஒரு தனி முத்திரைதான். (சில படங்கள் இணைக்கப்பட்டுள்ளன).


சுன் கோவின் பையன் வண்டியிலேயே இருப்பதாகத் தெரிவித்த தால், நானும், கடிகாசலமும் சுன் கோசாங்கும் சென்றோம். உள் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டோம். நம்மைப் போன்று சுற்றுலாப் பயணிகட்கு ஒரு கட்டணம், சுன்கோ போன்ற சீனர்களுக்குக் குறைந்த கட்டணம். வியப்புத் தான். தங்கள் மக்களை எவ்வளவு பக்குவமாகப் பாதுகாக்கிறார் கள் என்று பாருங்கள்.


உள்ளே சென்று ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை ஏறிப் பார்த்தோம். பார்த்து வியந்தோம். சீனர்கள் மட்டுமின்றிப் பல நாட்டுச் சுற்றுப் பயணிகளும் வந்து குவிகின்றார்கள். நாங்கள் செ ன்ற போது ஒரு பேருந்தில் சப்பானியச் சுற்றுலாப் பயணிகள் வந் து இறங்கினர். நாங்களும் தேவையான படங்களை எடுத்துக் கொண்டோம். சீன நெடுஞ்சுவர் வடிவமைப்புக் கொண்ட சிறு சிற்பங்கள் ஆறேழை வாங்கிக் கொண்டோம்.



அடையாளத்துக் காக Great Wall எனும் முத்திரையும் சீன எழுத்துகளும் பொறிக் கப்பட்டுள்ள ஒன் றிரண்டு உள்ளாடை களை வாங்கினோம்.

இரண்டு வகை யில் சீனர்களைப் பாராட்ட வேண்டும். பரந்து கிடக்கிற பூமியைப் பாதுகாக்க வேண்டும் எனும் நினைப்போடு யாரோ ஒரு மன்னர்எடுத்துக் கொண்ட முயற்சியை அடுத்து வந்த மன்னர்களும் தொடர்ந்து செய்தார்கள் என்பது ஒன்று. மன்னராட்சிக் காலத்தின் இச் சுவரின் பயனையும், பழமை யையும் உணர்ந்து தற்போது சீனக்குடியரசு மிக நன்றாகப் பேணி வருகிறது என்பது மற்றொன்று. பழமையில் சிறப் பானவற்றைப் பேணிட எண் ணும் பொதுவு டைமைக் கட்சி அரசை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? மணியன் காட்டிய மேற்கோள் இது:






"The great wall is indeed a great monument to the greatness of the ancient chinese working people"



ஆனால், இந்தச் சுவரை எழுப்பி முடிப்பதற்குள் பல்லாயிரக் கணக்கான சீனர்கள் உயிரை விட்டிருக்கிறார்கள் என்ற செய்தி மட்டும் நெருடலாக உள்ளது.

"உயிரை விட்டுக் கட்டியிருக் கிறான்" என்பார்களே அது இதுதானோ !



# 20

# பொது

1. வாடகை உந்துக்கு இரண்டு வகைக் கட்டணம் இருப்பது ஒரு வியப்புத்தான். சிறிய வண்டியாக இருந்தால் கி.மீ. க்கு 1.20 யுவான், இதில் கொஞ்சம் 'இடுக்கி முடக்கி'த்தான் உட்கார வேண்டும். ஆனால் பெரிய வண்டிக்குக் கி.மீ.க்கு 1.60 யுவான். இதில், தாராளமாக உட்கார்ந்து பயணம் செய்யலாம்.

2. தொடர் வண்டிகளில் பயணம் செய்வது அந்நாட்டில் வானூர்திப் பயணங்களைப் போல அமைந்துள்ளது என்றால் வியப்பில்லை.

நாம் தொடர்வண்டி நிலையத்துக்குள் நுழையும் போதே பயணச்சீட்டு உள்ளவர்கள் மட்டும் தான் போகமுடியும் என்று தெளிவுபடுத்தி விடுகிறார்கள். வழியனுப்பவோ, வரவேற்கவோ வருபவர்கள் நிலையத்துக்கு வெளியே நின்று கொள்ள வேண்டும். எனவே நடைமேடைகளில் தேவையில்லாத கூட்டம் - ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லை. நாம் உள்ளே நுழையும் போதே நம் பெட்டி, கைப்பை எல்லாமே ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றன (Scan System) அதன் பின் அவற்றுடன் நாம் மட்டுமே உள்ளே செல்ல முடியும். பயணச்சீட்டில் இங்கிருப்பது போல் முதல், இரண்டு, குளிர்பதன வகுப்பு என்றில்லாமல் மென் படுக்கை (Soft Bed), வன்படுக்கை (Hard bed) என்றவாறு வகை பிரிக்கப்படுகின்றன. காத்திருப்போர் அறை (Waiting Hall) இரண்டுக்கும் வெவ்வேறாக உள்ளது. மென்படுக்கைக் குரிய பயணச்சீட்டு வைத்திருப்போர் அதற்குரிய 'காத்திருப்போர் அறை'யில் அமர வேண்டும்.

காத்திருப்போர் அறையில் உள்ளோர் உடனடியாக நடைமேடைக் குள் செல்ல முடியாது. எந்தெந்த வண்டிகள் புறப்படுகின்றன என்பது அறிவிப்புப் பலகையில் 'மின்னணு' இயக்கத்தில் காட்டப்படுகின்றது. நேரமும், வண்டிசெல்லும் ஊரும் மட்டும் வந்தால் போக முடியாது. அதனுடன் 'நடைமேடை' எண்ணும் வந்தால் தான் உள்ளே போக முடியும்.

நடைமேடை எண்ணுடன் விளக்கம் வந்ததும் புறப்பட்டு நம் வண்டிக்குப் போகலாம், ஏறி உட்காரலாம். அரைமணி நேரத்தில் வண்டி புறப்பட்டு விடுகிறது.

வானூர்திப் பயணம் போல் எவ்வளவு கட்டுப்பாடுகள்! நினைக்கவே இனிக்கிறது.

3. எந்த இடத்திலும் கட்சிக் கொடிக்கம்பங்களோ கொடிகளோ இல்லை. இரவுக் களியாட்ட விடுதிக்கு அனுமதியில்லை. தெருவில் ஊர்வலம் விடுவது, போக்குவரத்தைச் சிதைப்பது போன்ற எவையும் இல்லை. உணவகங்களில் யாருக்கும் 'சில்லரை' (Tips) தரக்கூடாது.

அதைவிட முக்கியம் இந்நாட்டில் விபசாரம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இதில் அரசு கடுமையாகவும் இருக்கிறது.

எவ்வளவு பனியானாலும், கடுங்குளிரானாலும் காலை 8 மணிக்குக் கல்வி நிறுவனங்களும் அலுவலகங்களும் தொடங்கி விடுகின்றன. மாலை 4 மணி வரை இயங்குகின்றன.

ஓர் அமைதியை, ஆழத்தை, சீன மக்களின் இயக்கத்தில் பார்க்கிறேன்.

25 ஆண்டுகட்குமுன் மணியன் சென்று திரும்பிய பின் அவர் எழுதிய செய்திகளைவிட இப்போது காணும் போது இன்னும் வியப்பாக உள்ளன.

4. சாலையோரங்களில் நடைமேடைக்காகப் போடப்படும் தடுப்பு களின் மீது முறையான சட்டங்களால் பிணைக்கப்பட்டு விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இவை அனைத்தும் சீன மொழியில்தான். ஆங்கிலம் எங்கும் இடம் பெறவில்லை.

மிகப்பெரிய விளம்பரப்பலகைகள் (Holdings) அங்கும் உள்ளன. 15 விளம்பரப் பலகைகளை எண்ணிப் பார்த்தேன். எனினும் இந்தப் பதினைந்து பலகைகளிலும் 'சீனமொழி' மட்டுமே உள்ளது. ஆங்கிலம் இல்லை.

5. சீன நாட்டில் பெருநகரங்களில் வைக்கப்பட்டுள்ள Holdings அத்தனையும் சீனமொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. ஆங்கிலம் கீழே ஒரு சில இடங்களில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

ஆனால் சென்னையில் அண்ணா மேம்பாலத்தில் நின்று கொண்டு சுற்று முற்றும் பாருங்கள். நாம் இங்கிலாந்தில் இருப்பதை உணர முடியும். தமிழையே பார்க்க முடியாத அவலநிலை.

6. சுவரொட்டிகளோ, சுவரில் எழுதப்படும் விளம்பரங்களோ எங்கும் இல்லை. இங்கே, யாரோ ஒரு சுப்பம்மா இறந்தால் கூட அவருக்காக ஒரு 'கண்ணீர் அஞ்சலி' சுவரொட்டி. 'கமுதி' யில் அவர் இறந்திருந்தாலும் அவர் இறந்த செய்தி 'கம்பம்' வரை போகும். ஆம்! கமுதியிலிருந்து கம்பம் செல்லும் அரசுப் பேருந்துகள் இந்த விளம்பரங்களைத் தாங்கிச் செல்ல வேண்டும்! அந்த அளவுக்கு இலவச விளம்பரம். ஊர்ப் பெயரைக் காட்டும்

நெடுஞ்சாலைத் துறை அறிவிப்புப் பலகைகள் கூட யார் யாரோ ஒட்டுகிற சுவரொட்டிகளைத் தாங்கி ஊர்ப்பெயர்களையே மறைத்து விடுகின்றனவே! இப்போதுதான் சென்னையில் 'சுவரொட்டி விளம்பரம் தடை செய்யப் பட்டுள்ளது' எனும் அறிவிப்பினைப் பார்க்கிறோம்.

7. 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் கிடைக்கிறது. நான் கண்டு வந்த எந்த நாட்டிலும் நான் ஒருநாள் கூட மின்தடையைப் பார்த்ததில்லை, கேள்விப்பட்டதும் இல்லை. நம் நாட்டில் மின்தடைக்குக் கணக்கே இல்லை, துப்புரவும், ஒழுங்கும் (neatness & regularity) எங்கும் கொடிகட்டிப் பறக்கின்றன.

8. நம்மூரில் உள்ளதுபோல அரைப்பாடி சரக்குந்துகள் பல அங்குள்ளன. போக்குவரத்து விதிகளை மீறிச் சில இடங்களில் அவை உட்புகுந்து செல்வதைக் காண முடிந்தது. வாடகை உந்து ஓட்டுபவர்களும் சிலநேரங்களில் கூட்டத்துக்குள் புகுந்து முன்னே செல்ல முனைகின்றார்கள்.

9. இங்கு 1 லிட்டர் எரிநெய் (Petrol) விலை 2.78 யுவான் (அதாவது 16.68 உரூபாய் தான்). மலேசியாவிலும் விலை குறைவுதான். நம் நாட்டில் மட்டும் எரிநெய் விலை ஏன் 35 உரூபாயைத் தொடுகிறது? விவரம் அறிந்தவர்கள் விளக்கினால் மகிழ்வேன். அதிலும் கடந்த 10 மாதங்களில் மட்டும் 16 தடவை விலை ஏறியுள்ளது.

10. இங்கும் சாலை ஏதங்கள் (Road Accidents) உண்டு. எதிர்பாராத வகையில் ஏதேனும் ஒரு வண்டியில் கோளாறு ஏற்பட்டு அது 'திடுமென' நிற்க நேரும்போது பின்னால் வரும் வண்டிகள் மோதுவதுண்டு. மற்றபடி, தாறுமாறாக ஓட்டுவதாலோ, மக்கள் குறுக்கும் நெடுக்கும் நடப்பதாலோ ஏதங்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது.

சின் பெய் (Jin Bai) எனும் பெயரிலமைந்த மகிழுந்துகள் இங்கு அதிகமாக ஓடுகின்றன.

11. சாலையை விரிவுபடுத்தவோ, அரசுக் கட்டிடங்களுக்காகவோ நிலம் கையகப்படுத்தப்பட்டால், அந்த இடத்தில் குடியிருந்தவர்களுக்கு மாற்று இடம் தரப்படுகிறது. வீட்டு வசதி வாரிய வீடுகளே வழங்கப்படு கின்றன. எனவே தங்கள் இடம் பறி போகிறதே என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை.

12. உழவர்களாக உள்ள - குறைந்த வருவாய் உள்ளவர்கட்காகவும் குடியிருப்புகள் உள்ளன. பெரிய அளவில் அவை கவர்ச்சியாக இல்லை என்றாலும் அடிப்படை வசதிகள் கொண்டவையாகவே அவை விளங்குகின்றன.

13. பல்வேறு அடுக்குமனைகளுக்கு இடையில் - புதிய, உயரமான கட்டிடங்களுக்கு இடையில் பழைய மாளிகைகள் சிலவற்றையும் காண முடிகின்றது. 1949க்கு முன் சீனாவை அடக்கி ஆண்டு கொண்டு வந்த

வெளிநாட்டாரின் தங்குமிடங்களாக இந்தக் கட்டிடங்கள் இருந்துள்ளன. எனினும் அவை இடிக்கப்படாமல் அதே நிலையில் பேணப்படுகின்றன.

14. ஒரே இடத்தில் 6 பாலங்கள் கூட உள்ளன. வெவ்வேறு திசைகளுக் கும் செல்லுமாறு இவை மேலும் கீழும் அமைந்து வண்டிகளைத் திசை திருப்பி அனுப்பி விடுகின்றன. பார்க்கக் கண் கொள்ளாக் காட்சி தான்.

இங்கு சாக்கடைகள் கூடத் தூய தண்ணீரோடு ஓடிக் கொண்டிருக் கின்றன. இதில் 'நாம் மீன் வளர்க்க முடியும்' என்றார் நண்பர். அவர் சொல்வது உண்மைதான்.

15. நகரங்களில் மண் தரைகளைப் பார்ப்பதே அரிதாக உள்ளது. பெரிய மேல் நிலைப்பள்ளிகள், கல்லூரிகளுக்கு உள்ளே எந்த இடமும் மண்தரையாக இல்லாமல் தெளிவான சிமெண்டுப் பூச்சுடன் திகழ்வதைப் பார்க்கிறோம். விளையாட்டுத் திடல் செயற்கையான பச்சைப் பசும்புல் போர்த்தி அழகுற விளங்குகிறது.

16. சீனர்கள் நாளை எழுதும் போது ஆண்டினை முதலிலும் மாதத்தை ந டுவிலும் நாளை இறுதியிலும் எழுதுகின்றனர். 2002-10-22.

17. 'Carra four' எனும் பெயரில் ஒரு பல்பொருள் அங்காடி. பல அரங்கு களைக் கொண்ட மிகப்பெரிய வணிக வளாகம். இது ஒரு வெளிநாட்டு நிறுவனம். 'இடத்தை' பெய்சிங் மாநகராட்சி வழங்கியுள்ளது. கட்டிடத்தை 'Carra four' நிறுவனம் கட்டிக் கொள்கிறது. பிற வசதிகள் அனைத்தையும் மாநகராட்சி செய்து கொடுத்துள்ளது. இடத்திற்கு வாடகை - விற்பனையால் கிடைக்கும் வரி - இவை அரசுக்கு வருவாய். ஏறத்தாழ 300 பேராவது இங்கு வேலை பாக்கின்றனர். எல்லாருமே சீனப் பெண்கள். எனவே சீன அரசு 300 சீனர்களுக்கு வேலை கிடைக்கச் செய்து விடுகிறது. முதலீடு மட்டும் தான் வெளிநாட்டுடையது.

ஒரே நேரத்தில் பணம் கட்டும் இடத்தில் மட்டும் குறைந்து 250 பேராவது வரிசையில் நிற்கிறார்கள். எனவே கடையில் வணிகமும் எவ்வளவு நடந்திருக்கும் என்று உய்த்துணர்ந்து பார்க்கலாம்.

சீன அரசே இப்படிப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளைத் தான் வரவேற்கிறது.

## 18. தமிழ்க் குடும்பங்கள்

சீனாவில் வாழும் தமிழ்க் குடும்பங்களே 6 தான். இந்தியத் தூதரகத்தில் வேலை பார்க்கும் 1. திரு. செல்லையா குடும்பம் 2. திரு. வாசன் குடும்பம் 3. திரு. தட்சிணாமூர்த்தி குடும்பம். நோகியா (Nokia) நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஒருவர். மோட்டாரோல (Motorolo) வில் வேலை பார்க்கும் ஒருவர். தற்போது பீகிங் வானொலியில் தமிழ்ச் சேவைப் பிரிவில் வல்லுநராக வேலை பார்க்கும் முனைவர் கடிகாசலம்.

மற்றபடி வேறெங்கும் இந்தியர்களைக் காண முடியவில்லை. ஒருவேளை. பெருமளவில் முதலீடு செய்யும் வணிகர்களோ, அல்லது பொருள்களை விற்பனை செய்து பொருளீட்டும் வணிகர்களோ எங்காவது தங்கள் நிறுவனங்களை அமைத்திருக்கலாம். அவ்வளவுதான்.

19. தமிழ் நாட்டில் பலர் இலெனின், மார்க்சு, ஸ்டாலின் போன்ற பெயர்களை வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் சீன மக்களுக்கு உருசியத் தலைவர்கள் மீது மதிப்பு இருந்தாலும், கார்ல் மார்க்சு தந்த தத்துவம் தான் சீனாவில் வாழ்கிறது - சீனாவை ஆள்கின்றது என்றாலும், யாரும் அந்தப் பெயர்களை வைத்துக் கொள்ளவில்லை.

குடும்பப் பெயர் - தந்தை பெயர் - தன் பெயர் என எல்லாமே சீனச் சொற்கள் தாம் - சீனமொழிதான்.

20. சீனாவில் 'தீவிரவாதம்' என்பதே தலையெடுக்க வொட்டாமல் அறவே தடுக்கப்பட்டுள்ளது. நான் அங்கிருந்த நேரத்தில் (15 நாள்களில்) பி.பி.சி. செய்தி வாயிலாக அறிந்த செய்திகள் :

இந்தியாவில் - தமிழகத்தில் விழுப்புரம் பகுதியில் பட்டாசு வெடித்த வகையில் 10 பேர் சாவு. ஐதராபாத்தில் 12 பேர் சாவு. 28.10.2002 இல் கொல்கத்தாவில் 22 பேர் கொலை. (போடோ தீவிரவாதிகளால்).

உருசியாவில் ஓர் அரங்கத்தில் காட்சி பார்த்துக் கொண்டிருந்த 700க்கு மேற்பட்டவர்களைத் தீவிர வாதிகள் புகுந்து சிறை வைத்துவிட்டார்கள். எச்சரிக்கையும் விடுத்தார்கள். அதனால் அரசு எடுத்த நடவடிக்கையால் பலர் மீட்கப் பட்டு விட்டாலும் 38 தீவிரவாதிகளும், 118 அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர்.

ஆனால், சீனாவில் இது போன்ற எந்தச் செய்தியும் இல்லை. சீன அரசின் உறுதியான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. ஆனால் ... நம் நாட்டில் ... விரிவாகச் சொல்லி வருத்தப்பட்டு என்ன பயன் ?

21. நம் நாட்டில் ஏழைகள் பலர், ஏன் படித்துப் பட்டம் பெற்றவர்கள் பலரும் கூட வேலை இல்லாமையால் பட்டினி கிடக்கும் நிலை. இப்படிப்பட்டவர்கள் பிழைக்க வழி? தானி (Auto) ஓட்டுவதுதான்.

மிகவும் ஏழைகள் நரவண்டி (Rickshaw) ஓட்டிப் பிழைக்கிறார்கள். இப்போது பங்குத் தானிகள் (Share Auto) நகரங்களில் ஊடுருவியுள்ளன.

ஆனால், சீனாவில் இவை எவையும் இல்லையே! ஆனால் மிதி வண்டிகள் மட்டும் ஏராளமாக உள்ளன. நகரத்தின் எல்லாச் சாலைகளிலும் நான்காவது பாதை மிதிவண்டிகளுக்காக மட்டும். வேறு எந்த வாகனமும் இந்த எல்லைக்குள் நுழையக் கூடாது மிகவும் பாதுகாப்பான மிதிவண்டிப் பயணம். ஆனால் நம் நாட்டில் மிதிவண்டியில் போகின்றவர்கள் கிடைத்த சந்தில் புகுந்து வெளி வரும் சாகசக்காரர்களாக அல்லவா இருக்க வேண்டியுள்ளது.

போக்குவரத்தில் இவ்வளவு ஒழுங்குள்ள சீனாவைப் பார்த்த பிறகு தான் நாம் மக்கள் தொகையைக் காரணம் காட்டி நமது ஒழுங்கின்மைக்குச் சப்பைக் கட்டுக் கட்டி வருகிறோம்; இப்படிச் சொல்லியே நாம் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதை உணர முடிந்தது.

22. போக்குவரத்தில் மிகச்சிலர் மட்டும் ஒலிப்பானைப் (Horn) பயன்படுத்துகிறார்கள்.

## 23. உணவு முறை

உணவுப் பழக்க வழக்கங்களை நாம் கொஞ்சம் ஆழ்ந்து தான் பார்க்க வேண்டும் 'உண்டவன் உரம் செய்வான்' என்பது நமது பழமொழி. இதை உணர்ந்து கடைப்பிடிப்பவர்கள் சீனர்கள் தாம். உண்மையில் நன்றாகவே சாப்பிடுகிறார்கள். ஆனால் நாம் நெடுநாள்களாகச் சொல்லிச் சொல்லி வருகிறோமே அதுதான் இல்லை. ஆம்! பாம்பைச் சாப்பிடு கிறார்கள் என்பதெல்லாம் இல்லை.

உணவில் பன்றிக்கறி உள்ளது. இதைத்தான். மேலை நாட்டு வானூர்திகளில் பறக்கும் போது நமக்கே 'அசைவ உணவில்' சேர்த்துக் கொடுக்கிறார்களே. எனவே இதில் வியப்பேதும் இல்லை. உயிருள்ள மீனை நம்மிடம் காட்டிவிட்டு அதை அப்படியே அவித்து. மசாலா இட்டுச் சுவை படச் சமைத்துக் கொண்டு வருகிறார்கள். எந்த விடுதியிலும் இது தான் நடை முறை. பிறகு நமது 'இறால்' பெருமளவில். முட்டை எல்லா இடத்திலும். பிறகு எல்லாமே காய்கறிகள். அடடா! ஒரே உணவு மிசையில் (Dining Table) பத்துக்கு மேற்பட்ட காய்கறி வகைகள். முட்டைக்கோசு, பட்டாணி, அவித்த வேர்க்கடலை, காரட்டு, காளான் எனப் பலவகை. எல்லாம் ஒரே இடத்தில். ஆறேழு பேர் சுற்றி அமர்ந்து தங்களுக்கு வேண்டியதெல்லாம் எடுத்துச் சாப்பிடுகிறார்கள். அதுவும் அவர்கள் இரட்டைக் குச்சிகளைப் பயன்படுத்தி மிக விரைவாகச் சாப்பிடும் அழகே அழகு. அவர்களுடன் நான் நான்கு இடங்களில் விருந்து உண்டேன். சீன வானொலியில் பணியாற்றும் தமிழ்ப் பிரிவுத் தலைவி கலையரசி தன் தோழர், தோழிகளுடன் தந்த விருந்து 'Bei Institute of Vocational Training' எனப்படும் தொழிற்பயிற்சிப் பல்கலை நிறுவனத் தலைவி எங்களுக்கு அளித்த விருந்து.

சியாங்காய் நகரில் சுன்கோ சாங்கின் மாமியார் வீட்டில் தரப்பட்ட விருந்து. பின் அவரது மற்றோர் உறவினர் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து. பின்னது இரண்டிலும் சிலர் மதுவகைகளையும் அருந்தினார்கள். என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியும் என்பதால் எந்தச் சிக்கலும் இல்லை. நானும் எனக்குத் தேவையானதை அதிகம் எடுத்துச் சாப்பிட்டேன். குறிப்பாக, மீன், முட்டை, இறால் ஆகியவற்றோடு சில காய்கறிகளை விரும்பி உண்ண முடிந்தது.

## 24. வரைவின்மை

பெரும் அரசர்கள் மாடமாளிகைகளில் வாழ்வதும் அவர்களது அந்தப் புரங்களில் பல அழகிகள் இடம் பெற்றிருப்பதும் பல காலமாய், பல நாடுகளில் காணப்படும் பழக்கம்தான். மன்னர் மானிய ஒழிப்புக்குப்பின் இந்த முறை இந்தியாவில் ஒழிக்கப்பட்டுவிட்டது என்றே கூறலாம். சீனாவில் மிங் (Ming) மன்னர்களைப் பற்றிய செய்திகள் பல உண்டு. இவர்களது மாளிகைகளைச் சுற்றி அழகிகள் பலர் கூடியிருந் தார்கள். இவர்கள் அனைவருமே மன்னர்களின் ஆசை நாயகிகள். இப்படி, 3000 பேர் இருந்தார்கள். இவர்கள் எல்லாரையும் மன்னர்கள் அனுபவிக்க முடியாததால் சீட்டுக் குலுக்கிப் போட்டு ஒவ்வொரு நாளும் தேர்ந்தெடுப் பார்களாம். அப்படியிருந்தும் வாய்ப்பே பெறாத பெண்கள் பலர் மூத்து, முதிர்ந்து அழிந்து போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தனி மனித ஆதிக்கம் மேலோங்கி நின்று, பெண்ணினத்தை எப்படிச் சீரழித்துள்ளது என்பதைப் பாருங்கள்.

அப்படியிருந்த சீனாவில் தான் இன்று ‘விபசாரம்’ முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆசைநாயகி, பூசைநாயகி, இவையெல்லாம் கூடாது.

பெர்லின் சென்ற போது பார்த்தேன். பல இடங்களில் முக்கிய தெருக்களில் பாலியல் மனைகள் பளிச் சென்று விளங்குகின்றன (Sex shop). ஆனால் சீனாவில் மூச்! இரவு விடுதிகளோ, களியாட்டங்களோ, ஆட்டம் பாட்டங்களோ சீனாவில் இல்லை என்பதை அறியும் போது,

அடடா! எவ்வளவு பெரிய மாற்றம்?

எத்தனை கட்டுப்பாடுகள்!

‘கற்பு’ எனும் கோட்பாட்டில் மேலோங்கி நிற்கும் நம் இந்திய நாட்டின் நிலைகளை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

நாம் எங்கே நிற்கிறோம் என்பது புரிந்து விடும். மாசேதுங் செய்த பண்பாட்டுப் புரட்சி, அடிமைப்படுத்தப்பட்டுப் பிறர் காமப் பசிக்கு இரையாகி வந்த பல பெண்களை மீட்டு விடுதலை கொடுத்துள்ளது.

25. ‘ஜெம்’ வீரமணி எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து இரண்டு செய்திகளைத் தெரிவிக்கலாம்.

சீன நாடு சுற்றுலாத் துறையில் பெரிதும் முன்னேறியுள்ளது. ஏறத்தாழ 1 இலட்சம் கோடி வருவாய் இவர்களுக்கு அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

மற்றொன்று உணவுப் பற்றாக் குறையை அறவே போக்கி உணவு உற்பத்தியில் இவர்கள் தன்னிறைவு பெற்றுள்ளார்கள்.

26. மலேசிய மொழியில் ஏராளமான ஆங்கிலச் சொற்கள் அப்படியப் படியே எடுத்தாளப்பெற்று ஒலி மாற்றம் மட்டும் செய்யப்படுகின்றன. Restoran, Teksi, Kapaciti, Teknologi ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம். ஆனால் சீன மொழியில் பிறமொழிச் சொல்கலப்பில்லை என்றே சொல்கி றார்கள். அனைத்துப் பெயர்களும் சீனமொழியில் அமைந்திருப்பதையும் காணலாம். மொழித் தூய்மை (Purity of Language) பேணப்படுகிறது.

27. 'Keep to Right' - போக்குவரத்தில் அமெரிக்க முறை கையாளப் படுகிறது.

28. 130 கோடிப் பேர்க்கும் அடையாள அட்டை (Identity Card) உண்டு. நம்ப முடியாத, ஆனால் உண்மையிலும் உண்மை. ஆனால் நமது துணைப் பிரதமர் அத்வானி குறிப்பிடுகிறார் பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களில் 11500 பேர் 'விசா' காலம் முடிந்தும் இன்னும் இந்தியாவை விட்டு வெளியேறாமலே இருக்கிறார்கள் என்று.

நம் நாட்டிலேயே ஒரு தொகுதிக்குள் உள்ள அத்தனை வாக்காளர் களும் அடையாள அட்டை பெற்று விட்டார்களா என்றால் அதுதான் இல்லை. எடுக்கப்பட்ட அடையாள அட்டைகளாவது உரியவர்களிடம் கொடுக்கப்பட்டனவா என்றால் அதுவும் இல்லை. ஒரு 'ஊர் நல அலுவலர்' (VAO) வீட்டில் பலரது அட்டைகள் கொட்டிக் கிடக்கின்றன என்று செய்திகள் தாம் வருகின்றன.

29. இங்கு மிதிவண்டி வைத்திருப்பவர்கள் அதிகம் என்பதை மறவாமல் சொல்ல வேண்டும். ஒரு நெடுஞ்சாலையில் இடப்புறம் மூன்று தடங்கள் (Three Tracks) என்றால் வலப்புறமும் மூன்று தடங்கள். மூன்று தடங்களில் முதல் இரண்டில் மகிழுந்துகள், வாடகை உந்துகள், மூன்றாவது (ஓரத்தில்) உள்ள தடத்தில்தான் பேருந்துகளும், சரக்குந்துகளும் செல்ல வேண்டும். இதற்கும் அடுத்து நான்காவது தடம் - சிறிய தடம் - மிதி வண்டிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மிதிவண்டி ஓட்டுபவர்கள் இதில்தான் செல்ல வேண்டும். இந்தச் சிறிய தடத்தில் முந்திச் செல்வதற்காகக் கூட (to over take) பிற வண்டிகள் வரக்கூடாது. எனவே மிதிவண்டி ஓட்டுபவர்கள் எந்த இடரும் இன்றி, எளிதாகவும், மகிழ்வாகவும் வண்டியை ஓட்டிக் கொண்டு போகிறார்கள். என் நண்பர் சுன் கோ சாங் கூடத் தன் வீட்டிலிருந்து சீன வானொலி நிலையத்துக்கு (CRI) அன்றாடம் மிதிவண்டி யில்தான் வந்து செல்கிறார்.

இதில் ஒரு சிறப்பு சாலையில் நரவண்டிகள் இல்லை, தானிகள் (Auto) அறவே இல்லை. பகிர்வுத் தானிகள் (Share Auto) அறவே .. இல்லை. பின் என்ன? மிதிவண்டி ஓட்டுபவர்களுக்கு என்ன தொந்தரவு இருக்க முடியும்? ஆனால் நம் நாட்டில் இந்த வண்டிகளின் குறுக்கீடுகள்; எதிலும் புகுந்து எப்படியும் செல்லும் உரிமைகள். அடாவடித்தனமான உரிமைகள்,

நினைத்த இடத்தில் நின்று ஆளேற்றி, நிறுத்தி இறக்கிவிடும் பகிர்வுத் தானிகளின் புதுவரவால் எத்தனை குழப்பங்கள்.

நம் நாட்டிலும் போக்குவரத்து ஒழுங்கு வரவேண்டும் என்றால் மேலே சொன்ன வகையறாக்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் அது முடியாது, கூடாது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்களுக்கு ஏழைகளுக்கு இதுதான் சோறுபோட்டு வாழ வைக்கிறது. அதையும் நான் மறக்கவில்லை. எனவே, இவை ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

சாலையோரங்களில் கடைகள் என்பதே அங்கு இல்லை. இங்கு, ஓரங்களில் என்ன, தக்க வாய்ப்புக் கிடைத்தால் முழுச் சாலையையும் அடைத்து விட்டு வணிகம் செய்யும் தள்ளு வண்டிக் காரர்களை என்ன செய்வது?

அங்கு நடைமேடைகளில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை. நடைமேடை ஓரங்களில் அழகாகவும், வரிசையாகவும் மரங்களை வளர்த்து வைத்திருக்கிறார்கள். இங்கு நடைமேடை என்பது அந்திப்பொழுது அசைவ அங்காடிகள் - கடை வைத்திருப்பவர்கள் தாராளமாகப் புழங்க வாய்ப்புள்ள இலவச வீட்டு மனைகள் - தேவைப் பட்டால் குடும்பத்தோடு தங்கிக் கொள்ள வாய்ப்புள்ள தொகுப்பு வீடுகள்.

இவர்கள் நடைமேடையை ஆங்காங்கு ஆக்கிரமித்துத் துண்டித்து விடுவதால் நடப்பவர்கள் பெரும்பாலும் சாலைகளில் நடக்கிறார்கள். பலரும் சாலையில் நடப்பதால் தான், பல வண்டிகள் அவ்வப்போது 'நடைமேடை' களில் ஏறிப் பயணம் செய்து 'இடம் மாறிப்புக்கு' ஏதங்களை (விபத்துகள்) உருவாக்குகின்றன.

இவற்றுக்கு எப்போது விடிவு?

## 30. விரைவு வண்டி

சில செய்திகள் நமக்கு அதிசயமாகவே இருக்கின்றன. பெய்சிங் நகரிலிருந்து சியாங்காய் நகர் 1463 கி.மீ. தொலைவில் உள்ளது. மலேசியாவின் குரோ - தாய்லாந்து எல்லையில் உள்ளது. ஜோகூர் பாரு எனும் நகர் சிங்கப்பூரைத் தொட்டுக் கொண்டு நிற்கிறது. இரண்டுக்கும் இடையில் 900 கி.மீ. தொலைவு. ஒட்டுமொத்த மலேசிய நாடே இந்த நீளத்துக்குள் அடங்கி விடுகிறது. இங்கே, தமிழ் நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து சென்னை தாண்டிக் கும்மிடிப் பூண்டி வரை எடுத்துக் கொண்டால் 800 கி.மீ. வரும். நமது தமிழ்நாடு இந்த நீளத்துக்குள் அடங்கி விடுகிறது. ஆனால் சீனாவில் இருபெரு நகரங்கள் 1463 கி.மீ. இடைவெளியில். இதில் வியப்பே விரைவு வண்டியின் வேகம் தான். மணிக்கு 110 கி.மீ. வேகம். எனவே பெய்சிங்கிலிருந்து 14 மணி நேரத்தில் சியாங்காய் சென்று விடுகிறோம். அது விரைவு வண்டியா? அடடா! எல்லா வசதிகளையும் கொண்ட படுக்கை அறை. 4 படுக்கைகள் கொண்ட அறையில் இடம்

கிடைத்தால் கீழே உள்ள படுக்கையில் உள்ளவர்கள் (Lower Berth) 15 யுவான் கூடுதலாகக் கட்ட வேண்டும். மேலே (Upper Berth) இடம் கிடைப்பவர்கட்கு இந்தக் கட்டணம் குறைவு. அறைக்குள் தேநீர் போட்டுக் குடிக்க வசதி (Chinese Tea). 5 மாதம் சீனா கடுங்குளிரைச் சந்திப்பதால் படுக்கை அறைக்குள்ளேயே வெப்ப ஆவி (Heat air) வரும் வாய்ப்புடன் துத்தநாகக் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதிலிருந்து வரும் கனப்பு நம்மைக் குளிரிலிருந்து மீட்டு விடுகிறது. கோடை காலத்தில் குளிர் பதன வசதி.

மாலை 6 மணிக்குப் புறப்படும் விரைவு வண்டி காலை 8 மணிக்குப் போய்விடுகிறது. இதில் பயணச்சீட்டுப் பரிசோதகர் பெண் என்பதும், காவல் துறைப் பணி பார்ப்பவரும் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

அருமையான வசதிகளுடன் அமைந்த தொடர்வண்டி இது. மற்றொரு வியப்பையும் சொல்ல வேண்டும். இந்தத் தடம் நான்கிங் ஆற்றைத் தாண்டிச் செல்கிறது. இப்போது பாலம் போடப்பட்டுள்ள தால் விரைவில் கடந்து செல்கிறது. ஆனால் இந்த ஆற்றுப்பாலம் 1980 இல் தான் போடப்பட்டதாம்.

அப்படியானால் அதற்கு முன்?

கேட்டால் மூக்கில் விரலை வைக்க வேண்டும். அதற்கு முன் நான்கிங் ஆற்றின் கரை வரை வந்த தொடர்வண்டியும் மக்களும் சிறிய கப்பல்களில் ஏற்றப்பட்டு அடுத்த கரைக்குக் கொண்டு செல்லப்படுவர். மறுபடி வண்டிப் பெட்டிகள் இணைக்கப்பட்டு மக்களும் ஏறிப் பின் பயணம் செய்ய வேண்டும். நம்பமுடிகிறதா? ஆனால் நடந்திருக்கிறதே!

இந்த 25 ஆண்டுகட்குள் எவ்வளவு முன்னேற்றம்? நம் ஊரில் இராமேசுவரம் செல்ல பாம்பன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட 10 ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம் வேகம் நத்தைவேகம், அடித்துச் சொன்னால் ஆமைவேகம்!

அடிக்கடி நினைத்தால் சோகம்!

விடுங்கள்.

## 31. ஆற்று நீர் இணைப்பு

சீனாவில் ஓடும் ஆறுகளில் குறிப்பிடத்தக்கவை மஞ்சளாறும், நான்கிங் ஆறும் தான்.

மஞ்சள் வண்டல் மண் படிவதால் மஞ்சளாறு என்று பெயர் பெற்றாலும் அதன் உண்மையான பெயர் ஹோயாங்கோ. பெரு வெள்ளம் ஏற்பட்டு நாட்டையே பாழ்படுத்தி விடும் குணம் இந்த ஆற்றுக்கு உண்டு. இப்போது 50 ஆண்டுத் திட்டம் போட்டு, கால்வாய்களின் மூலம் நாடு முழுவதும் நிலையான நீர்ப்பாசன வசதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

மற்றோர் ஆறு யாங்ஸிகியாங் எனப்படும் நான்கிங் ஆறு. இவை இரண்டும் உலகின் நீண்ட ஆறுகளில் இடம் பெற்றுள்ளன.


## 32. குடும்பங்கள்

குடும்பங்கள் எப்படியிருக்கின்றன? பல இடங்களில் கூட்டுக் குடும்பத்தையே பார்த்தேன். சியாங்காய் நகரில் 'சுன் கோ சியாங்' உறவினர் வீட்டில் விருந்து சாப்பிட்ட பின் ஓய்வாகப் பேசிக் கொண்டிருந்தேன். பி.இ. படித்த பெண் என்னிடம் ஆங்கிலத்தில் பேசினார் அவர் பெயர் யிஜியான் பிங் அவர் வீட்டின் எல்லா மாடிகளையும் அறைகளையும் சுட்டிக் காட்டினார். எப்படியும் அந்த வீட்டில் 14 பேராவது இருக்கிறார்கள்.

ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிடுகிறார்கள். தனி உலை இல்லை. இதுதானே கூட்டுக் குடும்பம். ஆனால் கூட்டுக் குடும்பத்தோடு தான் வாழவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. தேவைக்கும் வாய்ப்புக்கும் வேலை செய்யும் இடத்திற்கும், வேலை செய்யும் வெவ்வேறு நகரங்களுக்கும் ஏற்பத் தனிக்குடித்தனங்கள் அமைகின்றன. மக்கள் தொகை அதிகம் என்பதால் கூட்டுக் குடும்பங்களாக இருந்தால் ஒரே இடத்தில் வசதி செய்து கொடுக்க அரசுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பது உணரப்படுவதால், அரசும் 'கூட்டுக் குடும்ப' அமைப்பினை வரவேற்கவே செய்கிறது.

## 33. திடல்கள்

பெய்சிங் மாநகரிலும் சியாங்காய் மாநகரிலும் இவ்வளவு பெரிய திடல்கள் இருப்பது வியப்பாகவே இருக்கிறது. பெய்சிங்கில் உள்ள 'டியன் யென் மென்' (Tian an Men) எனும் திடல் மிகப் பெரியது. சீனாவின் தேசியப் பெருநாள் விழா இதில் தான் கொண்டாடப்படும். ஒரே நேரத்தில் 5 இலட்சம் மக்கள் கூடக்கூடிய அளவுக்கு வாய்ப் புள்ள பெருந்திடல் இது. இது வெறும் திடல் மட்டுமன்று, சீனாவின் 'பண்பாட்டுப் புரட்சிக்கு' வித்திட்டுப் போராடிய 'மாசேதுங்' உடல் இங்கேதான் அடக்கம் செய்யப்பட்டுக் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. சீனர்களின் நன் மதிப்புக்குரிய நினைவுச் சின்னமாக இது போற்றப்படுகிறது. ஒவ்வொரு நாளும் அதிக அளவிலான மக்கள் நீண்ட வரிசையில் நின்று, தன் நாட்டுத் தலைவனுக்கு அமைதி அஞ்சலி செலுத்திச் செல்கிறார்கள். அதுவே கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.



## 34. பெண்கள் - நகைகள்

திருமணங்கள் நம் ஊர்போல ஆடம்பரமாக நடைபெறுவதில்லை. மிக மிக எளிமையாக, அதிகமான பொருட் செலவின்றி நடை பெறுகின்றன. பதிவுத் திருமணங்களே முதன்மை பெறுகின்றன. 'திருமணச் சான்றிதழ்' தான் அங்கு தலையாய தேவை. நான் பார்த்த ஒரு வியப்பு! திருமணமான எந்தப் பெண்ணின் கழுத்திலும் தாலிச் சங்கிலியையே காணோம். 'தாலி'யே இல்லாத போது சங்கிலி எதற்கு! கணவனும் மனைவியும் கணையாழி மாற்றிக் கொள்வார்கள். அதுதான் ஓர் அடையாளம்.

நம் ஊரில் தாலிதான் அடையாளம், அதுதான் புனிதம், ஒரு மணப்பெண்ணின் வாழ்வே அந்தத் தாலியில் தானே அடக்கம்! தாலியோடு நிற்கிறோமா! தங்கச் சங்கிலியில் தாலி! கூடவே கழுத்துவடம், பதக்கம் என்று அடடா! நம் பெண்களின் கழுத்திலும் காதிலும் கைகளிலும் இடுப்பிலும் கால்களிலும் தாம் எத்தனை நகைகள்! வாழ்வில் புன்னகை ஏந்திப் பூரிக்கிறார்களோ இல்லையோ, பொன்னகை தாங்கி - அல்ல அல்ல - சுமந்து நடக்கிறார்கள். தங்க விலை இங்கு நாடோறும் எகிறிச் செல்கிறது.

ஆனால் சீனப் பெண்களை இந்த விலையேற்றம் என்ன செய்ய முடியும்?

ஏன்! இளம்பெண்கள் கழுத்திலும் கையிலும் கூடத் தங்க நகைகளே இல்லையே!

அவர்கள் முதலில் இதிலிருந்து விடுபட்டுள்ளார்கள். அப்புறம் பெண் விடுதலை எளிதுதானே!

இரா. வேலம்மாள் எழுதிய 'இலக்கியத்தில் அணிகலன்கள்' எனும் நூலைப் படியுங்கள், நம் பழம் பெருமையும் தெரியும். புதுப் பெருமையும் தெரியும்.

தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும் என்பது நமது நாட்டு வழக்கு. தங்கத்தை அளவுகடந்து நேசிக்கும் நமக்குத் தொழிற் சங்கத்தின் தேவையைப் புரியவைக்கிறார்கள் நம் தோழர்கள். ஆனால், தங்கம் இல்லாமலேயே தொழிற் சங்கப் பெருமை வளர்த்துள்ளது சீன நாடு.

ஆம்! 60 கோடி எனக் கணக்கிடப்படும் சீனப் பெண்கள் கழுத்திலோ, கையிலோ, காதிலோ எந்த நகையும் இல்லை 'தங்கம்' பற்றி அவர்கள் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

அதே நேரத்தில் 'Murder for gain' என்று நம் நாட்டில் நடக்கிறதே அவையெல்லாம் இந்தத் தங்கத்திற்காகத் தானே! நாம் எண்ணிப் பார்க்கவேண்டிய முக்கியமான பகுதி இது.

## 35. பெண்ணுரிமை

சீன நாட்டில் பெண்ணுரிமை அதிகமாகவே உள்ளது. படித்து வேலை பார்ப்பவர்களில், பெரும் பதவி ஏற்றிருப்பவர்களில் பலர் பெண்கள் ஆவர். சீன வானொலியின் தமிழ்ப்பிரிவுத் தலைவி கலையரசி, BBI நிறுவனத்தில் தலைவர் ஒரு பெண்மணி. 'காராபோர்' எனப்படும் பல் பொருள் அங்காடியில் பணி யாற்றுபவர்கள் அனைவரும் பெண்கள் தாம். எனவே, ஒரு காலத்தில் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த சீனப் பெண்கள் தாம் இன்று உரிமையோடு உலாவுகிறார்கள். ஊருக்குப் புறப் படும் போது, அணியமாகி வெளியே வந்ததும், வளாகத்துக்குள்ளேயே வாடகை உந்து வந்து நின்றது. சரியான பனிமூட்டம், நடுக்கும் குளிர், வெப்ப நிலை 0° காலை 6 மணி. வாடகை உந்தில் ஏறி உட்கார்ந்து 'அப்பாடா' என்று பெரு மூச்சு விட்டோம் நானும் கடிகாசலமும். ஓட்டுநர் வண்டியை ஓட்டத் தொடங்கினார். கவனியுங்கள் காலை 6 மணிக்கு 0° வெப்ப நிலையில் அந்த வண்டியை ஓட்டியவர் ஒரு பெண்மணி. அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். எனவே துணிச்சலாக நடமாடுகிறார்கள்.

இங்கே, மார்கழி மாதக் குளிரில் கோலம் போடப் பெண்கள் வெளியே வந்து போடத் தொடங்கினால், கழுத்துச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடக் கயவர்களும் வந்து விடுகிறார்கள். அவர்கள் தங்கள் 'கடமை' களைக் காலையில் இருந்தே தொடங்குகிறார்கள்.

ஆனால் சீனாவில் இதுபோன்ற அச்சத்திற்கே இடமில்லை. காரணம் எந்தப் பெண்ணின் கழுத்திலும், கையிலும் தங்க நகையே இல்லையே!

அதனால் 6 மணி விடியலில் ஒரு பெண் அலட்டிக் கொள்ளாமல் வானூர்தி நிலையத்துக்கு விரைகிறார். காந்தியடிகள் ஒரு கனவு கண்டார்.

"எப்போது நள்ளிரவு நேரத்தில் அழகான இளம் பெண் ஒருத்தி கழுத்து நிறைய நகைகளுடன் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அச்சமின்றிப் போய் வருகிறாளோ அன்றுதான் இந்தியா விடுதலை பெற்றதாய்ப் பொருள்".

அவர் சொல்லிவிட்டார் நமக்கெல்லாம் பெரியவர், நமக்கே உரியவர், ஆனால் அதை நம்பி இப்படி அனுப்ப முடியுமா இந்தியாவில்!

ஒன்று மட்டும் உண்மை, இந்தியாவில் பிறந்த புத்தரைச் சீனாவுக்கும் தாய்லாந்துக்கும், சப்பானுக்கும் இலங்கைக்கும் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் அனுப்பிவிட்டு, கிட்டத்தட்ட நாம் மறந்துவிட்டோம்.

அதேபோலக் காந்தியடிகள் கண்ட கொள்கையையும் நாம் சீனாவுக்கு அனுப்பிவிட்டு, காந்தியடிகள் இப்படிக் கனவு கண்டார் என்று மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். புத்தரோடு, காந்தியார் கனவும்

ஏற்றுமதியாகி விட்டது. இறக்குமதி செய்து கொண்ட சீனநாடு நம்மைப் பார்த்துப் புன்னகை புரிகின்றது.

## 36. மணியன் நூலிலிருந்து மற்றொரு செய்தி

"அச்சடிப்பதற்கு வேண்டிய காகிதம். அச்சிடும் இயந்திரம் ஆகிய இரண்டையும் முதலில் கண்டுபிடித்த பெருமை சீனாவுக்கு உண்டு. அதற்கு முன்னால் செப்புத் தகட்டில் தான் பொறித்து எழுதிக் கொண்டிருந்தார்கள்.

காகிதத்துக்குரிய கூழைத் தயாரித்து, துணியைப் போலக் கெட்டிக் காகிதமாக உருவாக்கினார்கள். காய்லூன் எனும் விஞ்ஞானி அதைப் பயன்படுத்தினார். இங்கிருந்து தான் அரேபியாவுக்குப் போயிற்று. அங்கே எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்புதான் முதன் முதலாகக் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது."

எனவே 'சீனநாடும் சின்ன நாடும்' என்ற இந்த நூலைக் கூட அவர் கள் கண்டு பிடித்த காகிதத்தில் தான் பதிவு செய்து கொண்டிருக்கிறேன் - சரிதானே!

37. காந்தக் கல்லைக் கட்டித் தொங்க விட்டால் வடக்கு தெற்காகத் திசை காட்டி நிற்கும் காந்த ஊசியைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்தாம்.

38. திருமணம் ஆவதற்குப் பெண்ணுக்கு 20 அகவையும், பையனுக்கு 22 அகவையும் முடிந்திருக்க வேண்டும். பெற்றோர்கள் தொடர்ந்து பொருளீட்டினால் அவர்களை அவர்கள் போக்கில் விட்டு விடுவர். ஆனால் முதிர்ந்த பெற்றோர் பொருளீட்டும் நிலையில் இல்லை என்றால் பிள்ளைகள் அவர்களைக் கடைசி வரை பேண வேண்டும். இது தான் சீனாவின் சட்டம் என்று மணியன் கூடக் குறிப்பிட்டுள்ளார்.

## 39. அடிப்படைத் தேவைகள்

சீன அரசு ஒவ்வொரு குடி மகனுக்கும் கீழ்க்கண்ட அடிப்படைத் தேவைகளை உறுதி செய்கிறது 1. உணவு 2. உடை 3. எரிபொருள் 4. கல்வி 5. இறுதிச் சடங்குக்கான தேவைகள். ஆம்! குழாய் மூலமாகவே ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீரும், சமையல் எரி ஆவியும் வருகின்றன. அப்புறம் என்ன? அந்த அளவுக்கு அரசு தன் கடமையைச் சரிவரச் செய்கிறது.

## 40. வேளாண்மை

வேளாண்மைக்கு இங்கு முழுமையான, முதன்மையான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பெய்சிங் நகரைத் தாண்டியவுடனேயே பல இடங்களில் பச்சைப்பசேல் என்று பயிர்கள் கூத்தாடும் வயல் வெளிகளையும், ஆங்காங்கே நீர்நிலைகளையும், பல இடங்களில் சிற்றாறுகளையும் பார்க் கிறோம். சியாங்காய் நகரைத் தொடும் வரை இந்தக் காட்சிகள் தொடர்கின்றன. வேளாண்மை உற்பத்தியிலும் இந்த நாடு முன்னிலையில் இருப்பதால் தான் இத்தனை கோடி மக்களையும் பசியில்லாமல் காப்பாற்ற முடிகின்றது.

## 41. வேலையில்லாத் திண்டாட்டம்

தொழில் புரிவோர், அரசுப் பணியில் அமர்ந்திருப்போர் பலராக இருந்தாலும் அங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கவே செய்கிறது. பின்னே, இல்லாமல் இருக்குமா?

தமிழ்நாட்டில் மட்டும் 6 கோடியே 21 இலட்சம் மக்களில் 51 இலட்சம் பேர் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து விட்டுக் காத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். (2002 இறுதி நிலவரம்). அப்படியானால் இந்தியாவில் வேலையில்லாதவர் எவ்வளவு பேர் இருப்பர்? எத்தனை கோடி தேறும்?

இந்தியாவை விடப் பெரிய நாடான சீனாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கத்தான் செய்யும்.

ஆனால் நம்மளவுக்கு எந்த ஒரு சிறு வருமானமும் இல்லாமல் வறுமையில் வாடும் அளவுக்கு நிலை இல்லை.

வாழ்க்கையை முற்றிலும் செம்மை செய்து கொள்ள முடியாத நிலையில் பலரும் இருந்தாலும், யாரும் பட்டினி கிடக்கவில்லை. உணவுக்கும் உடைக்கும் அரசுதான் உறுதியளித்துவிட்டதே! உறுதியளித்த படி வழங்கியும் வருகிறதே!

## 42. ஆட்பெயர்கள்

சீனர்களின் பெயர்களைப் பார்த்தால் வியப்பாக உள்ளது. சீனப் பெயர்களைத் தவிர வேறெந்தப் பெயரையும் நான் கேள்விப் படவில்லை. சூ யென் லாய், மா சே துங், சுன் கோ சியாங், லீ, லி, ஸூங், ஜியாங் என்றவாறு பெயர்கள் அமைகின்றனவே தவிர, பொது வுடைமை முன்னோடிகள் என்பதற்காக யாரும் கார்ல் மார்க்ஸ், ஸ்டாலின், இலெனின் போன்ற பெயர்களைக் கூட வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்ப்பிரிவில் உள்ள கலையரசியும், கலைமகளும், வாணியும் கூடத் தமிழ் மீது உள்ள பற்றினால் வைத்துக் கொண்டார்களே தவிர, அவர்கள் யாரும் தங்கள் சீனப் பெயர்களை அறவே மாற்றிக் கொண்டு விடவில்லை. பெயர்கள் தங்கள் மொழியின் அடையாளம் - மொழி சார்ந்த இனத்தின் அடையாளம் என்று அவர்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக் கிறார்கள்.

அடையாளத்தை அறவே உதறிவிட்டு நுனிநாக்கு ஆங்கிலமும், மேனா மினுக்குத் தனமும் கொண்டலையும் நம்மூர்த் தமிழர்களை ஒரு கணம் ஒப்பிட்டுப்பாருங்கள். சீனா எவ்வளவு தெளிவாக நடைபோடுகிறது என்பது தெரிந்து விடும்.

## 43. அரட்டை

இங்கே "அரட்டை அரங்கம்" நடக்கிறது. நடந்து கொண்டே இருக் கிறது. பொழுது போகாத இளைஞர்களும் இளைஞிகளும் ஆங்காங்கே

கூடிப் பலமணி நேரம் அரட்டைக் கச்சேரி நடத்துவதை இங்கு எங்கும் காணலாம். ஆனால் சீனாவில் 'கெக்கெலி' கொட்டிச் சிரிப்போர், அரட்டை எனும் பெயரில் கூத்தடிப்போர், வெட்டிப் பொழுது போக்குவோர் என்று எவருமில்லாமல் நாடு பார்த்துக் கொள்கிறது என்றே கருதுகிறேன். ஆனால் மாலை நிகழ்ச்சிகட்கும் முறையான பொழுது போக்குகட்கும் இடமும் உண்டு உரிமையும் உண்டு.

## 44. விளையாட்டு

விளையாட்டுத் துறையில் சீனர்கள் வெகுவாக முன்னேறி உள்ளார்கள். அண்மையில் நடைபெற்ற உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளில் சீனாதான் முதலிடத்தைப் பிடித்தது. தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று பதக்கங்களை அள்ளிக் குவித்தது. பிற நாடுகள் எல்லாம் அடுத்துத் தான். ஆனால் நாமோ பத்தாவது இடத்தில் இருந்தோம். எனினும், விளையாட்டு, என்றால் உடற்றிறன் காட்டல் (Gymnastics) போன்றவை இங்கு உண்டே தவிர மட்டையடிக்கிற (Cricket) வேலை மட்டும் இல்லையே! சிந்தித்தீர்களா!

அதுமட்டுமன்றி, 2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துகிற பொறுப்பைச் சீனா பெற்றுவிட்டது. அதில் பங்கு பெறவும் பரிசு பெறவும் கி.பி.2002 ஆம் ஆண்டிலேயே அதற்கான விழாக்கள் நடக்கின்றன. நான் அங்கே இருந்த போதுதான் இந்த விழாக்கள் தொடங்கின.

அந்த அளவுக்குச் சீனமக்கள் விளையாட்டில் பேரார்வம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

ஒலிம்பிக்கில் பங்கு பெறவும், பலரோடு பழகவும், பல நாட்டாரையும் வரவேற்கவும் ஒரு சிலர் ஆங்கிலம் கற்றுக் கொள்ளும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

## 45. உணவுப் பழக்கம்

உணவில் மிக முக்கியமான செய்தி ஒன்று உண்டு, 10 காய் கறிகள் 3 அசைவ உணவு என்றால், அரிசிச் சோறு ஒரு சிறு கலயம் அளவுக்குத்தான். கொல்கத்தாவில் இரசகுல்லா வைத்துக் கொடுப் பார்களே - அல்லது தேநீர் ஊற்றிக் கொடுப்பார்களே மண் கலயம் - அதைவிடச் சற்றுப் பெரிதாக இருக்கும். அந்த அளவுதான் அரிசிச் சோறு. எனவே அவர்களது உணவுப் பழக்கமே வேளாண்மை உற்பத்திப் பொருள்களின் தேவைகளை உணர்த்தி விடுகிறது.

## விருந்தோம்பல்

மலேசியா, சிங்கப்பூரில் எங்குச் சென்றாலும் 'தண்ணி' சாப்பிடுங்கள் என்று சொல்லி - வழங்கி மகிழ்வார்கள். நம்மூர்த் 'தண்ணி' அன்று இது. தேநீர், குளம்பி (காபி) பழச்சாறு, மைலோ, ஆர்லிக்சு எல்லாமே 'தண்ணி'

தான். அதே போல் சீனாவில் எங்குச் சென்றாலும் தேநீர் தான். அதுவும் சீனத் தேநீர் (Chinese Tea). முதல் தடவை குடித்தபின் சற்று நேரம் கழித்து, வெந்நீர் ஊற்றியபின் குடித்தாலும் மேலும் சுவையாக இருக்கும்.

தூளைக் குவளையில் கொட்டிவிட்டு மேலும் மேலும் வெந்நீர் ஊற்றினால், சீனத் தேநீரைக் குடித்துக் கொண்டே இருக்கலாம்.

**இறைவணக்கம்**

சீனாவில் அரசியல் சட்டப்படியே அனைவர்க்கும் மதம் சார்ந்த உரிமைகள் தரப்பட்டுள்ளன. ஒரு பகுத்தறிவாளனை - கடவுளை வணங்காதவனை யாரும் வற்புறுத்தி, அவனிடம் ‘மதப்பிரசாரம்’ செய்யக் கூடாது. அதேபோல், கடவுள் நம்பிக்கை உடைய ஒருவனிடம் போய் அவனுடைய சமய உணர்வுக்கு எதிராக எந்த விவாதமும் எவரும் செய்யக் கூடாது.

மலேசியாவில் கூட ‘கடவுள் இல்லை’ என்று யாரும் சொல்லக் கூடாது - மலேசிய திராவிடர் கழகம் உட்பட - ஆனால் நம் நாட்டில் இரண்டும் உண்டு. எல்லா மதங்களிலும் எதிர்ப்புகளும் சார்புகளும் உண்டு.

**இரும்புத் திரையா?**

நாமெல்லாம் சொல்லி வந்தபடி இப்போது அந்த நாட்டில் இரும்புத் திரை இல்லை. முழுமையான உரிமையுடன் நடமாட முடியும். எதையும் சென்று பார்க்க முடியும். அதிலும் உலக மயமாக்கல் (Globalization) கொள்கையை நோக்கி விரைந்து நடக்கும் சீனாவில் இரும்புத் திரையே இல்லாமல் செய்து விட்டார்கள் என்றே சொல்லலாம்.

**விடுமுறை**

ஓர் அரசு ஊழியர் 15 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய பின் தான் அவருக்கு விடுமுறையே தரப்படுகிறதாம். அதனால் சீனர்களில் பலர் எந்த வெளிநாட்டுக்கும் போனதில்லை. சீனச் சிற்றூர்களில் வாழும் பலர் பெய்சிங், சியாங்காய் போன்ற நகரங்களைக் கூடப் பார்த்ததில்லை என்கிறார்கள்.

**டிராகன்**

‘டிராகன்’ என்பது சீனமக்களின் வாழ்வில் எந்த அளவுக்கு இடம் பெற்றிருக்கின்றது என்பது குறித்துக் குறிப்பாகச் சொன்னேன். ‘Flight of Dragon’ என்ற பெயரிலேயே ஒரு நூல் வந்திருக்கிறது.

‘Dragon’ என்பதை அ. பெருமாள் ‘யாளி’ என்று மொழி பெயர்த்திருக்கிறார். அடே! நமக்குத் தெரிந்த யாளி தான் என்று நமக்கே ஒரு நெருக்கத்தை உண்டாக்கி விடுகிறது இந்த நூல். எனினும் ஐரோப்பிய யாளி, பாரசீக யாளி, பாபிலோனியப் பெண் யாளி, எகிப்திய யாளி ஆகியவையும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. எனினும், சீனயாளி என்பது கலைமானுக்குள்ள கொம்புகள், ஒட்டகத் தலை, பாம்பின் கழுத்து

ஆகியவற்றோடு இராட்சதக் கண்களையும் உடைய ஒரு வேறுபட்ட உருவ அமைப்பு என்பதை அறிய வேண்டும். இது பற்றிப் பெருமாள் தரும் கருத்து இது "பௌத்தத் தத்துவத்தின் கூற்றுப்படி, மனிதனுடைய கவலை யாவற்றிற்கும், பொருளின் நிலையாமையும், தோன்றி மறையும் வாழ்க்கையுமே காரணம் என்றாலும், இவையே கலைஞனின் மெய்ம்மைக்கும், ஒளிரும் ஆவேசத்துக்கும் தூண்டு கோலாயிருந் திருக்கின்றன.

ஆத்மா தான் விரும்பிய திசையெல்லாம் வீசித்திரியும் காற்றோடும் விரைவில் மழையாக மாறிப் பொழியும் மேகத்தோடும், மஞ்சோடும் மீண்டும் மேலே செல்லும் ஆவியோடும், தன்னை ஒன்றாக்கிக் கொள்கிறது. ஆத்மாவின் இந்த ராஜசக்தி நீராக, எங்கும் நுழைந்து எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும். இந்தச் சக்திதான் சைனாவில் 'டிராகன்' என்றும் கற்பனை மிருகமாக உருவகம் பெற்றது" என்றார்.

நம் நாட்டில் யாளி, போன்ற விலங்குகள் படங்களாக, பல இடங்களில் ஓவியங்களாக, மிகப் பல இடங்களில் சிற்பங்களாக விளங்குவதைப் பார்க்கிறோம். ஆனால் சீனாவில் 'டிராகன்' எனும் விலங்கு புகழ்பெற்றது. இதுவும் கற்பனை விலங்குதான். எனினும் இன்றும் சீனாவில் பழைய கட்டிடங்கள், பூங்காக்கள் போன்றவற்றில் டிராகனின் உருவச் சிலைகளை அழகாக அமைத்திருக்கிறார்கள். 'டிராகன்' உருவத்தைப் பார்த்ததுமே 'சீனா' நம் நினைவுக்கு வரும் அளவுக்கு அதனைப் பல வடிவங்களில் அடையாளப்படுத்திக் காட்டுகிறார்கள்.

### ஓவியக்கலை

ஓவியம் என்பது தமிழர்கட்கும் தொன்மையான கலைதான். எனினும் மகேந்திரவர்மன் காலத்துச் 'சித்தன்ன வாசல்' போன்றவை பழமையானவை. இவற்றுள் முக்கியமானவை.

ஆனால் சீனா கி.மு.2000 முதலே ஓவியக் கலையில் சிறந்திருந்தது என்று மேல்நாட்டு அறிஞர்கள் உறுதியிட்டுச் சொல்லியுள்ளார்கள்.

எனினும் கி.பி.618 க்குப்பின் தான் 'ஓவியக்கலை' சீனாவில் உச்சநிலையடைந்தது. இதே காலத்தில் பல்லவர் காலத்தில் உருவான 'சித்தன்ன வாசல்' ஓவியத்தை நினைவில் வையுங்கள்.

சீனர்களிடம் உள்ள சிறப்பு அவர்களுக்கு இயற்கையின் பாலுள்ள ஆர்வமும் பற்றும்தாம். மலர்களைப் போற்றி மகிழ்வது இவர்கள் நீண்டகாலமாக வளர்த்துக் கொண்டுள்ள பண்பாடாகும்.

நிலக்காட்சிப் படங்களை வரைவதிலும், மலர்களை வரைவதிலும் இவர்கள் முதன்மைக் கவனம் செலுத்தியுள்ளனர் எனினும் அவற்றை இங்கிதமாகப் புலப்படுத்தக் கற்றிருந்தனர்.

மற்றோர் உண்மையையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சீனாவின் பழைய ஓவியங்கள் யாவும் புத்த சமயம் சார்ந்தவை தாம். பிற்காலத்தில் தான் மதச்சார்பற்ற படங்களும், மனித உருவ ஓவியங்களும் தோன்றின. மேலும் அவர்களது ஓவியங்களில் மேதைப் பண்பு மிளிர்வ தாகவும் சொல்கிறார்கள். எப்படி யிருந்தாலும், ஓவியம் சிற்பம் போன்ற கலைகளை வளர்ப்பதில் சீனர்கள் பலர்க்கும் முன்னோடியாகவே விளங்கி இருக்கிறார்கள்.

**சிற்பக்கலை**

இவர்களது சிற்பக் கலைத்திறனையும் நாம் பாராட்டித்தான் தீரவேண்டும். நாம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர்களது 'சூ! மந்திரக்காளி' ஈடுபாடுகளையும் மனத்திற்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் சீனர்களின் தொடக்க காலச் சிற்பங்களின் தோற்றம் கொஞ்சம் பயங்கரமாகவே இருக்கும்.

இன்றும் நாம் பார்க்க வாய்ப்புள்ள வெண்கலச் சிற்பங்கள் இவை.

* * *

அண்மையில் வெளிவந்த செய்தி :

சீனாவில் வசிக்க வெளிநாட்டினருக்கு 'கிரீன்கார்டு' திட்டம் : பெய்ஜிங் பிப். 27 - அமெரிக்காவில் குடியேறும் வெளிநாட்டினருக்கு 'கிரீன்கார்டு' வழங்கும் திட்டம் அமலில் உள்ளது.

அதேபோன்ற திட்டத்தைத் சீனாவும் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

கல்லூரியில் பயிலும் இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் படையில் இருந்து பணியாற்ற வேண்டும். இன்று சீனப் படையில் 25 இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மதங்களின் மேலோங்கிய திருவிழாக்கள், பேரணிகள், சடங்குகள் என்று எவையும் இன்றைய சீனாவில் காணப்படவில்லை. ஆனால் மதங்களைச் சார்ந்து கோயில்கள் உள்ளன. வழிபடுவோர் செல்கின்றனர். தங்கள் மத உணர்வைப் புலப் படுத்திட எவருக்கும் தடையில்லை. சிறுபான்மை இனத்தவர் எனும் முறையில் 'இசுலாமிய' சமூகமும் தன் மதம் சார்ந்த சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் கடைப்பிடிக்க முழு உரிமை தரப் பட்டுள்ளது.

**வணிக உறவு**

ஒரு காலத்தில் - சங்க காலத்தை ஒட்டி - இந்தியா, சீனா, உரோமாபுரி ஆகியவற்றிடையே ஒரு வணிக உறவு - கடல் வணிக உறவு இருந்தது என்பதே வரலாற்றாசிரியர்கள் கருத்து. அதனால் தான் சில தொடர்புகள் அற்றுப் போய்விட்டாலும் 1500 க்குப்பின் போர்ச்சுகீசியர் இந்தியா, சீனாவோடு வணிக உறவைப் புதுப்பித்தனர்.

மக்கள் சதுக்கத்தில் காலார நடந்து சென்றோம். மக்கள் கூட்டம் அதிகம். அதிகமான நெரிசல் இருந்தது. எனவே அதற்கு 'மக்கள் பிதுக்கம்' என்றே பெயர் வைக்கலாம். ஒரே ஓர் எச்சரிக்கையை மட்டும் 'சுன்கோ சாங்' எனக்குத் தந்தார். அதிலும் எனது மெய்ப்பை (சிப்பா) - சிப்பாவின் இருபுறமும் பைகள். அதில் ஓரளவு பணம். இவற்றோடு தான் நான் உலா வந்தேன்.

இங்கு சட்டைப் பையைக் குறிவைத்துத் திருடுபவர்கள் (Pick Pockets) உண்டு. எனவே கவனமாக வாருங்கள் என்று கூறினார். நாங்களும் மக்கள் கூட்டத்தில் நீந்தித் தான் சென்றோம். எனினும் எந்த இடரும் நேரவில்லை.

பெய்சிங்கிலிருந்து டியான்சின் நகரம் 137 கி.மீ. தொலைவில் உள்ளது. இவற்றுக்கு இடையில் காந்தத்தில் இயங்கும் (Magnetic levitation) விரைவு வண்டியை இயக்குவதற்காக முயற்சி நடக்கிறது. சீன மற்றும் செர்மன் நாட்டு வல்லுநர்கள் கூட்டாக இம் முயற்சியில் இறங்கியுள்ளனர். 2008 இல் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் போது இந்த 'ஆயபடநஎ' விரைவு வண்டி பெருமளவு பெய்சிங்கின் போக்கு வரத்துத் தலைவலியைக் குறைத்துவிடும் என்று கருதப்படுகிறது.

**மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை அகற்றுதல்**

பெய்சிங் மாநகராட்சி நிர்வாகம் அதிகமாக நகரை மாசுபடுத்தும் தொழிற்சாலை நிறுவனங்களை அகற்றி நகரத்துக்கு வெளியே கொண்டு செல்லும் திட்டத்தை 1985 இல் தொடங்கியது. இப்படி இடம் மாற்றி அமைப்பதற்கான அதிகாரத்தை வழங்கிடச் சில ஒழுங்கு முறைகளை அரசே கொண்டு வந்து 1995 இல் சட்டமாக்கியது. இந்த எட்டு ஆண்டுகட்குள் 189 தொழிலகங்கள் நகரத்திலிருந்து அகற்றப்பட்டு வெளியே கொண்டு செல்லப் பட்டுள்ளன.

இந்த ஆண்டில் (2002) அதிக அளவில் மாசினை உமிழும் 40 தொழில் நிறுவனங்களை நகரின் நான்காம் சுற்றுச் சாலையிலிருந்து வெளியே கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படிச் செய்வதால், காற்றை மாசுபடுத்துவதில் 5000 டன் அளவிற்குக் குறைத்துவிட முடியும் என்று முடிவு செய்துள்ளார்கள்.

2005 ஆம் ஆண்டுக்குள் மேலும் 150 'மாசு' நிறுவனங்களை வெளியேற்ற ஏற்பாடு செய்துள்ளார்கள். இவற்றை அகற்றுவதால் 42 மில்லியன் சதுர மீட்டர் நிலம் காலி நிலமாகி விடுகிறது. நகரத்துக்குள் இவ்வளவு பெரிய இடம் கிடைப்பது எவ்வளவோ திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வாய்ப்பாக உள்ளது என மாநகராட்சி கருதுகிறது.

2008 இல் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெற உள்ளன. அப்போது சீனாவை மாசுக் கட்டுப்பாடுள்ள நாடாக வைத்திருக்க

வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்காக இப்போதே ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அதற்காக அரசே சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 2007க்குள் அரசு பயன்படுத்தும் நிலக்கரியை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க இருக்கிறார்கள். அதாவது தற்போது பயன்படுத்தும் 26 மில்லியன் டன்னிலிருந்து 19 மில்லியன் டன்னாகக் குறைக்க இருக்கிறார்கள். அப்போது தான் காற்று மாசுபடுவதை மேலும் குறைக்க முடியும் என்று கருதுகிறார்கள்.

சீனநாட்டின் முன்னோக்குத் திட்டங்களை எண்ணிப் பார்ப்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும்.

**கோடைகால அரண்மனை (Summer Palace)**

சம்மர் பேலஸ் எனப்படும் கோடைகால அரண்மனை பெய்சிங்கின் வடமேற்குப் பகுதியில் நகரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. சீனாவில் இன்றும் நிலைபெற்றுள்ள மிகப் பெரிய அரசர் தோட்டம் இது.

716 ஏக்கர் பரப்பளவில் இது அமைந்துள்ளது. இதில் 75% பரப்பளவில் மிகப்பெரிய ஏரி உள்ளது. கூட்ட அரங்குகள், விளையாட்டு அரங்குகள், கோபுரங்கள், விளையாட்டுத் திடல்கள், பாலங்கள் மற்றும் வீடுகள் என 3000 கட்டடங்கள் இதில் உள்ளன. தோட்டக்கலையில் சீனா எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதைச் சொல்வதற்கு இந்த இடம் ஒன்றே போதும்.

நிலப்பிரிவுகள், மனை அமைப்புகள், கற்பனைப் பொலிவுகள் மற்றும் கலைப் பண்பு சொட்டும் கவின் மிகு அமைப்புகட்கு இந்த அரண்மனைத் தோட்டமே சான்றாகும்.

சீனர்களின் தோட்டக்கலையில் ஒப்புவமை இல்லாத பெருஞ் செல்வம் இந்த இடம் என்று எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள்.


அங்குள்ள ஆறாவது சுற்றுச்சாலையில் 40 பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இந்த 40 பாலங்களுக்கும் என்ன பெயர் வைக்கலாம் என்று பொதுமக்களிடம் கருத்துக் கேட்டுள்ளார்கள். மேலும் வல்லுநர்கள் குறிப்பிட்ட சில பெயர்கள் மீதுள்ள குறை நிறைகளையும் எடுத்துச் சொல்லலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாலங்கட்குப் பெயர் வைப்பதில் பொதுமக்களும் பங்கு பெறுகிறார்கள். அதிலும் சீனாவில் – என்பது நமக்கு வியப்பாக இல்லையா?

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் புரூஸ் கன்னோலி (Bruce connolly) என்பவர் சீனநாட்டைப் பெரிதும் புகழ்கின்றார். "It is time that I might well be the first westerner to retire here; If so, then I will be proud to act as the vanguard for other retirees. Places like California and Spain have nothing on China" என்கிறார்.

தான் ஓய்வு பெற்றபின் தங்கி வாழுமிடமாகச் சீனாதான் இருக்கும் என்றும், கலிபோர்னியோவா, ஸ்பெயினோ இந்த வகையில் சீனாவின் முன் நிற்க முடியாது என்றும் கூறுகிறார் அவர்.

சீனாவின் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் வெளிநாட்டினர் சீனாவில் நீண்டகாலம் வசிக்க வகை செய்வது அந்த 'கிரீன்கார்டு'.



சீனாவில் 5 ஆண்டுகள் வரை வசிக்க அனுமதி அளிக்கும் 'கிரீன்கார்டுகள்' முதன் முதலாக 46 பேருக்கு பெய்ஜிங்கில் செவ்வாய்க் கிழமை நடந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அவர்கள்.

1949 இல் சீன மக்கள் குடியரசு உருவானபின், அந்நாட்டின் குடியுரிமைக் கொள்கையில் செய்யப்படும் முக்கியமான சீர்திருத்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலை முடிக்கும் வேளையில் 'நக்கீரன்' இதழில் (4.3.2003) இரா. ஜவஹர் எழுதிய கட்டுரை என் கவனத்தை ஈர்த்தது. அதிலிருந்து சில செய்திகளைச் சொல்லி வைப்பது என் கருத்தினை வலுப்படுத்தும் என்றே கருதுகிறேன்.

"நம்ப முடியாத வேகத்தில் சீனாவின் பொருளாதாரம் பாய்ந்து முன்னேறி வருகிறது. இதன்படி பார்த்தால் இன்னும் 30 ஆண்டுகளில் உலகின் மிகப் பெரும் பொருளாதாரத்தைக் கொண்ட முதல் நாடாக (Largest Economy) சீனா உருவாகி விடும்".

அமெரிக்க வார இதழான "நியூஸ் வீக்" இதழ் சீனாவைப் பற்றிய ஆய்வு நடத்தி வெளியிட்டுள்ள கணிப்பாகும் இது.

இந்தியாவையும் சீனாவையும் ஒப்பிட்டறியச் சில செய்திகள்

| எண் | விவரம் | இந்தியா | சீனா |
|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை | 103 கோடி | 130 கோடி |
| 2. | உள்நாட்டு உற்பத்தி | ரூ.21 இலட்சம் கோடி | ரூ.56 இலட்சம் கோடி |
| 3. | வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகள் | கிராம. 27% நகர. 24% | கிராம. 3% |
| 4. | வேலை தேடிப் பதிவு செய்தோர் | 4 கோடி | 1/2 கோடி |
| 5. | படிக்கும் வயது உள்ளோர்களில் மாணவர் விழுக்காடு | 55% | 73% |
| 6. | வயது வந்தோரில் எழுதப்படிக்கத் தெரிந்தோர் | 57% | 84% |

பொருளாதார வளர்ச்சியிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் இந்தியாவை விட, சீனா மிகவும் முன்னேறியுள்ளது என்பது உண்மை என்கிறார் ஜவஹர்.

இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கும் போது நம்மூர்த் தாள்களில் ஒரு செய்தி வருகின்றது.

'வேகமாக வளர்ந்து வரும் நாடுகள்' எனும் தலைப்பில், சீனா இடம்பெற்றுள்ளது.

பொருளாதாரத் தேக்க நிலையில் உள்ள நாடுகளில் ஜப்பான், பிரேசில், ஜிம்பாப்வே போன்ற நாடுகள் இடம் பெற்றுள்ளன.

'இந்தியா' எதிலும் இடம் பெறவில்லை.

மற்றுமொரு செய்தி - ஊழல் செய்வதில் முன்னிற்கும் நாடுகள் என ஒரு பட்டியல் வந்துள்ளது. உலகளாவிய அந்தப் பட்டியலில் பிலிப்பைன்சு தான் முதலிடம் பெற்றுள்ளது. அடுத்த இடமே இந்தியாவுக்குத் தான். பெருமைக்குரிய 'கிரிக்கெட்' இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டாவது இடம் என்றால் சிறுமைக் குரிய ஊழலிலும் இரண்டாவது இடம் தான். நம்மவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சீனா போன்ற நாடுகளில் 'ஊழல்' மிகக் குறைவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

நான் முன்பே குறிப்பிட்ட படி சீனா பழம்பெரும் நாடு. இந்தியாவைப் போல் தொன்மைச் சிறப்புடையது. தமிழைப்போல் சீனாவும் தொன்மை மொழி.

நமது தமிழ்நாட்டுக்கும் (அதாவது பல்லவர் சோழர் காலத்தில்) சீனாவுக்கும் இடையில் பல தொடர்புகள் இருந்துள்ளன. அதுவும் சங்க காலத்திலேயே தொடர்புகள்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் தூதர் உறவுகளே இருந்துள்ளன.

முதலாம் இராசராசன் காலத்திலும் முதலாம் இராசேந்திரன் காலத்திலும் முதற் குலோத்துங்க சோழன் காலத்திலும் சோழ நாட்டிலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். கி.பி.1000 எனும் காலத்தில் ஒரு தூதர் தமிழகத்திலிருந்து புறப்பட்டுச் சீனா சென்றுவர எவ்வளவு காலமாகி யிருக்கும்? ஆனால் இப்போது, சென்னை யிலிருந்து சிங்கப்பூர் 3.45 மணி நேரம். சிங்கப்பூரிலிருந்து பெய்சிங் 6 மணி நேரம். 9.45 மணிநேரத்தில் இங்கிருந்து சீனா போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால் இராசராசன் காலத் தூதர் சீனா சென்று திரும்பிவர மூன்றாண்டுகள் ஆகியுள்ளன என்பதை எண்ணிப் பாருங்கள்.

எவ்வளவு வசதிகள் - அறிவியல் தந்த அற்புத ஏந்துகள் - ஒரு நொடியில் தொலைநகலில் (Fax) சீன வானொலி நிலையத்துக்கு என் செய்தியை அனுப்பி விடுகிறேன். ஒரே நொடியில் (ISD) பெய்சிங்கில் உள்ள கடிகாசலத்துடன் பேசத் தொடங்குகிறேன் தொலைபேசி வாயிலாக - இன்னும் மின் அஞ்சல், இணைய தளம் ... அப்பப்பா!

இவ்வளவு ஏந்துகள் வந்தபிறகு நாம் வாழ்வில் வெகுவாக உயரவில்லையே ஏன்? இந்தியா இன்னும் பலவற்றை உதறித் தள்ள வேண்டியுள்ளது. இந்தியா பலவற்றிலிருந்து மீண்டு மேலே வரவேண்டியுள்ளது. உண்டா! இல்லையா!

இந்தியாவைப் பற்றி, சீனாவில் நான் கண்ட ஒரு வாசகம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. அது இதுதான்.

"India is a poorest and populist country". "மக்கள் நெருக்கம் மிகுந்த ஏழைநாடு இந்தியா!" என்கிறார்கள். கேட்கப் பிடிக்க வில்லையே!

ஆனால் பார்க்கப் பிடிக்கவில்லை என்று நான் ஓடிப் போய் விடமுடியுமா? எண்ணுகிறேன்! என்ன செய்யலாம் என்று எண்ணுங்கள்.

எனது சீனப் பயணத்தின் முதல் நோக்கம் சீனமொழிப் பயன்பாடு குறித்து ஆய்வதுதான். அதனை ஆய்வு செய்து ஓர் அறிக்கையையும் உருவாக்கினேன். 2003 சனவரி முதல்நாள் திருவனந்தபுரம் ISDL வளாகத்தில் இது குறித்து ஒரு கலந்துரையாடல். அங்குள்ள பேராசிரியர்கள் நாச்சிமுத்து, குளோரியா சுந்தரமதி, ISDL அறக் கட்டளை உறுப்பினர்கள்,

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மாணவ, மாணவியர், ISDL வளாகத்தில் நடைபெறும் வங்கமொழிப் பயிற்சி வகுப்புக்கு வந்தவர்கள் ஆகிய எல்லாரும் கலந்து கொண்டார்கள்.

வ.அய்.சு. தலைமையில் சில செய்திகளைத் தொகுத்து உரைத்த துடன், அனைவரும் எழுப்பிய வினாக்களுக்கு விரிவாக விடையும் சொன்னேன். எல்லாச் செய்திகளும் எடுத்துச் சொல்லப் பட்டன.

அறிக்கை கொடுத்ததுடன் ஒர் ஆய்வாளரின் வேலை முடிந்திருக்க வேண்டும். சீனமொழி ஆய்வுக்குப் பின் தமிழகத்தில் தமிழ் மேம்பாட்டுக்கு என்ன செய்யலாம் என்பது குறித்து வ.அய்.சுவும் நானும் நண்பர் இளவரசு வாயிலாகத் திருச்சியில் ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடத்த விருக்கிறோம். எனவே ஆய்வுத் தொடர்பான பணி தொடர்கிறது.

முதன் முறையாகச் சீனா சென்றதால் பல இடங்களையும் சுற்றுலா நோக்கில் பார்த்து விட்டு, ஒரு பயண நூல்தான் எழுதியிருக்க வேண்டும். ஆனால் என் பயணம் சுற்றுலா நோக்கில் ஏற்பட்டதன்று. எனினும், சில குறிப்பிடத்தக்க இடங்களைப் பார்த்து விட்டு அவற்றின் அடிப்படையில் சுற்றுலாக் குறிப்புகள் சிலவற்றையும் எழுதியுள்ளேன். என்ன இருந்தாலும் தமிழகக் கலைகள், பண்பாடு ஆகியவற்றைப் பேணும் அமைச்சராக ஐந்தாண்டுகள் பணியாற்றியவன் எனும் முறையில் சீன மக்களின் கலைப்பணிகள், ஈடுபாடுகள் மற்றும் அவர்களது வாழ்வில் மேலோங்கி நிற்கும் பண்பாடுகள் ஆகியவற்றைக் குறித்தும் இந்த நூலில் அலசி யிருக்கிறேன்.

சிங்கப்பூர், மலேசியா, பெர்லின், உரோமாபுரி என்றெல்லாம் 13 நாடுகட்கும் நகரங்கட்கும் சென்று வந்த பின் பல செய்திகளை மேடைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஐரோப்பியப் பயணம், மனங்கவர் மலேசியா, ஆகிய நூல்களின் வாயிலாக அந்தந்த நாட்டுச் சிறப்புகளையும், அவற்றில் நாம் இன்றும் பற்றாக் குறையாளர்களாகவே இருக்கிறோம், எனும் ஆதங்கத்தையும் புலப்படுத்தியுள்ளேன்.

அப்போதெல்லாம் சில அமைச்சர்கள், சில அறிஞர்கள், சில பேராசிரியர்கள் பல நண்பர்கள் எல்லாரும் ஒரே குரலில் என் கருத்தினை மறுத்து முழங்கியது உண்டு.

அவர்கள் எண்ணம் இது தான். "சிங்கப்பூரில் இப்படியெல்லாம் இருக்கிறது என்கிறீர்கள். நம் நாட்டில் இவையெல்லாம் இல்லையே! என்கிறீர்கள். என்ன செய்வது? சின்ன நாடுகளில் அவை செயற்பட முடியும். ஆனால் 18க்கு மேற்பட்ட முக்கிய மொழிகளையும், 100 கோடி மக்களையும் கொண்ட இந்தியாவில் இது எப்படி முடியும்?" என்று ஒரேபோடாகப் போட்டு விடுவார்கள்.

இன்னும் சிலர் சொல்வதுண்டு. இவருக்கு இதே வேலை. எப்போது வெளிநாட்டுக்குப் போய் விட்டு வந்தாலும் அங்கே அப்படி இருக்கிறது இங்கே இப்படி இருக்கிறது என்று ஒப்பிட்டுச் சொல்வதே இவர் வேலை யாகப் போய்விட்டது.

100 கோடி மக்களையும், இவர்களுக்குள் எத்தனையோ வேறுபாடு களையும் வைத்துக் கொண்டு நாம் என்ன செய்து விடமுடியும் என்று சலித்துக் கொண்டவர்களும் உண்டு.

எல்லார்க்கும் ஒரே கருத்துத்தான். இந்தியா பெரிய நாடு, 100 கோடிப் பேரை வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்பது தான் அது.

நானும் பொறுத்துக் கொண்டேன். ஆனால் சீனா சென்று வந்தபிறகு இவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்க வேண்டுமென்று தான் இந்த நூலை எழுதினேன். 1911 வரை மன்னர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்தும், தாழ்ந்தும் வந்த சீனா - 1949 இல் முழு உரிமை பெற்ற சீனா - இன்று தன் மக்களை வறுமையில் வாடாமல், பட்டினியில் சாகாமல், கைநாட்டுப் போட்டே வாழ்க்கையைத் தொடர்ந்து விடாமல், உணவுக்கும், கல்விக்கும் முழுமையான உறுதி தந்து அதை முழுவேகத்தில் செயற்படுத்தியும் வருகிறதே! அது எப்படி?

130 கோடி மக்கள் தொகை கொண்ட சீனாவில் எதுவும் முடியுமாம்!

103 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் எதுவும் நடக்காதாம்!

இல்லை; இல்லவே இல்லை; இது போலிவிவாதம், பொருந்தாத விவாதம்.

சிங்கப்பூர் போன்ற சின்ன நாடுகளும் சாதிக்க முடியும், சீனாவும் சாதிக்க முடியும்.

இதற்கான விவாதத்தைத் தக்க சான்றுகளுடன் எடுத்து வைக்க இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்தது. எடுத்துச் சொல்லிவிட்டேன், மரமண்டைகளுக்கும், மக்களை ஏமாற்றும் எத்தர்களுக்கும், படித்த படிப்பையே 'பிறரை ஏமாற்றுவதற்குப் பயன் படுத்தப்படும் தந்திர உத்தி'யாக மாற்றிக் கொண்டுள்ள பசுத்தோல் போர்த்திய புலிகளுக்கும் கொஞ்சமாவது உறைக்க வேண்டும் என்பதற்காகத் தான் எழுதினேன்.

ஆளுகின்றவர்கள் நேர்மையுடன் சாட்டையைச் சுழற்றினால் நம் நாட்டை முன்னேற்றி விட முடியும். சம்பளம் வாங்கும் ஊழியர்கள், அந்தச் சம்பளத்துக்கான வேலையைப் பார்த்தாலே போதும். வேலை வாங்கிய தற்குத்தான் சம்பளம், வேலை பார்ப்பதற்குக் 'கிம்பளம்' வேண்டும் என்று எண்ணாமலிருந்தால் போதும்.

பொதுமக்களும் நம்மால் எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்றும். சமுதாயப் பொறுப்புணர்ச்சியுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்றும் எண்ணிச் செயற்படத் தொடங்கினால் போதும்!

அதை விட்டு விட்டு, 'சின்ன நாடு', 'பெரிய நாடு' என்று வெட்டி விவாதங்களைப் பேசிக் கொண்டே இருந்தால் எத்தனை ஆயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டினாலும், எத்தனை சீர்திருத்தங்களை மேற் கொண்டாலும், அனைத்தும் கடலில் கரைத்த பெருங்காயமாக, சாக்கடை யில் கொட்டப்பட்ட அமிழ்தமாக வீணாகத்தான் போகும்.

வீணாவோமா! அல்லது நாட்டைத் தூக்கி நிறுத்தும் ஆண்மை மிக்க ஆளாவோமா?

கவலைகளையும் தன்னலப் போக்குகளையும் நகைகளையும் சுமக்கும் பெண்ணாவாமோ?

அல்லது இவற்றைத் தூக்கி எறிந்து, 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று சூளுரைத்து எளிய, துணிந்த, நேரிய வாழ்வில் நிமிர்ந்து நிற்கும் பெண்ணாவாமோ?

எண்ணுங்கள்! இவற்றை எண்ணிப்பார்க்க இந்நூல் பயன் படுமானால், ஒரு சிலராவது மனக்கிளர்ச்சியும் எழுச்சியும் பெறுவார் களானால் அதுவே என் பயணத்தின் பயன், இந்த நூலுக்கும் சிறப்பு என்று கருதுகிறேன்.

**நன்றி**

முதலில், திருவனந்தபுரத்தில் சிறப்பாக இயங்கி வரும் அனைத்துலக திராவிட மொழியியிற் பள்ளி (ISDL) யின் மதிப்புறு இயக்குநர் முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களுக்குத் தான் நன்றி தெரிவிக்க வேண்டும். முதலில் நான் இசுரேல் சென்று ஹீப்ரூ மொழியை ஆய்வு செய்ய வேண்டும் என்று பணித்தவரும், அங்குள்ள சூழ்நிலைகளை ஒட்டி, அந்தத் திட்டத்தை மாற்றி, நான் சீனா செல்ல வேண்டும் என்று பணித்து அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவரும் அவர் தாம். இத்திட்டத்தின் மூலவரான அவர்க்கு என் நன்றி.

அடுத்து, சீன வானொலியில் பணியாற்றும் நண்பர் முனைவர் ந. கடிகாசலத்துக்கு என் நன்றி. நான் தங்கவும், தமிழக உணவை உண்ணவும் ஏற்பாடு செய்தவர் அவர். எந்த இடரும் இன்றி என் பயணம் முடிய உதவியவர் அவர்.

என்னுடன் தொடர்ந்து பயணம் செய்து மொழி பெயர்ப்பாளராகவும் இயங்கிய திரு. சுன் கோ சியாங், மற்றும் மிகுந்த அன்பு காட்டி உதவிய சீன வானொலியின் தமிழ்ப்பிரிவுத் தலைவர் திருவாட்டி கலையரசி ஆகியோர்க்கும் என் நன்றி உரியது.

மற்றும், சீனப் பயணத்தில் மகிழுந்தில் அழைத்துச் சென்றவர்கள், விருந்து தந்தவர்கள் ஆகிய அனைவர்க்கும் நன்றி உரியது.

தமிழகத்தில் என் சீனப்பயண நோக்கம் குறித்த அறிக்கையை ஆங்கிலத்தில் வடித்தளித்த முனைவர் சண்முகையா நண்பர் மதிவாணன் ஆகியோருக்கும் நன்றி உரியது.

ஆங்கில அறிக்கையைச் செம்மை செய்து அருமையாக உருவாக்கிக் கொடுத்தவரும், சீன நாட்டுக்கு நான் செல்வதற்கான தொடர்பு களை உடனுக்குடன் ஏற்படுத்திக் கொடுத்தவருமான, தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இயக்குநர் முனைவர் பொன்னவைக்கோவுக்கு என் நன்றியைப் புலப்படுத்த விரும்புகிறேன்.

இன்னும் யார்யாரெல்லாம் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் உதவி செய்தார்களோ அவர்கள் அனைவருக்கும் நன்றி.

ooo

# பார்வை நூல்கள்

உலகில் தலை சிறந்த நூலகங்களும் விவரங்களும் - லேனா தமிழ்வாணன் (ப.ஆ). 1993

பயணக் கதை - ஆசியாக்கண்டம் - மணியன்.

சிவப்பு சீனா - கே. வேங்கடராமன், தினமலர் செய்தி ஆசிரியர் (கட்டுரை)

சீன விந்தைக் கதைகள் - ந. கடிகாசலம்

சீன நீதிக் கதைகள் - ந. கடிகாசலம்

சீன நவதந்திரக் கதைகள் - ந. கடிகாசலம்

சீன - ஜப்பானிய யாளியின் ஓவியக் கலைத் தத்துவம் - லாரன்ஸ் பன்யன் - அ. பெருமாள் (தமிழில்)

சீனம் தரும் சிந்தனைகள் - ந. சஞ்சீவி

சீனம் சிவப்பானது ஏன்? - வலம்புரி ஜான்

சீனாவின் வரலாறு - வெ. சாமிநாத சர்மா

Encyclopaedia Brittanica -

## முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

15.9.1938இல் சிவகங்கை மாவட்டத்தின்
சாத்தனூரில் பிறந்த இவர்,
திருச்சி தூய வளனார் கல்லூரி,
சென்னை பச்சையப்பன் கல்லூரி
ஆகியவற்றில் உயர்கல்வி பயின்றவர்.
மதுரை யாதவர் கல்லூரியில் பேராசிரியராகவும்,
கல்லூரி முதல்வராகவும் 20 ஆண்டுக் காலம்
பணியாற்றியவர். தனித்தமிழ் இயக்கத்தில்
மிகுந்த ஈடுபாடு கொண்டவர்;
பாவாணரோடு நேரடித் தொடர்புடையவர்;
"பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளை"
ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.
20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்;
"மனமாற்றம், கண்ணீர், அந்தமானைப் பாருங்கள்"
ஆகியவை பல்கலைக் கழகங்களில்
பாடமாக இடம் பெற்றவை.
தந்தை பெரியாரின் மீது ஈடுபாடு கொண்ட
பகுத்தறிவுக் கொள்கையாளர். எனினும்
அறநிலையத் துறை அமைச்சராக இருந்து
முத்திரை பதித்தவர்.
நாடறிந்த நல்ல பேச்சாளர்.
அமெரிக்கா, இங்கிலாந்து, செருமனி, பிரான்சு, சீனா,
சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, இலங்கை எனப்
பதினான்கு நாடுகளில் நாவால் உலா வந்தவர்.
அறிவு, கைகாட்டி எனும்
தனித்தமிழ் இதழ்களை நடத்தியவர்.
கலைஞர் தந்த வாய்ப்புகளின்படி,
தமிழக சட்டப் பேரவைத் தலைவராகவும்,
தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சராகவும்
பணியாற்றியவர். கருத்து வேறுபட்டு விலகிய பின்,
இன்று புரட்சித் தலைவியின் இயக்கத்தில்
ஒரு தொண்டனாக விளங்குபவர்.
மொழி, இனம் சார்ந்த பணிகளைச் செய்வதில்
இன்றும் தொய்வின்றி இயங்குபவர்.